18 போஹமாஸால படுகொலை






# உதயன்

சுடர்: 29 கதிர்: 273 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 10, செவ்வாய் 26.08.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=


26 AUG 2014

தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04



## திறக்கப்பட்டது மிதக்கும் சந்தை

கொழும்பு, ஓக.26
'நகர அபிவிருத்தி அதிகார சபையால்நிர்மாணிக்கப்பட்டுள்ளகொழும்பு, புறக்கோட்டை மிதக்கும் வர்த்தக சந்தை பொதுமக்கள் பாவனைக்காக நேற்றுக் கையளிக்கப்பட்டது.
இந்த விழாவில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பிரதம அதிதியாகவும். நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டு மிதக்கும் சந்தையை உத்தியோக பூர்வமாக பொதுமக்களின் பாவனைக்கு கையளித்தனர்.
கொழும்பு நகரை அழகுபடுத்தும் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் மற்றும் பஸ் தரிப்பு நிலையம்

22 ஆம் பக்கம் பார்க்க

# தமிழ் கூட்டமைப்புக்கு இராஜதந்திர வெற்றி

## மோடி சந்திப்புக் குறித்து தயான் ஜயதிலக இலங்கைக்கு பெரும் சவால் என்றும் தெரிவிப்பு



கொழும்பு, ஓக.26
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்து மோடி அரசு பேச்சு நடத்தியுள்ளமையானது கூட்டமைப்பினருக்குக் கிடைத்துள்ள இராஜதந்திர வெற்றியாகும் என்று அரசியல் விமர்சகரும் முன்னாள் சிரேஷ்ட இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.
அத்துடன், சீனப் பீதியால் இலங்கையை மோடி அழுத்தமாட்டார் என அரசு போட்ட கணக்கும் தற்போது பிழைத்துவிட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்தியப் பயணம் மற்றும் அந்தநாட்டு உயர் மட்ட பிரமுகர்களுடனான சந்திப்பு தொடர்பில் நேற்றுக் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
தம்மை விட்டால் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதற்கு எவரும் இல்லை என்ற நினைப்பிலேயே அரசு இதுவரை இருந்து வந்தது. அத்துடன், சீனாவுடனான போட்டி காரணமாக '13' விவகாரத்தை பா.ஜ.க. அரசு கையிலெடுக்காது எனவும் அரசு எண்ணியது. ஆனால், தற்போது நிலைமை மாறியுள்ளது. அரசு போட்ட கணக்கு பிழைத்துள்ளது. சுருக்கமாகச் சொல்லப் போனால், இலங்கைக்கு இது 'ஐஸ் வாளி' சவாலாகவும் கூட்டமைப்புக்கு

22 ஆம் பக்கம் பார்க்க

## அடைக்கலநாதனும் பறந்தார் தமிழகத்துக்கு

கொழும்பு, ஓக.26
இந்தியத் தலைநகர் புதுடில்லியில் இருந்து நேற்றுமுன்தினம் நாடு திரும்பியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று தமிழகம் நோக்கிப் பயணமானார்.
கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் புதுடில்லியில் இருந்து தமிழகத்துக்குச் சென்றிருந்தனர். ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், பொன்.செல்வராஜா நேற்றுமுன்தினம் இலங்கை திரும்பியிருந்தனர்.
இந்தநிலையில் செல்வம் அடைக்கலநாதன் தமிழகம் நோக்கி நேற்றுப் பயணமாகியுள்ளார்.
இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்,
"நுழைவிசைவு நடைமுறை

22 ஆம் பக்கம் பார்க்க

## வடக்குக்கு 70 புதிய பஸ்கள்; இதுவரை 7 வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஓக.26
நாடளாவிய ரீதியில் போக்குவரத்து சேவையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தில் வடக்கு மாகாணத்துக்கு 70 பஸ்கள் வழங்கப்படவுள்ளன. அவற்றில் 7 பஸ்கள் தற்போது வழங்கப்பட்டுள்ளன என்றும், மிகுதி 63 பஸ்களும் இந்த ஆண்டு இறுதிக்குள் வழங்கப்பட்டு விடும் என்றும் தெரிவித்துள்ளார் இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் எம்.அஸ்கர்.
போக்குவரத்துச் சேவையை மேம்படுத்தும் நோக்கில் நாடா

22 ஆம் பக்கம் பார்க்க

## நிதி அமைச்சின் செயலாளர் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், ஓக. 26
வடக்கு மாகாணத்துக்குரிய அடுத்த ஆண்டுக்குரிய வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீடு தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நிதி அமைச்சின் செயலாளர் டி.பி.ஜயசுந்தர யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கின் அபிவிருத்திக்கு கொழும்பு அரசால் ஒதுக்கப்படும் நிதி போதாதென்று, வடக்கு மாகாண சபை தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டிவரும் நிலையிலேயே அவரது பயணம் ஏற்பாடாகியுள்ளது.
நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் வடக்கு முதலமைச்ச

22 ஆம் பக்கம் பார்க்க

## குழாய் வழி தண்ணீரிலேயே பக்தர்களுக்கு இம்முறை தீர்த்தம்

நல்லூர் தீர்த்தோற்சவத்தில்

யாழ்ப்பாணம், ஓக 26
நேற்று சிறப்பாக நடந்து முடிந்த நல்லூர் கந்தன் ஆலய தீர்த்தோற்சவத்தில் கேணியைச் சுற்றியுள்ள மண்டபத் தூண்களில் பொருத்தப்பட்டுள்ள குழாய்கள் மூலம் ஆனந்தமாகத் தீர்த்தமாடினர் பக்தர்கள்.
கேணிக்குள் எவரும் இறங்கி நீராடுவதற்கு அனுமதிக்கப்படாத நிலையில், இரண்டு தண்ணீர்க்குழாய்கள்

22 ஆம் பக்கம் பார்க்க

## 'புறநெகும' வேலைத் திட்டத்தில் வடக்குக்கு 310 மில்லியன் ரூபா

யாழ்ப்பாணம், ஓக. 26
வடக்கு மாகாணத்திலுள்ள 34 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் 'புறநெகும' வேலைத் திட்டத்தின் கீழ் 310 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த நிதியூடாக உள்ளூராட்சி மன்றங்களின் வீதிகள் புனரமைப்பு, சந்தைக் கட்டடங்கள் புனரமைப்பு உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றத்தைப் பலப்படுத்தும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.
2010ஆம் ஆண்டு உலக வங்கியின் நிதியுதவியுடன், வடக்கில் நெல்சிப் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. குறித்த வேலைத் திட்டம் அடுத்த மாதத்துடன் நிறைவடையவுள்ளது. அதையடுத்து 'புறநெகும' வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. 'புறநெகும' திட்டம் அடுத்த மாதம் ஆரம்பமாகி சுமார் ஒரு வருடத்துக்கு நடைபெறவுள்ளது.
யாழ்.மாவட்டத்திலுள்ள 17

22 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்தில் கஞ்சா அமோக விற்பனை; விசாரணைக்கு நீதிமன்று உத்தரவு


யாழ்ப்பாணம், ஓக.26
யாழ்ப்பாணத்தில் கஞ்சா விற்பனை செய்யப்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து அது தொடர்பில் உரிய விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது ஊர்காவற்றுறை நீதிமன்று.
வேலணை சாட்டிக் கடற்கரையில் சட்டவிரோதமாக கஞ்சா வைத்திருந்தவர்கள் தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
கொழும்பைச் சேர்ந்த 6 பேர் யாழ்ப்பாணத்துக்கு வந்து வேலணையில் உள்ள சாட்டிக் கடற்கரையில் நேற்று முன்தினம் மது போதையில் நின்று குழப்பத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களைப் பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியதுடன் அவர்கள் பயணித் திருந்த வாகனத்தையும் சோதனையிட்டனர்.
அப்போது வாகனத்தில் அவர்களது உடைமைகளில் 6 பைக்கற்றுக்களாக 24 கிராம் கஞ்சா கைப்பற்றப் பட்டது. அதனை

22 ஆம் பக்கம் பார்க்க

# வடக்குக்கும் கிழக்குக்கும் காணி அதிகாரம் இல்லை

## உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, ஓக.26



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குக் காணி அதிகாரங்கள் வழங்கப்பட மாட்டாது என்று என்று தெரிவித்துள்ளார் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க. வடக்குக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டால், அதன்மூலம் மீண்டும் ஆயுதப் போராட்டம் வெடிக்கும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பசறையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"வடக்கு மாகாண சபை கோருவதைப் போன்று காணி அதிகாரங்கள் வழங்கடப் போவதில்லை. அவை வழங்கப்பட்டால் மீண்டும் ஆயுதப் போராட்டமொன்று வெடிக்கும் வாய்ப்பு ஏற்படும். குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணையக் கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் ஐரோப்பாவில் முழு அளவில் இயங்கி வருகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையில் மீள ஒருங்கிணைந்தால் அது யாழ்ப்பாண மக்களுக்கே அதிக பாதிப்பை ஏற்படுத்தும். பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்க இடமளிக்க முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் வடக்கு மாகாண சபைக்கும் தேவையானதை செய்ய முடியாது"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)



இடையூறு, துன்பம் மற்றும் கண்ணீரினால் முன்னேற்றம் கண்ட ஜனநாயகக் கட்சியை வெற்றிகொள்ளச் செய்வோம் எனும் தொனிப்பொருளில் அக்கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத்தளபதியுமான சரத் பொன்சேகாவின் தலைமையில், கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நேற்று போராட்டம் நடத்தப்பட்டது. (ற)

## 28ஆம் திகதி நாடு திரும்புவார் ஜனாதிபதி



கொழும்பு, ஓக.26

மருத்துவ சிகிச்சைக்காக கடந்த சனிக்கிழமை திடீரென அமெரிக்காவுக்கு புறப்பட்டுச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 28 ஆம் திகதி நாடு திரும்ப உள்ளார் என்று ஜனாதிபதி செயலக தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க மருத்துவர்கள் பரிந்துரைத்த மருந்துகளுக்கு மேலதிகமாக ஜனாதிபதியின் தனிப்பட்ட மருத்துவர் எலியந்த வைட் வழங்கிய மருந்துகள் காரணமாக ஏற்பட்ட உடல்நலக் குறைவு குறித்து பரிசோதனை செய்வதற்காக ஜனாதிபதி அமெரிக்கா சென்றுள்ளார் என்று அந்தத் தகவல்கள் குறிப்பிட்டன.

எதிர்வரும் 6 ஆம் 7 ஆம் திகதிகளில் ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபே இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள உள்ளதுடன் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் சீன ஜனாதிபதி ஷிங் ஜிங் பிங் இலங்கைக்கு வரவுள்ளார்.

இவர்களின் பயணங்கள் இலங்கைக்கு முக்கியமானது என்பதால், அதற்கு தயாராகும் வகையில் ஜனாதிபதி துரிதமாக நாடு திரும்புகின்றார் என்று கூறப்படுகிறது. (ற)

# இலங்கைக்கு தொடர்ச்சியாக பாக். ஒத்துழைப்பு வழங்குமாம்

## மேற்குலகத்தின் நடவடிக்கை ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் கூறுகின்றது

கொழும்பு, ஓக.26

இலங்கைக்கு தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளது பாகிஸ்தான். நெருக்கடியான தருணங்களில் இலங்கைக்கு பாகிஸ்தான் பக்க பலமாக செயற்பட்டுள்ளது என்று இலங்கைக்கான பாகிஸ்தான் முன்னாள் தூதுவர் மொஹமட் அயுப் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"மேற்குலக நாடுகளால் பிரயோகிக்கப்பட்டு வரும் அழுத்தங்களை சமாளிக்க பாகிஸ்தான் இலங்கைக்கு பூரண ஆதரவை வழங்கும். இலங்கை சரியான பாதையில் பயணம் செய்கின்றது. சிறந்த முறையில் நல்லிணக்க முனைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் உள்விவகாரப் பிரச்சினைகளில் வேறு தரப்பினர் தலையீடு செய்வதனை ஏற்றுக்கொள்ள முடியாது. ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் மேற்குலக நாடுகளின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க மனித உரிமை விவகாரங்களை இந்த தரப்பினர் பயன்படுத்தி வருகின்றனர்.

பாகிஸ்தானுடன் இலங்கை பேணி வரும் உறவுகள் தொடர்பில் எவ்வித முரண்பாடும் கிடையாது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஷிராணியின் வங்கிக் கணக்கு தரவுகளைத் தேட அனுமதி

## நீதிமன்றம் வழங்கியது

கொழும்பு, ஓக.25

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் வங்கிக் கணக்குகளில் தேவையான தகவல்களை தேடிக்கொள்வதற்கு கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலப்பிட்டிய நேற்று அனுமதியளித்தார்.

இந்த கணினி நிபுணர் குழு, தேசிய அபிவிருத்தி வங்கிக்கு செப்ரெம்பர் 3,4 மற்றும் 5 ஆம் திகதிகளில் பிற்பகல் 2.30 மணிமுதல் 6 மணிவரை அங்கு செல்லும். அதற்கு அரச சட்டத்தரணிகள் எதிர்ப்புக் காட்டவில்லை.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தன்னுடைய சொத்துக்களை வெளியிடவில்லை, தேசிய அபிவிருத்தி வங்கியிலுள்ள அவருடைய மூன்று கணக்குகளும் அதில் உள்ளடங்கும் என்று இலஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருந்தது. (ற)

# பாலியல் தொழிலை இங்கு சட்டமாக்குமாறு அழுத்தம்

## கவலை வெளியிடுகிறார் மகளிர் விவகார அமைச்சர்

கொழும்பு, ஓக.26

பாலியல் தொழிலை சட்டமாக்குமாறு வெளிநாடுகளின் நிதியில் இயங்கும் சர்வதேச அமைப்புகள் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன என்று சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

குருணாகல் மாவட்டம் தம்பதெனி, நாராம்பல பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"பெண்கள் பற்றி பேசும் போது சிறிய பிரச்சினை ஒன்று உள்ளது. வெளிநாடுகளில் இருந்து நிதி கிடைக்கும் சர்வதேச தொண்டர் அமைப்புகளில் பணியாற்றும் சிறிய தரப்பு பெண்கள் உள்ளனர்.

இவர்கள் பெண்களின் உரிமைகளை பற்றி பேசுகின்றனர். ஆனால் பாலியல் தொழிலை சட்டமாக்குமாறு கோருகின்றனர். அதேவேளை உங்கள் நாட்டில் பெண்கள் விவகாரங்களைக் கையாள பெண்கள் இல்லையா என வெளிநாட்டுத் தூதரங்கள் கேட்கின்றன."- என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஊவா மாகாணத்தில் அரசு சிறந்த பாடத்தைக் கற்கும்

## ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக ஆரூடம்

கொழும்பு, ஓக.26

ஊவா மாகாணத்திற்கு வறுமையை மாத்திரமே உரிமையாக்கிய அரசு, தற்போது கொள்ளையிட்ட பணத்தில் இலவசங்களை வழங்கி வருகின்றது என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

"அரசு சம்பாதிக்கும் பணத்தை மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு பதிலாக ஆசியாவிலேயே மிகப் பெரிய அமைச்சரவையை உருவாக்கி, அமைச்சர்களையும் அவர்களின் சகாக்களையும் பராமரிக்க பயன்படுத்தி வருகிறது.

மிகப் பெரிய நாடான இந்தியா சிறிய அமைச்சரவையை ஏற்படுத்தி முன்னுதாரணத்தை காண்பிக்கும் போது, கடந்த வாரம் இரண்டு அமைச்சர்களை நியமித்ததன் மூலம் அரசு உலகில் மிகப் பெரிய அமைச்சரவையை உருவாக்கியுள்ளது.

அரசு இம்முறை ஊவா மாகாண சபைத் தேர்தலில் சிறந்த பாடத்தை கற்றுக் கொள்ளும். அதன் காரணமாகவே ஊவா மாகாணத்தின் ஆளும் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர் சஷீந்திர ராஜபக்ஷ, நேருக்கு நேரான விவாதங்களுக்கு பயப்படுகிறார். அவர் ஊவா மாகாண மக்களுக்கு எதனையும் செய்யவில்லை என்பதே அதற்குக் காரணம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)







கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தின் கீழான விதை நெல்லுக்கான அறுவடை வேகமாக நடைபெற்று வருகின்றது. கடந்த சில நாள்களாக நிலவும் மழையுடன் கூடிய காலநிலையை அடுத்து விதை நெல் அறுவடை செய்வதில் விவசாயிகள் இடர்களை எதிர்கொண்டிருந்தனர். நேற்று தெளிவான வானிலை காணப்பட்டதை அடுத்து விவசாயிகள் அறுவடையில் வேகமாக ஈடுபட்டுள்ளனர். 350 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டிருந்த விதை நெல் உற்பத்தியில் மழை காரணமாக பெரும்பகுதி அழிவடைந்துள்ளது என்றும் விவசாயிகள் கூறுகின்றனர். (ந-18)

பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 10 செவ்வாய்க்கிழமை (26.08.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 273

# புலம்பெயர் தமிழரின் நகர்வுகளை முறியடிக்க இலங்கை அரசு திட்டம்

## அமெரிக்காவில் பரப்புரைக்கு மத்திய வங்கி தீர்மானம்

கொழும்பு, ஓகஸ்ட் 26

**அமெரிக்காவிலுள்ள புலம்பெயர்ந்த தமிழர்கள் இலங்கை அரசுக்கு எதிராக தீவிர பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ள இலங்கை மத்திய வங்கி, இதனை எதிர்கொள்வதற்கு இலங்கை நிலவரம் குறித்த சரியான தகவல்களை அமெரிக்காவில் வழங்க வேண்டியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளது.**

**அமெரிக்காவில் பெருமளவு பணத்தைச் செலவழித்து, இலங்கை குறித்து நல்லவிதத்தில் பரப்புரை செய்வதற்காக மத்திய வங்கி அந்த நாட்டின் பரப்புரை நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளதாக வெளியான தகவல்களை தொடர்ந்தே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.**

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

அமெரிக்கத் தலைவர்களுக்கும், முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள் உட்பட இலங்கை குறித்து ஆர்வம் கொண்டுள்ள அனைவருக்கும் இலங்கையின் அரசியல் - பொருளாதார நிலைமைகள் குறித்து துல்லியமான தகவல்களை வழங்குவதற்கான பரப்புரை ஒன்றை ஆரம்பிக்க வங்கியின் நாணயச் சபை தீர்மானித்தது.

அமெரிக்காவிலுள்ள புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒரு பகுதியினர் மேற்கொண்டுள்ள தீவிர பரப்புரையை எதிர்கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சு முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உதவ மத்திய வங்கி தீர்மானித்தது.

உலகநாடுகளும் வேறு பல சர்வதேச அமைப்புகளும் அமெரிக்காவில் இவ்வாறான பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

போர் முடிவிற்கு கொண்டு

(22ஆம் பக்கம் பார்க்க)

## போத்தலில் அடைத்த குடிதண்ணீர் மக்களுக்கு வழங்கியது இராணுவம்

### மட்டக்களப்பில் வறட்சி நிலையை அடுத்து

களுவாஞ்சிகுடி, ஓக.26

வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேசத்துக்குட்பட்ட கண்ணபுரம் கிழக்குக் கிராம மக்களுக்கு இலங்கை இராணுவத்தினரால் போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் நேற்றுத் திங்கள் கிழமை விநியோகிக்கப்பட்டது.

231 ஆவது இராணுவப் படைப் பிரிவின் பிரிகேடியர் பாலித்த பெர்ணாந்துவின் ஆலோசனையின் பேரில் பாலையடிவட்டை இராணுவத்தினரால் இவை வழங்கப்பட்டன.

கண்ணபுரம் கிழக்குக் கிராம சேவை உத்தியோகத்தர் பி.சுகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேஜர் அல்விஸ், லெப்டினன்ட் சந்தண மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கண்ணபுரம் கிழக்குக் கிராமத்தைச் சேர்ந்த 223 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்துக்கு 10 லீற்றர் வீதம் போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கப்பட்டதாக பாலையடி வட்டை இராணுவ முகாம்

(22ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கில் வீதியை புனரமைக்குமாறு ஆர்ப்பாட்டம்

### பிரதேச சபை அலுவலகம் முன்பாக

வடமராட்சி, ஓக. 26

நீண்ட காலமாகப் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ள வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் குடத்தனை - பொற்பதி வீதியைத் திருத்தி அமைத்துத் தருமாறு கோரி குடத்தனை வடக்கு, பொற்பதி கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பேரணியாகச் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு சென்று பருத்தித்துறை பிரதேச சபை அலுவலக நுழைவாயிலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த கிராமத்தில் இருந்து நேற்று திங்கள் கிழமை முற்பகல் 11 மணியளவில் பஸ்ஸில் வந்திறங்கிய நூற்றுக்கணக்கானோர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை பிரதான சந்தியில் இருந்து பருத்

(22ஆம் பக்கம் பார்க்க)



தேசிய வீரன் பண்டார வன்னியனின் நினைவு தின நிகழ்வு நேற்று வவுனியாவில் இடம்பெற்றது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பண்டார வன்னியனின் சிலைக்கு மாலை அணிவித்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். (த-421)

## பஸ் மோதியதில் இளைஞர் காயம்

வலி.வடக்கு, ஓக.26

யாழ்ப்பாணத்தில் இருந்து தியத்தலாவை நோக்கிச் சென்ற பஸ் மோதியதில் இளைஞர் ஒருவர் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் அரியாலை மாம்பழம் சந்தயில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில் காயமடைந்தவர் புங்குடுதீவைச் சேர்ந்த எஸ்.யதுசன் (வயது-26) என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்து தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (த-86)

## பொலிஸ் அதிகாரத்தை கோரக்கூடாது தமிழர்

### காணாமற் போனோர் ஆணைக்குழுவின் ஆலோசகர் அவ்டாஸ் கௌஷல் கூறுகிறார்

புதுடில்லி, ஓக.26



இலங்கையின் இறைமையை இந்தியா மதிக்க வேண்டும் என்றும், தமிழர்கள் பொலிஸ் அதிகாரத்தைக் கோரக் கூடாதெனவும், காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்டுள்ள குழுவில் இடம் பெற்றுள்ள இந்திய மனித உரிமைப் பணியாளர் அவ்டாஸ் கௌஷல் தெரிவித்துள்ளார்.

நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஊடகத்துக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"இந்தியா இலங்கையுடன் பேச்சு நடத்தலாம். ஆலோசனை வழங்கலாம். ஆனால் இலங்கை எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று இந்தியா உத்தரவிடமுடியாது. இரு நாடுகளும் பரஸ்பரம் மற்றையவர்களின் இறைமையை மதித்துச் செயற்படவேண்டும்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## அவசரமாக கூடுகிறது டெசோ

### இன்று சென்னையில்

கொழும்பு, ஓக. 26

தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி தலைமையில் தமிழ் ஈழம் ஆதரவாளர் அமைப்பின் (டெசோ) அவசரக் கூட்டம் இன்று காலை 10.30 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இது குறித்து தி.மு.க. தலைமை வெளியிட்டுள்ள அறிக்கையில், டெசோ அமைப்பின் அவசரக்

(22ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி அமர்வில் சர்வதேச நிபுணர்கள்

கொழும்பு, ஓக. 26

காணாமல் போனோர் குறித்தும் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாகவும் விசாரணைகளை முன்னெடுக்கும் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச நிபுணர்கள் குழுவினர் அடுத்த மாதம் 19,20,21, 22 ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ள அமர்வில் பங்கேற்கவுள்ளனர் என்று அறியமுடிகின்றது.

உள்ளக விசாரணையை நடத் தும் ஆணைக்குழுவுடன் இணைந்தே இவர்கள் அங்கு செல்லவுள்ளனர் என்றும், இரு தரப்பினருக்குமிடையிலான ஆரம்பகட்டச் சந்திப்பு விரைவில் நடைபெறவுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றுள்ள இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளின் வருகை இடம்பெற்றதும் மேற்படி சந்திப்புக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அமர்வுகளில் பங்கேற்கவேண்டும் என்ற கட்டாயம் சர்வதேச நிபுணர்கள் குழுவுக்குக் கிடையாது. எனினும், ஆரம்பகட்டச் செயற்பாடு என்பதாலேயே அவர்கள் கிளிநொச்சிக்குச் சென்று நிலைமையை ஆராயவுள்ளனர் எனத் தெரிகிறது.

அத்துடன், ஆலோசனைப் பொறிமுறை வகுப்புக்குக் கிளிநொச்சி அமர்வு உதவியாக

(22ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் கூட்டமைப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டம் பிசுபிசுப்பு

முல்லைத்தீவு, ஓக.26

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனுக்கு எதிராக முல்லைத் தீவில் நேற்று மேற்கொள்ளப்பட்ட போராட்டம் பிசுபிசுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவத்தினரிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டு, அதன் பின்னர் அவர்கள் தொடர்பிலான தகவல் எதுவும் தெரியாத உறவுகள் தொடர்பாக வவுனியா உயர் நீதிமன்றத்தில் கடந்த வருடம் ஆள் கொணர்வு மனுத் தாக்கல் செய்திருந்தனர்

12 பேர் வரையில் இவ்வாறு ஆள்கொணர்வு மனுவைத் தாக்கல் செய்திருந்தனர். வவுனியா உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்ற இந்த வழக்கு கடந்த வருட இறுதியில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மாற்றப்பட்டது. இதன் பின்னர் முல்லைத்தீவில் வழக்கு இடம் பெற்று வருகின்றது. கடந்த தவணையில் வழக்கு விசா

(22ஆம் பக்கம் பார்க்க)

# ஆலயங்களில் இடம்பெறும் திருட்டுக்களுக்கு பொதுமக்களின் செயற்பாடே காரணம்

வலி.தென்மேற்கு. ஓக.26

ஆலயங்களில் இடம்பெறும் திருட்டுக்கள் இடம்பெறுவதற்கு பொதுமக்களின் செயற்பாடுகளே காரணமாக அமைந்துள்ளன.

இவ்வாறு வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சிவகுமார் ஆலயங்களில் இடம்பெற்று வரும் திருட்டுக்களைத் தடுப்பது தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு பேசும் போது கூறினார்.

மானிப்பாய் பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி சந்தன சிறிலால் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் மானிப்பாய் பொலிஸ் பிரிவிலுள்ள ஆலயங்களின் உரிமையாளர்களும் தர்மகர்த்தா சபை உறுப்பினர்களும், அந்தணர்களும் கலந்து கொண்டனர். இதன்போது தவிசாளர் மேலும் கூறியதாவது:

தெய்வங்கள் தங்க நகைகளை வழங்குமாறு கோரவில்லை. மக்கள் தான் நகைகளை வழங்கி வருகின்றனர். பொது மக்களின் செயற்பாடுகளும் ஆலயங்களில் திருட்டுக்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளன. ஆலயங்களில் உடைக்கப்பட்டு திருட்டுக்கள் இடம்பெறுவதால் ஆலயங்களின் கலாசாரமும் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருகின்றது.

திருட்டுக்களைத் தடுக்க வேண்டுமானால் ஆலயங்களிலும் வீதிகளிலும் இரவு நேரங்களில் தேவையற்ற வகையில் கூட்டம் கூட்டமாக நிற்பவர்களை பொலிஸார் கைது செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் மக்களும் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினால் பாதிப்பு ஏற்படும் என்று மக்கள் அஞ்சுகின்றனர். பொலிஸாரால் மட்டும் திருட்டுக்களைத் தடுத்து நிறுத்த முடியாது. பொது மக்களும் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

குறைந்த வருமானமுள்ள ஆலயங்களும் இருப்பதால் சகல ஆலயங்களிலும் காவலாளிகளை நிறுத்த முடியாது. சில கிராமங்களில் மக்கள் விழிப்பாக இருப்பதால் அங்கு திருட்டுக்கள் இடம்பெறுவதில்லை. இது தொடர்பாக விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.

இரவு பகலாக 24 மணி நேரமும் பாதுகாப்புப் படையினர் சைக்கிள்களில் ரோந்து செல்வதாலும் திருட்டுக்கள் குறைந்து வருகின்றன. இராணுவத்தைக் கண்டு மக்கள் பயப்படும் காலம் மறைந்து விட்டது.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி வருபவருடைய நடவடிக்கை காரணமாக குற்றச் செயல்கள் குறைந்துள்ளன. அவருடைய சேவை அந்தப் பகுதி மக்களுக்குத் தொடர்ந்தும் இருக்க வேண்டும்- என்றார். (வ-115)

# சங்கக் கடைக் கிளையில் திருட்டு

யாழ்ப்பாணம், ஓக.26

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை விற்பனை நிலையமொன்றில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். சங்கத்தின் கந்தரோடை சுப்பிரமணியம் வீதியில் உள்ள கிளை விற்பனை நிலையமே கடந்த வெள்ளிக்கிழமை உடைக்கப்பட்டுள்ளது.

விற்பனை நிலையத்தில் இருந்த சீனிமூட்டைகள், பால்மா பைக் கற்றுக்கள் உட்பட ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடர்களால் களவாடப்பட்டுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. கடந்த வெள்ளிக்கிழமை பெய்த மழையைப் பயன் படுத்தியே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. திருட்டுச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (வ-17)

# மாற்று வலுவுள்ளோருக்கும் தொழில் வாய்ப்பு வழங்குக

பிரதித் தொழில் ஆணையாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.26

வடமாகாணத்தில் உள்ள தொழில் நிறுவனங்கள் மாற்று வலுவுள்ளோரையும் இணைத்து அவர்களுக்கும் தொழில் வாய்ப்பை வழங்க முன்வர வேண்டும் என்று பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாற்றுவலுவுடையோரையும் தொழில் ஸ்தாபனங்கள், நிறுவனங்களில் இணைத்து அவர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அமைச்சு திட்டங்களை வகுத்துள்ளது.

இதற்காக செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் மேலதிக செயலாளர் ஹேரத் யாப்பா யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார். அவர் யாழ்ப்பாணத்தில் இரண்டு நாள்கள் தங்கியிருந்து மாற்றுவலுவுடையோருக்கு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான இந்த விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளார் - என்றார். (த-17)

## 15ஆம் ஆண்டு நினைவலைகள்



**செல்வன்**
**குணசிங்கம் ஞானேந்திரன்**
(குட்டிக் கண்ணா)

முன்னாள் உரிமையாளர்:
**கோபிகா ஆடையகம்**

தோற்றம் : 1977.01.07
மறைவு : 1999.09.10

மகிழ்ச்சிப் பூங்காவாய் பூத்துக்
குலுங்க வேண்டிய - நீ
கவர்ச்சிப் பூங்காவன நாளிலே
கண்மூடி மௌனமானாய்
கந்தன் கால் பதிந்த மண் மீது
உந்தன் மேல் பதிந்ததடா- கண்ணா
மண்ணிலே நீயில்லை மனம் பதைத்ததடா
ஆறாத துன்பமடா! அழுகின்றோம்.
நீ என்றும் எம்முடன் வாழ்வாயடா

என்றும் உன் நினைவில்........
அப்பா,அம்மா,அக்கா,தங்கை, மச்சான்,
மருமகள், மருமகன்மார்,
கோபிகா ஆடைஅகம் பணியாளர்கள், நண்பர்கள்.

## பதினேழாம் ஆண்டு நினைவலைகள்

**செல்வி சின்னையா கவிதா**



பிறப்பு
16 . 12 . 1980

இறப்பு
02 . 09 . 1997

திதி:
பிரதமை
(26.08.2014)


ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்ட
அன்புச் செல்வமே– கவி
நீ எங்களை விட்டுப் பிரிந்து
பதினேழு ஆண்டுகளானாலும்
ஆறவில்லை அம்மா! ராசன்
உன் பிரிவுத் துயர் எங்கள்
மனதை விட்டகலாது
கவிதா! உன்னைப் பிரிந்து வாடும் துயரம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
மாறாது கவிக்குட்டி

உன் பிரிவால் வாடும்
அம்மா, அப்பா,
அண்ணாமார்,
அக்காமார், அத்தான்மார்,
அண்ணிமார்,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தி.சின்னையா (தந்தை)
கவிதாலயா
இல.6, நொத்தாரிஸ் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

(51187)(4.3.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கணபதிப்பிள்ளை நடராசா**
(ஓய்வுபெற்ற இ.போ.ச. பரிசோதகர்)

பிறப்பு
19.02.1939

இறப்பு
06.09.2013

திதி: பிரதமை

எம்மை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தி
இதயத்தில் சுமந்து நல்வழி நடத்திய அப்பாவே!
இங்கு உங்களைக் கூற வார்த்தைகள் போதாதப்பா!
நீங்கள் எங்களுக்கு நண்பனப்பா!
எம் கண்ணில் வரும் துளி நீரைக் கூட
தாங்க முடியாத இதயம் கொண்ட நீங்கள்
எம்மை விட்டுப் பிரியாமல் பிரிந்ததேனப்பா!
வேண்டுமப்பா மறுபிறவியிலும் அப்பாவாக

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இல. 503, 7ஆம் யூனிற்,
இராமநாதபுரம்.

குடும்பத்தினர்.

(51031)(5.6.3)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**அமரர் சின்னையா தியாகேஸ்வரன்**



தோற்றம்
25.10.1948

மறைவு
28.07.2014

கடந்த 28.07.2014 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எமது பாசமிகு குடும்பத்தலைவரின் பிரிவுச் செய்தியறிந்து நேரில்வந்து ஆறுதல் கூறியோருக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார். உறவினர். நண்பர்கள் அனைத்து உத்தியோகத்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

நாளை (27.08.2014) புதன்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

வாழை வளவு,
கரணவாய் மத்தி, கரவெட்டி,
தொ.பே. 076 623 8341 (49747)(45.6.)

குடும்பத்தினர்.

# தெல்லிப்பழை துர்க்கா தேவிக்கு நாளை கொடியேற்றம்



யாழ்ப்பாணம், ஓக.26

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்தப் பெருந் திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற் றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை 12 தினங்கள் நடைபெறும்.

பூர்த்தி தினமாகிய ஆவணி திருவோணத்தில் காலை 8 மணிக்கு துர்க்கா புஷ்கரணி தீர்த்தத் தடாகத்தில் தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

பிரதான திருவிழாக்கள் வருமாறு:- நாளை புதன்கிழமை கொடியேற்றமும், எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு திருமஞ்சத் திருவிழாவும், எதிர்வரும் 4 ஆம் திகதி வியாழன் பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் அன்றைய தினம் மாலை 6 மணிக்கு கைலாச வாகனத் திருவிழாவும் எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சப்பரத் திருவிழாவும், எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் , எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிறு காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழவும் அன்றைய தினம் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும்.

திருவிழாக் காலத்தில் பக்தர்கள் கற்பூரச்சட்டி எடுத்தல், காவடி எடுத்தல், அடியளித்தல், அங்கப் பிரதட்சணம் செய்தல் அனைத்தும் வெளி வீதியில் நடைபெற வேண்டும் என்றும் ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (வ-7)




**இன்று : பூங்காவனம்**

## நல்லூர் ஆலயச் சூழலில்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெரும் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடத்தி வரும் சமயச் சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு-

'குறியும் நெறியும்' என்ற தலைப்பில் சிவத்தமிழ் சொல்லழகர் ச.லலீசனின் சிறப்புச் சொற்பொழிவும், காரைநகர் கிழவன்காடு கலா்மன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. விசேட நிகழ்வாக வில்லிசை கலைமாமணி சிறுப்பிட்டி ஊர் சத்தியதாஸ் குழுவினர் வழங்கும் 'வள்ளி திருமணம்' வில்லிசை இடம்பெறும். (ஓ-7)

★ ★ ★

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கு வரிசையில் இன்று மாலை 6.45 மணிக்கு - 'வினையறுக்கும் வேலாயுதா' நடன அளிக்கை - இளங்கலைஞர் மன்ற இசை, நடன ஆசிரியர்களின் தயாரிப்பில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள். நட்டுவாங்கம் -ஸ்ரீகண்ணன், பாட்டு - ஏ.அமிர்தசிந்துஜன், கீபோட் - என்.செல்வச்சந்திரன், வயலின் - கே.பத்மநாதன், மிருதங்கம் - ஜி.கண்ணதாஸ். (ஓ)

★ ★ ★

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலயத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா பக்க வாத்திய சகிதம் வழங்கும் 'கம்பராமாயணம்' தொடர் நிகழ்வில் 'ஸ்ரீராம பட்டாபிஷேகம்' இசைப் பேருரை இடம்பெறும். (ஓ)

★ ★ ★

யாழ்ப்பாணம் சின்மயாமிஷனின் ஏற்பாட்டில் 'இந்துவாக வாழ்வோம்' செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மிக அருளுரை ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் மாலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இன்றைய அருளுரையின் தலைப்பு 'குருதேவர் சுவாமி சின்மயானந்தர்' என்பதாகும். (ஓ)

## சந்நிதியில் தினமும் மாணவர்களின் கலை நிகழ்வுகள்

கரணவாய், ஓக.26

செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் விசேட சிறப்பு நிகழ்வுகள் தினமும் பிப 3.30மணிக்கு செல்லையா ஐயர் அன்னதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரின் பணிப்புரைக்கு அமைய வடமராட்சி கல்வி வலயத்தால் இந்நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அந்த வகையில் இன்று செவ்வாய்க்கிழமை தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவர்களின்கலைநிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதேவேளை சந்நிதியான் ஆச்சிரமத்திலும் இன்று முதல் எதிர்வரும்7ஆம்திகதிவரை விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாள் திருவிழாவாகிய இன்று செவ்வாய்க்கிழமை வடபிராந்திய சாயி சமித்தி அன்பர்களின் பஜனை நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ஓ-108)

Visalam LEARNINGS

யாழ் நகரில் கல்விக்கான ஒரு புதிய அத்திவாரம் LEARNINGS!

(An English Medium Mentoring from 3+ to A/L)

Learnings, முன்பள்ளி(Pre-school) முதல் உயர்தரம்(A/L) வரை ஒரு பதிவு செய்யப்பட்ட சர்வதேச பாடசாலை யாழ் நல்லூரில் Visalam நிறுவனத்தால் 01/09/2014 முதல் ஆரம்பிக்கப்படுகிறது!

நாம், பிரித்தானியாவின் EDXCEL பாடத்திட்டத்துக்கு அமைவான கற்பித்தலை வழங்குவதுடன், இலங்கை English medium சாதாரணதர(O/L), உயர்தர(A/L) பரீட்சைகளுக்கும் மாணவர்களை தயார்ப்படுத்த முனைகின்றோம்.

EDXCELன் CORE SUBJECTS - English, Mathematics & Science

FOUNDATION SUBJECTS - Art & design, Citizenship, Computing, History, Geography, Design & Tech, Languages, Music & Physical Education.

*எமது மேலதிக துணைப் பாடங்களாக(CO CURRICULUM) Abacus, Tamil, Sinhala, French/German/Norsk, Chess/Carom, Art & Craft, Living Etiquettes ஆகியன இலவசமாக இணைக்கப்படுகின்றன.*

# *CCTV Cameras* பொருத்தப்பட்ட100% பாதுகாப்பான கட்டடம்!

# 20 மாணவருக்கு மட்டுப்படுத்தப்பட்ட வகுப்பறைகள்!

# ஆங்கில வழிக் கல்வி கடினமெனில் பிரத்தியேக வகுப்புகள்!

# வேலைகளுக்கு செல்லும் பெற்றோருக்கு ஏதுவாக Day care service!

# Free Elocution classes for age 4+!

# ICT(including typing skills), English, Maths , Environmental studies, Elocution, Speech & Drama, Key board (organ), Karate, Origami ஆகியன 30% வரையான சலுகைக் கட்டணத்தில்!

*Admission open for 3+, 4+, Grade 1 & Grade 2*


*First term starts from 1st Sep 2014*

இவ் அரிய வாய்ப்பினை பயன்படுத்தி உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்துக்கான அத்திவாரத்தை பலமாக இட்டுக்கொள்ளுங்கள்!!

Visalam
Locally, widening to beyond

127/1 Temple Road, Jaffna, Srilanka
Phone : 021 221 9695 Mobile : 075 979 9695
Email : admin@visalamholdings.com
Web : www.visalamholdings.com

இருபத்தைந்தாம் நாள் திருவிழா



## பூந்தேரில் பரவசப் பவனிகாண்

இருள் நீக்கும் வைகறை சுடரெனக் காட்சிபட
திருமுகத் தரிசனம் தந்திடும் சண்முகனே
மருள் நீக்கி மனம் நிறைந்து எழிலோங்கி
அருள் பூக்க ஈர்பத்து ஐந்நாளும் வீதியுலா
வரும் நாளினில் இனிக்கும் வண்ணம் வரம்பல
பெருக்கி அடியார் தம் வாழ்த்துதால் உயர்வோனே
முருகு பெருகும் பூங்காவன உற்சவநாளின்று
வருகவே பூந்தேரில் பரவசப் பவனியே

கலாபூசணம் சிவ.சிவநேசன்.

## பூசிப்போம் நல்லூரானை

பூங்கா வனத்தன்று பூசிப்போம் நல்லூரில்
ஆங்கழகுக் காய்வளரும் பூமரங்கள் - தீங்கான
சூழலை மாசகற்றுஞ் சூக்குமமாம் மக்களுயிர்
வாழ வகுத்த வழி

அமரர் சி.இராசரத்தினம், வேலணை.

## உன்நாமம் அர்ச்சிப்போம்

திருப்புகழை இசையுருக அருணகிரி பாடிடவும்
விருப்போடு ஏற்று வினை தீர்த்தாய் - முருகவேள்
நாளெலா முன்நாமம் உச்சரித்து அர்ச்சித்தோம்
தாழ்விலா வாழ்வு தா

மயில் வேலாயுதம்பிள்ளை,
புளியம்பொக்கணை.

## பாதம் பற்றிடுவோர் பயனடைவர்

நெற்றிவிழி வந்துதித்த நிர்மலனின் பாதத்தை
பற்றிடுவோர் வாழ்வில் பயன்டைவர்- பற்றின்றி
எந்நாளும் காரியங்கள் ஏற்றமாய் செய்திடுவர்
முந்நான்கு தோளனையே முன்னி

வட்டுக்கோட்டை, சி.வெற்றிவேலு.

## பிறவித் துயரும் போகும்

வருக வருக முருகா வள்ளலான முருகா
தருக தருக முருகா தயை தருக தருக முருகா
உருக உருக வந்தோம் உன் அடி முடி சாய்க்க
அருகி அருகிப் பண்பு அகன்ற வெறுமை சொல்ல
பெருகப் பெருக வேண்டும் அன்பு ஒன்று போதும்
மறுவிலாத மதியாம் உன் முகம் தினந்தினம்
மனதில் ஒட்ட வேண்டும்
பிறகு என்ன வேண்டும் பிறவித் துயரும் போகும்

திருமதி ஜெ.கந்தவேள்,
கொக்குவில் கிழக்கு.



## சமய சந்நிதி



வவுனியா, ஒக.26
வவுனியா வெளிக்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.
எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை சப்பரத்திருவிழாவும், 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் 8ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.
சிவஸ்ரீ சிவகுகநாத குருக்கள் உற்சவக் கிரியைகளை நடத்தி வைப்பார். (ஒ)

## ஆனையிறவு மீனவருக்கு வலைகள்

வலி.தென்மேற்கு, ஒக.26
ஆனையிறவு தட்டுவன்கொட்டி, கண்ணகி நகர் ஆகிய கிராமங்களில் வசிக்கும் மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு உதவ முன்வந்துள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, ஏழு மீனவர்களுக்குத் தலா 42ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகளை வழங்க முன்வந்துள்ளது.
இதற்கான பயனாளிகள் மீன்பிடிச் சங்கங்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டுள் ளார் கள்.
கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளைப் பிரதேசத்தில் தட்டுவன்கொட்டி, கண்ணகி நகர் ஆகிய கிராமங்களில் வசிக்கும் மீனவர்கள் பொருளாதார நெருக்கடியால் மீன்பிடி உபகரணங்களை வாங்கித் தொழில் செய்ய முடியாமல் திண்டாடினார்கள்.
இவர்களின் நிலைப்பாடு குறித்துப் பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்க முன்வந்துள்ள பொருளாதார அமைச்சு மேற்படி இரு கிராமங்களையும் சேர்ந்த ஏழு மீனவர்களுக்குத் தலா 42 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளை வழங்கவுள்ளது.
இதற்கான சகல ஒழுங்குகளையும் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் துறைத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. (த-115)

## மஹா கும்பாபிஷேகம்

ஊர்காவற்றுறை, ஒக.26
ஊர்காவற்றுறை - கரம்பொன் கிழக்கு, சாந்தையம்பதி ஸ்ரீ காளிகா புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் புனராவர்த்தன நவகுண்டபஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.20 மணி தொடக்கம் காலை 9.20 மணி வரையான சுப வேளையில் இடம்பெறும்.
எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ குமார சரவணபவக் குருக்கள், ஸ்தானிக குரு பிரதிஷ்டா குரு சிவஸ்ரீ கா.புவனேஸ்வரக் குருக்கள் ஆகியோர் தலைமையில் கிரிகைகள் நடைபெறும். (ஒ)

## கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டன

வவுனியா, ஒக.26
வவுனியா மாவட்ட மது வரித்திணைக்களத்தினால் சுமார் ஒரு கிலோ கிராம் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.
உதவி மதுவரி ஆணையாளர் சுமேத வசந்த ஸ்ரீயின் பணிப்புரையின் அடிப்படையில் வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி பி.ரகுநாதன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின் மூலம் கோயில் புளியங்குளம், கல்மடு ஆகிய பகுதிகளில் இருந்து இந்தக் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டன.
கைது செய்யப்பட்ட மூவரையும் வவுனியா மாவட்ட நீதிபதி எஸ். றிஸ்வான் முன்னிலையில் முற்படுத்தியபோது அவர்கள் மூவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து பெருமளவான பணம் (தலா 10 ஆயிரம்) தண்டப் பணமாக விதிக்கப்பட்டது. (த-108)

## முதியோர் ஒன்று கூடலில் 43 அங்கத்தவர்கள்

யாழ்ப்பாணம், ஒக.26
கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த ஒன்று கூடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.
முதியோர் சங்கத்தின் உப தலைவர் இ.தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 43 அங்கத்தவர்கள் பங்குபற்றி யிருந்தனர்.
இந்த நிகழ்வில் கோப்பாய் வடக்கு முதியோர்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் முதியோர்களுக்கான கருத்தரங்கு இசை நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-10)


### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 13 . 08 . 1923

உதிர்வு 27 . 07 . 2014

**திருமதி தெய்வானை அம்பலவாணர்**

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியரும், எமது அன்புத் தெய்வமுமான அன்னையின் மரணத்தினால் நாம் துயருற்றிருந்தவேளை அவர்களின் அபரக் கிரியைகளில் பங்குபற்றியும், அனுதாபம் தெரிவித்தும், எம்மை ஆற்றி உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர், அன்பர் அனைவருக்கும் எம் இதயங் கனிந்த நன்றி அறிதலைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தும்பளை,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.


## கணினி தொழில்நுட்ப பயிற்சி நெறி

கரவெட்டி, ஒக.26
கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலைய கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கணினி தொழில்நுட்ப பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தப் பயிற்சி நெறியில் பங்குபெற விரும்பும் பயனாளிகள் கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ)

## திருநெல்வேலியில் மணிக்கூட்டுக் கோபுரம்

யாழ்ப்பாணம்.ஒக.26
திருநெல்வேலி ஆடியபாதம் வீதி பலாலி வீதிச் சந்தியில் மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்றை அமைக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.
பிரதேச சபையின் தீர்மானத்துக்கு அமைய இந்த மணிக்கூட்டுக் கோபுரம் அமைக்கப் படவுள்ளது. (ஒ-7-17)

## கலை கலாசார பேரவை பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக.26
யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் பொதுக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
கலை கலாசாரத்துடன் தொடர்புடைய அதிகாரிகள், அலுவலர்களை கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (ஒ-9)


### மரண அறிவித்தல்கள்

### செல்வி சாகரி (சாரு) செல்வராசா



மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Orleans ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சாகரி (சாரு) செல்வராசா (22.08.2014) பிரான்சில் காலமானார்.

அன்னார் செல்வராசா-கலாரஞ்சினி தம்பதியரின் பாசமிகு புதல்வியும், வசந்தராஜின் அன்புச் சகோதரியும், ஆறுமுகம், சின்னக்குட்டி (சுழிபுரம்), குமரேசு-பூமலர் (அச்சுவேலி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், லோகநாதன்-கிருஸ்ணகுமாரி (நோர்வே) ஆகியோரின் பெறாமகளும், லிங்ககுமார்-சுமதி(ஜேர்மனி), ஜீவகுமார்- கௌரி (நோர்வே), சுரேஸ்குமார்-பிரியா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (27.08.2014) புதன்கிழமை பி.ப.3.00 மணியளவில் Inter Communal De Bondy,76, Avenue Henry varugnat, 93140 Bondy France இல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்
A.V.K.மாணிக்கம் குடும்பம்
(அகில இலங்கை சமாதான நீதிவான்)

'சுனேதாஸ்',
வல்லை வீதி,
அச்சுவேலி.

(51233) (5.6)



### இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும்
கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட
**திருமதி சந்திராதேவி குணசீலன்**



தோற்றம் : 02.03.1949

மறைவு : 16.09.2012

திதி: பிரதமை (26.08.2014)

எங்கள் இனிய தெய்வமே
இப்பாரினில் இருந்து
நீங்கள் பிரிந்து இருவருடங்கள் ஆகிறது
எங்கள் உயிர் இருக்கும் வரை
எங்களுடன் நீங்கள் என்றும்
இருக்கின்றீர்கள் அம்மா!
எங்கள் வாழ்வில்
நீங்கள் ஏற்றி வைத்த தீபம்
என்றும் பிரகாசமாக
ஒளிவீசிக் கொண்டே இருக்கும் அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்.

பிள்ளைகள்:
யசோதா, சதீஸ், யமுனா.
பேரப்பிள்ளைகள்:
அரிஞ்சயன், அனுபமா

கணவர்- க.குணசீலன்,
பழைய வீதி, கோப்பாய் தெற்கு.

(51229)(5.6)



### மலிவு விற்பனை

றோஸ் 120/=, பேபி றோஸ், மார்கழி செவ்வந்தி 70/=, செவ்வரத்தை, மொசந்தாஸ், சைப்ரஸ், இன்னும் பல இன கன்றுகள் 60/= (30.08.2014 வரை மட்டுமே)

தொடர்பு: யாழ்.அக்கூரியம் (51178) (4.6.3)
நட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். 077 707 0711



### ஆதனம் கடைக் கட்டடங்களுடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில், கஸ்தூரியார் வீதி சந்திக்கு அருகில் நிலப் பரப்பு 4 (நான்கு), குழி 9.95 (ஒன்பது தசம் ஒன்பது ஐந்து) விஸ்தீரணம் உடைய ஆதனம் இரண்டு கடைக் கட்டடங்களுடன் விற்பனைக்குண்டு.

(51227) (12.3.6) தொடர்பு: 077 395 0052



### வீடு வாடகைக்கு

A9 பாதைக்கும், நாவலர் றோட்டிற்கும் இடையில் Broodi Lane இல் 3 அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உள்ளது. தொழில் புரியும் சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

(51231) (12.3.6) தொடர்பு:077 484 2578



நயினாதீவு

### நா.க.இராசலிங்கம்

(ஓய்வுநிலை இராஜதந்திர தூதுவர்-இலங்கை)



நயினாதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நா.க.இராசலிங்கம் நேற்று (25.08.2014) திங்கட் கிழமை கொழும்பில் கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை கனகரெத்தினம் -தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திருதிருமதி செனட்டர் றெஜிபெரேரா தம்பதியரின் அன்பு மருமகனும், ரமணியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான கார்த்திகேசு (ஆசிரியர்), தங்கமுத்து, வள்ளியம்மை, நளாயினி மற்றும் பாலகிருஸ்ணன், துரைமணி ஆகியோரின் அன்புச் சகோத ரனும், வருணிகா, சகுந்தலா, ஈஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெரோமி நவின், சண்மித் ஆகியோரின் மாமனாரும், மிடேஸ், வருண், சம்வீந்தர, யசோதா, மிலி ஆகியோரின் அன்புப்பேரனும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரன், நமசிவாயம், கணபதிப்பிள்ளை மற்றும் ஜானகி, பிறேமா, வாமதேவி, றோகான், சிறிலால் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

66/5ஏ, கருவப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

தகவல்:
நா.க.துரைமணி
சகோதரன்

(51230)(6.4)

## பெருவில் நிலநடுக்கம்

பெரு நாட்டின் மத்திய பகுதியில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டரில் 7.0 ஆக பதிவாகியிருந்தது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம், உயிரிழப்பு குறித்து உடனடி தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை. ஆரம்பத்தில் 7.0ஆக ரிக்டர் அளவில் பதிவான இந்த நிலநடுக்கம் பின்னர். 6.9 என்று காட்டியது இரவு மணி 7.21 க்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

## குறிக்கோள்களை அடையும்வரை தாக்குதல்

### இஸ்ரேல் பிரதமர் தெரிவிப்பு



பெஞ்சமின் நெத்தன்யாகு

ஜெருசலேம், ஓக.26

அனைத்துக் குறிக்கோள்களும் நிறைவேறும் வரை காஸா பகுதி மீதான தாக்குதல் தொடரும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் அமைச்சரவைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதன்போதே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார். அவர் தொடர்ந்து மேலும் தெரிவித்ததாவது:-

"இஸ்ரேல் மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்துபவர்களுக்கு மன்னிப்பே கிடையாது. தற்போது நடைபெற்று வரும் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கை, அதன் குறிக்கோள்கள் அடையும் வரை தொடரும். எமது எதிரிகளால் எம்மைச் சோர்வடையச்செய்ய முடியாது. பயங்கரவாத அமைப்பான இஸ்லாமிய தேசமும் (ஐ.எஸ்.) ஹமாஸும் ஒன்றே. தங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களையே கொல்லவும் சிறார்களைக் கொல்லவும் அவர்கள் தயங்குவதில்லை. அவர்களின் உண்மையான சுயரூபத்தை உலகம் அறிந்து கொண்டுள்ளது" என்று அவர் மேலும் கூறினார். (வ)

CMYK



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் நேற்று முன்தினம் அதிகாலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதில் 120 பேர் காயம் அடைந்துள்ளனர். ஏராளமான கட்டடங்களும் சேதமடைந்தன. இந்த நிலநடுக்கம், ரிச்டர் அளவுகோளில் 6.0 ஆக் பதிவாகி இருந்தது. கலிபோர்னியாவின் வடமேற்கு நகரமான அமெரிக்கன் கேன்யானில் இருந்து 8 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பகுதியை மையமாகக் கொண்டு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் கடந்த 25 ஆண்டுகளில் நிகழ்ந்தவற்றில் மிகப்பெரியது என்று அமெரிக்க வானியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (வ)

# பலஸ்தீனியர்கள் 18 பேர் ஹமாஸால் படுகொலை

### இஸ்ரேலுக்கு உளவு பார்த்தவர்களாம்



காஸா, ஓக.26

இஸ்ரேலுக்கு இரகசிய தகவல்கள் வழங்கியதாகக் கூறி 18 பலஸ்தீனியர்களைஹமாஸ் போராளிகள் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றதாக சர்வதேச ஊடகங்கள் சனிக் கடந்த வியாழக்கிழமை இஸ்ரேல் மேற்கொண்ட வான் தாக்குதலில் ஹமாஸ் இயக்கத்தின் மூத்த தலைவர்கள் மூவர் கொல்லப்பட்டமைக்கு, குறித்த பலஸ்தீனியர்கள் வழங்கிய தகவலே காரணமெனக்கூறி அவர்களைக் கொலை செய்ததாகச் சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவரும் ஹமாஸ் போராளிகளின் இணையத் தளமும் தெரிவித்துள்ளன.

குறித்த பலஸ்தீனியர்கள் தகவல் அளித்திருக்காவிட்டால் ஹமாஸ் இயக்கத்தின் தலைவர்களை துல்லியமாகக் குறிவைத்து இஸ்ரேலால் தாக்குதலை மேற்கொண்டிருக்க முடியாது என்றும் ஹமாஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன.

பொதுமக்கள் அதிகமான நடமாடும் இடத்தில் வைத்து பலஸ்தீனியர்கள் 18 பேரையும் சுட்டுக் கொலை செய்ததுடன் இஸ்ரேலுக்கு உளவு பார்ப்பவர்களுக்கு இந்த நிலைதான் ஏற்படும் என எச்சரிக்கை விடுத்ததாகச் சர்வதேச தகவல்கள் குறிப்பிட்டுள்ளன. (வ)

# மனித உணர்வை அறியும் கணினி மென்பொருள்

### உருவாக்கினர் பங்களாதேஷ் விஞ்ஞானிகள்

டாக்கா, ஓக.26

மனித உணர்வுகளை அறியும் கணினி மென்பொருளை பங்களாதேஷ் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

வங்கதேசத்தின் இஸ்லாமிய தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இதனை உருவாக்கியுள்ளனர்.

இதுகுறித்து அந்தப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஏ.எஃப். எம். நஜ்முல் ஹக் நஹின் கூறியதாவது:-

"கணினியைப் பயன்படுத்துபவர்களைக் கொண்டு இரண்டு விதத்தில் மனித உணர்வுகளை அறிந்து கொள்ளலாம். விசைப்பலகை பயன்பாடு. அதனைக் கொண்டு உருவாக்கும் எழுத்து அல்லது உரை வடிவம் ஆகியவற்றை ஆய்வு செய்வதன் மூலம் மனித உணர்வுகளை அறியலாம். முதல் முறையாக, இந்த இரு முறைகளையும் உட்படுத்தி ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதற்கென தெரிவுசெய்யப்பட்ட ஆர்வலர்கள் ஒரு குறிப்பிட்ட உரைநடைச் செய்தியைக் கணினியில் பதிவு செய்யப் பணிக்கப்பட்டனர்.

அப்போதைய அவர்கள் மன நிலையை அவர்கள் குறித்து வைத்துக் கொள்ளவும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். இடையிடையே, அவர்கள் தாமாக கணினியைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்பட்டனர்.

மகிழ்ச்சி, கோபம், அச்சம், சோகம், வெறுப்பு, வெட்கம், குற்ற உணர்ச்சி ஆகிய ஏழு உணர்வுகளுடன் தொடர்புடைய பல்வேறு சொற்களும் வரிகளும் அடங்கிய சொற் களஞ்சியத்துடன் ஆர்வலர்கள் பதிவு செய்த விவரங்களும் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டன.

இந்த ஆய்வுக்குப் பின்னர் கண்ட முடிவுகளில் மகிழ்ச்சி, கோபம் ஆகியவற்றை அதிக பட்சமாக சரியாக கணிக்க முடிந்தது என்று அவர் கூறினார்.

அதனைக் கொண்டு மனித உணர்வுகளை அறிய உதவும் மென்பொருளை உருவாக்க முடிந்தது. கணினி விளையாட்டுக்கள். கணினி மூலம் கல்வி உள்ளிட்ட பல்வேறுதுறைகளில் இந்த ஆய்வு பயன்படும்" என்றார் அவர். (வ)

# மசகு எண்ணெய் ஏற்றுமதி பாக். மீண்டும் ஆரம்பித்தது

இஸ்லாமாபாத், ஓக.26

பாகிஸ்தானில் மசகு எண்ணெய் உற்பத்தி வரலாறு காணாத உச்சத்தை எட்டிவிட்டதால் 10 வருடங்களுக்கு பின்னர் பாகிஸ்தான் மீண்டும் ஏற்றுமதியை ஆரம்பித்துள்ளது.

கடந்த ஜீன் மாத நிலவரப்படி, அங்கு ஒருநாளைக்கு 98 ஆயிரம் போத்தல்கள் வரை உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. அது கடந்த ஆண்டை விட 22 சதவீதம் அதிகமாகும். இதற்கு முன் பாகிஸ்தானில் இந்தளவு மசகு எண்ணெய் உற்பத்தியானது கிடையாது.

தற்போது ஏற்றுமதி செய்யப்படவுள்ள மசகு எண்ணெயின் மதிப்பு 60.7 மில்லியன் டொலராக கணக்கிடப்பட்டிருக்கிறது. ஒரு மாதத்துக்கு குறைந்தது 32 ஆயிரம் தொன் எடைகொண்ட எண்ணெயை ஏற்றிக் கொண்டு கப்பல் ஒன்றாவது பாகிஸ்தானில் இருந்து செல்கிறது.

1990களில் பாடின் எரிவாயு படுகை கண்டுபிடிக்கப்பட்டது. முதல் பாகிஸ்தானில் மசகு எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. ஆனால். அங்கு எடுக்கப்பட்ட எண்ணெய் சுத்திகரிக்க கடினமாக இருப்பதாக முறைப்பாடு எழுந்ததால் பாகிஸ்தானின் அராப் ரீபைனரிஸ் உற்பத்தி செய்யும் மசகு எண்ணெய் முழுவதையும் உள்நாட்டுக்கே விற்று வந்தது. இதன் காரணமாகப் பாகிஸ்தான் அரசு கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற்றுமதியை தடை செய்தது.

அதன்பின்னர், அந்தநாட்டின் சராசரி மசகு எண்ணெய் உற்பத்தி வரலாறு காணாத அளவில் 98 ஆயிரம் பீப்பாய்களை தொட்டுள்ளதால் தற்போது 10 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. (வ)

# இஸ்ரேல் உளவு விமானத்தை சுட்டு வீழ்த்தியது ஈரான்

அணுஉலை நிலையங்களை உளவு பார்க்க வந்த இஸ்ரேலின் உளவு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாக ஈரான் அரசு அறிவித்துள்ளது. ஈரானின் பல பகுதிகளில் அமைந்துள்ள அணு செறிவூட்டும் நிலையங்களை ஆளில்லா உளவு விமானங்களின் மூலமாக இஸ்ரேல் உளவு பார்த்தும் வருகின்றது. ஈரானின் நட்டன்ஸ் அணு செறிவூட்டும் நிலையத்தை நோக்கிச் சென்றஆளில்லாஉளவு விமானத்தை, ஈரான் இராணுவப் படைகள் ஏவுகணை மூலம் தாக்கி அழித்ததாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.(வ)

# 30 தினங்கள் மட்டும் ஷெரீப் பதவி விலகுக

### இம்ரான்கான் மீண்டும் கோரிக்கை



நவாஸ் ஷெரீப்



இம்ரான்கான்

இஸ்லாமாபாத்.ஓக.26

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் 30 தினங்கள் மட்டும் பதவி விலக வேண்டும் என்று இம்ரான்கான் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாகிஸ்தானில் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு எதிராக இம்ரான் கானின் தெஹ்ரிக் இன்சாப் கட்சி போராடி வருகிறது. 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் முறை கேடுகள் நடந்ததாகவும், அது குறித்த விசாரணை நடத்த ஏதுவாக பிரதமர் நவாஸ் ஷெரீப் பதவி விலக வேண்டும் என்றும் இம்ரான்கான் கோரி வருகிறார். இதற்கு பாகிஸ்தான் அரசு மறுத்து விட்டது. இந்த நிலையில், தேர்தல் முறைகேடு குறித்து ஆணையகம் சுதந்திரமாக விசாரணை நடத்த ஏதுவாக பிரதமர் ஷெரீப் 30 நாள்களுக்கு மட்டும் பதவி விலக வேண்டும், விசாரணையில் அவர்மீது எந்த குற்றமும் இல்லை என்பது நிரூபணமானால் அவர் மீண்டும் பதவிக்கு திரும்பலாம் என்று இன்ரான்கானின் கட்சி கூறி வருகிறது. இதனைஏற்கமறுத்த பாகிஸ்தான் அரசு, பதவி விலகல் தவிர அவர்களது ஏனைய கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளது. எனினும் இந்தப் பிரச்சினையில் எந்த முடிவும் எட்டப் பட்வில்லை.(வ)

# ஆலய நெரிசலில் சிக்கி 10 பேர் உயிரிழப்பு

காம்தநாத், ஓக.26

மத்தியப் பிரதேச மாநிலம் போபால் அருகே ஆலயம் ஒன்றில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி பக்தர்கள் 10 பேர் உயிரிழந்தனர். 60க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

சாத்னா மாவட்டம், காம்தநாத் என்ற இடத்தில் அமைந்துள்ள ஆலயத்தில் நேற்றுக் காலை அமாவாசை சிறப்புப் பூசை நடைபெற்றது. இதில் பங்கேற்ற பெருந்தொகையான பக்தர்கள் குறுகலான நடைபாதையூடாகச் சென்ற போது, திடீரென கடும் நெரிசல் ஏற்பட்டது. அதனால் பதற்றம் ஏற்பட்டு பக்தர்கள் ஒருவர் மேல் ஒருவர் விழுந்தனர். இதில் 10 பேர் மூச்சுத் திணறி உயிரிழந்தனர். மேலும், 60 இற்கும்மேற்பட்டோர்காயமடைந்துள்ளதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் மாநில அரசின் அலட்சியத்தினால் தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகக் காங்கிரஸ் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ரூ.2லட்சம் ரூபா வீதமும், காயமடைந்தவர்களுக்கு 50,000 ரூபாவும் நிவாரண நிதி அளிக்கப்படும் என்று மத்திப் பிரதேச அரசு அறிவித்துள்ளது. இதனிடையே நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்றும் அஞ்சப்படுகிறது. (வ)



## 7 ஆவது தடவை அ.தி.மு.க. பொது செயலாளராகிறார் ஜெ.

சென்னை, ஓக.26



ஜெயலலிதா

அ.தி.முகவின் பொதுச் செயலாளராக 7 ஆவது முறையாக முதல்வர் ஜெயலலிதா தெரிவாகவுள்ளார்.

அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் பதவிக்கான தேர்தலில் முதல்வர் ஜெயலலிதா போட்டியிட வேண்டும் என்று விருப்பம் தெரிவித்து 2,467 பேர் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். இந்த விருப்ப மனுக்களின் கட்டணமாக, ரூ.6 கோடியே 15 லட்சம் பெறப்பட்டுள்ளதாக அ.தி. மு.க. தலைமைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.கவில் உட்கட்சித் தேர்தல் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுவது வழக்கம். கடந்த 1989 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக 6 முறை பொதுச் செயலாளராக ஜெயலலிதா போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இந்த நிலையில், பொதுச் செயலாளர் தேர்தலுக்கான அறிவிப்பு கடந்த 19 ஆம் திகதி வெளியிடப்பட்டது. தேர்தல் ஆணையாளராகக் கட்சியின் அமைப்புச் செயலாளர் விசாலாட்சி நெடுஞ்செழியன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் ஞாயிறுடன் நிறைவடைந்தது. இதுவரை முதல்வர் ஜெயலலிதா மட்டுமே வேட்பு மனுதாக்கல் செய்துள்ளதால், அவர் போட்டியின்றி மீண்டும் தெரிவுசெய்யப்படுவது உறுதியாகியுள்ளது. இதுதொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வருகிற 29 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.(வ)

# உண்மை முகத்தை வெளிக்காட்ட ஆரம்பித்துள்ளது பாகிஸ்தான்

### பாதுகாப்பு அமைச்சர் ஜெட்லி குற்றச்சாட்டு



அருண் ஜெட்லி

கொல்கத்தா, ஓக.26

இந்திய அரசுடன் பேச்சு நடத்த வேண்டுமா அல்லது பிரிவினைவாதிகளுடன் பேச்சு நடத்த வேண்டுமா என்பதை பாகிஸ்தான் தீர்மானிக்க வேண்டும். எனினும் பாகிஸ்தான் தனது உண்மையான முகத்தைக் காட்டத் தொடங்கிவிட்டதாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் அருண் ஜெட்லி தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர் இவ்வாறு கூறினார். மத்தியில் ஆட்சிப் பொறுப்பேற்றதும், பதவி ஏற்பு விழாவுக்கு அண்டை நாடுகளின் தலைவர்களை அழைக்க திட்டமிட்டதையும், அதனைத்தொடர்ந்து பாகிஸ்தானுடன் வெளியுறவுத் துறை செயலர்கள் மட்டத்தில் பேச்சை ஆரம்பிக்க முடிவெடுத்ததையும் அருண் ஜெட்லி சுட்டிக்காட்டினார்.

எனினும், பாகிஸ்தான் தனது உண்மையானமுகத்தைக்காட்டத் தொடங்கிவிட்டதாக குற்றஞ்சாட்டிய அமைச்சர், யாருடன் பேச்சு நடத்த வேண்டும் என்பதைப்பாகிஸ்தான்தீர்மானிக்க வேண்டும் என்று கூறினார்.

கடும் முடிவுகளை எடுக்கும் துணிவு நமக்கு உண்டு என்பதை நாம் நிரூபித்திருக்கிறோம் என்று குறிப்பிட்டார்.

இரு நாட்டு வெளியுறவு செயலர்கள் மட்டத்திலான பேச்சு இஸ்லாமாபாத்தில் நடைபெறுவதாக இருந்தது. இந்த நிலையில், இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் அப்துல்பசித் காஷ்மீர் பிரிவினைவாதத் தலைவர்களுடன் டில்லியில் பேச்சு நடத்தினார். இதனையடுத்து, பேச்சில் பங்கேற்கப் போவதில்லை என்று இந்தியா அறிவித்தது. (வ)






தென் கொரியாவின் ஜியோலெனம்டோ மாகாணத்தின் கல்வி நடவடிக்கைகளுக்கான அந்த ஆளுநர் வேங்க் மன்சாயி, பிரதமர் தி.மு. ஜயரத்னவை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் அண்மையில் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். பிரதமரின் கோரிக்கைக்கு இணங்க இரு நாடுகளுக்கும் இடையில் கல்வித்துறைக்கான பரஸ்பர ஒத்துழைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இலங்கையர்களுக்கு கொரிய மொழியைப் போதிப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் கொரியாவில் மேற்கொள்ள ஆளுநர் வேங்க் மன்சாயி இணக்கம் தெரிவித்தார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## கிணற்றில் வீழ்ந்து பொலிஸ் சாவு

கொழும்பு, ஓக.26
கொக்கரல்ல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் ஒருவர் கிணற்றில் விழுந்து உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வீட்டுக்கு அருகிலுள்ள கிணற்றில். குளிக்கச்சென்ற சந்தர்ப்பத்தில் நேற்றுமுன்தினம் இரவு அவர் கிணற்றுக்குள் வீழ்ந்துள்ளார் என்று அவரின் மனைவி, பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். குறித்த கான்ஸ்டபிள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

இதுகுறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# தமிழரின் மனதை வெல்வதே அரசின் முக்கிய நோக்கமாம்

## இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் வாசுதேவ

கொழும்பு, ஓக.26
தமிழ் மக்களின் மனதை வெல்வதை நோக்கமாகக் கொண்டு அரசு பெரும் செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றது என்று தெரிவித்துள்ளார் தேசிய நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

தேசிய நல்லிணக்க அமைச்சின் பிரதி அமைச்சராக பீ.திகாம்பரம் அண்மையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் அமைச்சு வந்தபோது அவரை வரவேற்று உரையாற்றும்போதே வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"எங்களது தேசிய நல்லிணக்க அமைச்சின் மூலம் இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதை முக்கிய இலக்காகக் கொண்டுள்ளோம். அதற்கான செயற்றிட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அரசு தமிழ் மக்களின் மனதை வென்றெடுக்க ஏராளமான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. போரின் பின்னர் எமக்குள் இடைவெளி இல்லை என்று காட்டுவதற்கு அரசு தன்னாலான வழிகளில் முயன்று கொண்டிருக்கின்றது. அது தொடர்பான தகவல்களை தமிழ் மக்கள் மத்தியில் இலகுவாக எடுத்துச் செல்வதற்கு பிரதியமைச்சரின் நியமனம் பெரிதும் உதவும். எமது அமைச்சுக்குத் தமிழர் ஒருவர் பிரதியமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)



## தமிழ்க் கூட்டமைப்பு இந்தியா சென்று பொய் கூறுவதால் பயனேதும் இல்லை

### அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, ஓக.26
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இந்தியாவுக்குப்பயணம்செய்து இலங்கை அரசுக்கு எதிராக பொய்யான முறைப்பாடுகளை செய்துள்ளமை தொடர்பில் அரசு ஆச்சரியமடையவில்லை. காரணம் வரலாறு முழுவதும் கூட்டமைப்பினர் இவ்வாறே செயற் பட்டு வந்துள்ளனர் - இவ் வாறு தெரிவித்துள்ளார் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும்அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன.

எவ்வாறெனினும் முக்கியமான ஒரு விடயத்தில் இந்தியாவும் கூட்டமைப்பும் முரண்பாடான நிலையைக் கொண்டுள்ளன. சர்வதேச விசாரணை கூடாது என்று இந்தியா கூறுகையில் சர்வதேச விசாரணை வேண்டும் என்று கூட்டமைப்பு கூறியுள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க செயற்படாமல் புலம் பெயர் மக்களின் தேவைக்கு ஏற்ப செயற்பட்டுவருகின்றது. அவர்கள் உள்நாட்டு தத்துவத்தின் ஊடாகச் செயற்படாமல் சர்வதேச தத்துவத்தின் ஊடாக செயற்பட்டு வருகின்றனர்.

இலங்கையில் சட்டங்களை நிறைவேற்றுவது இலங்கை நாடாளுமன்றம் என்பதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறந்துவிட்டது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுடன் கூட்டமைப்பு இணைந்து செயற்படவேண்டும் என்பதே இந்தியாவினதும் விருப்பமாகும். எனினும் கூட்டமைப்பு தெரிவுக் குழுவுக்கு இன்னும் வரவில்லை. தற்போது இந்தியாவுச் சென்று கூட்டமைப்பு இலங்கை அரசுக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளது.

இலங்கையில் என்ன நடக்கின்றது என்ற யதார்த்த நிலை இந்தியாவுக்குத் தெரியும். பிராந்திய நாடுகளுடன் நட்புறவைக் கட்டியெழுப்புவதற்கு இந்தியா தற்போது முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## ஐ.தே.கட்சி பதவிகளில் விரைவில் மாற்றங்கள்

### ரணில் விக்கிரமசிங்க தீர்மானம்



ரணில்

கொழும்பு, ஓக.26
ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

தற்போதைய நிலையில் அரசின் மீது மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை எதிர்க்கட்சியால் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. உள்கட்சி முரண்பாடுகள், குத்துவெட்டுகளும் அதற்கு முக்கிய காரணமாக கருதப்படுகின்றது.

இதற்கிடையே நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தல்களின் போது அரசின் மீதான மக்களின் அதிருப்தி ஓரளவுக்கு வெளிக்காட்டப்பட்டிருந்தது. எனினும் எதிர்க்கட்சிக்கும் குறிப்பிடத்தக்க வெற்றி எதுவும் கிட்டவில்லை. இவற்றைக் கருத்திற் கொண்டு கட்சியின் உட்கட்சி முரண்பாடுகளைக் களைந்து, மறுசீரமைப்பொன்றை மேற்கொள்ள ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று தெரியவருகின்றது.

கட்சியின் பிரதித் தலைவராக சஜித் பிரேமதாஸ நியமிக்கப்படவுள்ளார் என்பதுடன், சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த சிலரும் முக்கிய பதவிகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் சிறுபான்மை மக்களின் நம்பிக்கையை வென்று, எதிர்க்கட்சியின் சிறுபான்மைக் கட்சிகளையும் அரவணைத்துக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவது ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டகால நோக்கமாக இருக்கின்றது என்று அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ற)

## குப்பை காரணமாக வைத்தியர்கள் போராட்டம்

கொழும்பு, ஓக.26
கராப்பிட்டி போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் சிகிச்சையளிக்கும் நடவடிக்கைகளில் இருந்து நேற்று முற்பகல்முதல் விலகியுள்ளனர்.

வைத்தியசாலையில் குவிந்துள்ள குப்பைகளை அகற்றுவதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. குப்பைகள் அகற்றப்படும் என மாநகர மேயர் எழுத்து மூலம் உறுதியளிக்கும் வரையில், இந்த நடவடிக்கை தொடரும் என்று கராப்பிட்டி வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் ஷெல்டன் பெரேரா தெரிவித்துள்ளார். (ற)

## பிணையில் வந்தவர் மீது நீதிமன்று முன்பாக கத்திக்குத்து

*மகளுக்காக பழிவாங்கிய தந்தை!*

கொழும்பு, ஓக.26
வழக்கொன்றில் பிணை அனுமதி பெற்று நீதிமன்றை விட்டு வெளியே வந்த ஒருவர் மீது கத்திக்குத்து நடத்தப்பட்டுள்ளது. கொழும்பு போக்குவரத்து நீதிவான் நீதிமன்றின் முன்பாகவுள்ள வீதியில் வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலை நடத்தியவர் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்,

கொட்டாஞ்சேனையில் வசிக்கும், 17 வயதான மாணவி ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டார் என்று கடந்த 19ஆம் திகதி கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அதையடுத்து மொரட்டுவ பகுதியைச் சேர்ந்த எடொன் நிரோஷன் (வயது-25) என்பவர் கைது செய்யப்பட்டு கொழும்பு - இல.3 நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் அவர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, அவருக்குப் பிணை அனுமதி வழங்கப்பட்டது. அவர் நீதிமன்றின் வெளியே வந்தபோது பாதிக்கப்பட்ட பெண்ணின் தந்தையான 51 வயதான முத்தையா செல்வராஜ், சந்தேக நபரின் தந்தையான 61 வயதான ஜி.ஏ. ஜேசீலன் என்பவரையும் சந்தேக நபரான எடொன் நிரோஷன் என்பவரையும் அவருடைய சகோதரியான தில்ஷாவையும் (வயது-23) கத்தியால் குத்தியுள்ளார்.

படுகாயமடைந்த மூவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், இளைஞனின் தந்தை உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் யுவதியின் தந்தையான முத்தையா செல்வராஜ் வாழைத்தோட்ட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.






சந்தேகநபர் குறித்த மாணவியை முகப்புத்தகம் (பேஸ்புக்) ஊடாக நண்பராக்கிக் கொண்டதுடன் யுவதியைக் கடத்திச்சென்று ஆடைகளின்றிப் படம் பிடித்துள்ளார். அந்த படத்தை முகப்புத்தகத்தில் தரவேற்றம் செய்யப்போவதாக தொலைபேசியூடாக அச்சுறுத்தியே யுவதியை கடத்திச்சென்று துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# நிலாக்லா வாசியுங்க.....

## அபாண்டம்

நீதிமன்றில் அந்த விவாகரத்து வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பிரதிவாதியான மனைவி தன் கணவர் தன் மேல் அபாண்டமாகப் பழி போட்டு இந்த விவாகரத்தைக் கேட்டிருப்பதாக வாதாடியதைத் தொடர்ந்து விசாரணை ஆரம்பமாகியது.
அரச சட்டத்தரணி குறுக்கு விசாரணையை ஆரம்பித்தார்.
சட்டத்தரணி : 'அடிப்படையில் உங்களுக்குள் என்ன பிரச்சினை?'
பிரதிவாதியான மனைவி : 'அடுப்படியில பிரச்சினை எதுவும் இல்லைங்க'
'ப்ச்.. உங்களுக்கிடையில் என்ன தகராறு?'
'எங்க கடையில தகராறு எதுவுமில்லையே, நல்லாத்தானே ஓடுது?'
'அடாடா.. உங்க தாம்பத்திய உறவில் என்ன சங்கடம் என்று அறிய நீதிமன்றம் விரும்புகிறது'
'தாம்பரத்தில் எங்களுக்கு உறவுக்காரங்க யாருமில்லைங்க. இருந்தாத்தானே சங்கடம்'
'கருத்து வேறுபாடு ஏதாவது உண்டா?'
'அவரு கறுப்புதாங்க. நானும் கறுப்புதான். அதனால வேறுபாடு எதுவும் இல்லைங்க'
'வீட்டுக்காரரோட என்ன சண்டை?'
'வீட்டுக்காரரோட எதுக்குங்க சண்டை. மாசம் முதலாம் திகதி வாடகையை வாங்கிட்டு அவரு பாட்டுக்குப் போயிடுவாரு'
இதற்கு மேல் அரச சட்டத்தரணியால் தாங்க முடியவில்லை.
'எதுக்காக விவாகரத்து கேட்கிறார்' என்று அலறிவிட்டு சட்டத்தரணி இருமினார்.
'ஓ..அதுவா.. என்னோட பேசிறப்போ எல்லாம் ரத்தக் கொதிப்பு வந்துடுதாம். நீங்க நல்லாத்தான பேசிகிட்டு இருக்கீங்க. உங்களுக்கென்ன ரத்தக் கொதிப்பா வந்திச்சு ? இது அபாண்டம்தானே?' என்றாள் பிரதிவாதியான மனைவி.

## உதட்டோவியம் என்பது இதுதானா ?

## இப்படியும் ஆசை



சின்னத்திரையில் வளர்ந்து வரும் ஒரு தொகுப்பாளினி சவுமியா. ஏனைய தொகுப்பாளினிக்கும் இவருக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. மற்றவர்கள் கையில் எப்போதும் ஒலிவாங்கியுடன் இருப்பார்கள். இவர் மட்டும் கையில் கமராவுடன் இருப்பார். சினிமா ஒளிப்பதிவாளராக வேண்டும் என்பதுதான் சவுமியாவின் லட்சியம்.
என்னுடைய அப்பா ரகுநாத் மிகப் பெரிய ஒளிப்படப் பிடிப்பாளர். அவர் மாதிரியே ஒளிப்படப் பிடிப்பாளராக மாற வேண்டும் என்று சின்ன வயதிலேயே நினைத்தேன். ஊடகக் கற்கை நெறி படித்துக் கொண்டிருந்த போது, பயிற்சிக்காக தொலைக்காட்சி சனல்களுக்குச் சென்றேன்.
அந்த வேலை, ஸ்டைல் பிடித்ததால் படித்து முடித்ததும் தொகுப்பாளியாக வந்துட்டேன். நிறையத் தொடர்களில் நடிக்கக் கூப்பிட்டார்கள். அதில் எனக்கு விருப்பம் இல்லை.
உலகம் முழுக்கச் சுற்றி நிறையப் படங்கள் எடுத்து வைத்திருக்கேன். அதை வைத்து ஒரு கண்காட்சி நடத்த வேண்டும். ஒளிப்படப் பிடிப்பாளர் துறையில் பெண்கள் மிகவும் குறைவு. அதை மாற்றி அதில் நிறைய சாதிக்க வேண்டும். சினிமாவில் ஒளிப்பதிவாளராகி அதிலும் உயரத்தைத் தொடவேண்டும், என்கிறார் சவுமியா.




**பெண்களுக்கு**
காஞ்சிப்பட்டு
ஆரணி பட்டு
சாமுத்ரிகா பட்டு

**ஆண்களுக்கு**
கஷ்டப் பட்டு
துன்பப் பட்டு
துயரப் பட்டு

## இதுக்குமா போட்டி !



நடிகை தப்ஸி தனது இடுப்பின் பின்பகுதியில் பச்சை குத்தியுள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. கொலிவூட், பொலிவூட்டில் பச்சை குத்தும் கலாசாரம் எல்லை மீறி போய்க் கொண்டிருக்கின்ற நிலையில் ஒருவரை ஒருவர் போட்டி போட்டு மற்றவரை முந்துவதற்கு துடிக்கின்றனர்.
அந்த வரிசையில் அண்மையில் நடிகை ஸ்ருதி ஹாசன் தனது உடம்பில் 5 இடங்களில் பச்சை குத்தி உடலில் அதிக இடங்களில் பச்சை குத்திய நடிகை என்ற பெருமையை தனதாக்கினார். இடுப்புப் பகுதி, கழுத்து, கை, கால், எனப் பல இடங்களில் பச்சை குத்துவதில் நடிகைகள் ஆர்வம் காட்டுகின்றனர்.
இப்போது, நடிகை தப்ஸி இன்னுமொருபடி மேலே போய், தனது இடுப்புப் பகுதிக்கும் தொடைப் பகுதிக்கும் இடையில் தனது பெயரை பச்சை குத்தியுள்ளார். இந்த இடத்தை அடிக்கடி பார்க்க முடியாது என்பதால் அங்கு பச்சை குத்தியதாகக் கூறுகிறார் தப்ஸி.
தப்ஸியின் இந்த துடுக்கான பேச்சு பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் பல நடிகைகளை கடுப்பில் ஆழ்த்தியுள்ளது.



## இன்றைய பேஸ்புக் தத்துவம்

வெற்றியைத் தேடி அலையும் போது 'வீண் முயற்சி' என்பார்கள், வெற்றி கிடைத்ததும் இதுதான் 'விடா முயற்சி' என்பார்கள்.

# புளூ ஓஷன் குறாப்உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிடும் அற்புதப் பணியில்

இன்று கட்டட நிர்மாணத்துறையில் அசைக்கமுடியாத ஜாம்பவானாகத் திகழும் புளூ ஓஷன் றெசிடன்ஸீஸ் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுக்கொண்டதற்கு அந்த நிறுவனம் கடந்த காலங்களில் மேற்கொண்ட நம்பிக்கை மிகுந்த செயற்பாடுகளே பிரதான காரணமாகும்.



தாங்கள் கட்டடத்தில் வைக்கும் ஒவ்வொரு கல்லும் வாடிக்கையாளர்கள் தம் மீது வைத்திருக்கும் நம்பிக்கைக் கல் என்ற அடிப்படைக் கோட்பாட்டில் புளூ ஓஷன் குழுமம் ஆணித்தரமான நம்பிக்கையை வைத்திருக்கிறது.

சீரிய நெறி யாள்கை, புத்தாக்கம், புதிய சிந்தனை கள் போன்ற கொள்கைகள் மூலம் இந்த நிறுவனம் இலங்கையில் மட்டுமன்றி ஆசிய பசுபிக் பிராந்தியங்களிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் தனது காலடியை வெற்றிகரமாகப் பதித்துள்ளது.

அபிவிருத்தியின் உருவாக்கம், புதுமைகளின் பிரயோகம் ஆகியவற்றின் மூலம் சிருஷ்டிக்கப்பட்டதும், போட்டியிட முடியாததுமான சூழ்நிலையில் இலாபமீட்டுதல் என்பதே இந்த நிறுவனத்தின் தார்மீகக் கோட்பாடாகும். இந்தக்குழுமம் கட்டட நிர்மாணம் மற்றும் பொறியியல் துறையில் நீண்டகால அனுபவத்தையும் நிபுணத்துவத்தையும் கொண்டுள்ளது. இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்று Ocean Residencies என்ற பிரதான வர்த்தக இலச்சினையின் கீழ் பொறியியல், காணி அபிவிருத்தி வர்த்தகம் (ரியல் எஸ்டேட்), பொது வணிகம், மின்னியல் மற்றும் பொறியியல் ஆலோசனைகள், கல்வி உட்பட பல் வேறு துறைகளில் பிரகாசித்து வரு கிறது.

புளூ ஓஷன் குழுமத்தின் தலைவர் எஸ். துமிலன் ACA, ACCA, ACMA (UK) ACMA CPA (AUS) FM AAT (SL) ACS உள்ளிட்ட சிறந்த கல்வித்தகைமைகளுடன் நீண்டகால அனுபவத் தையும் நிபுணத்துவத்தையும் கொண்டு இந்த முகாமைத்துவக் குழுவை வழிநடத்தி வருவது இந்தக் குழுமத்தின் மகத்தான வெற்றிக்கு அடித்தளமாக அமைந்துள் ளது.

புளூ ஓஷன் மிகவும் மதிக்கப்படுகின்ற, யதார்த்தபூர்வமான, திட மான, சமூகப் பொறுப்புணர்வு கொண்ட நிறுவனம் என்ற அடிப்படைச் சித்தாந்தமே எமது மகத்தான வெற்றிக்கு மூலகாரணம்.

ஏற்றுக் கொண்ட பணியை நேர்த்தியாகவும், நிறைவாகவும், தரமாகவும், ஒப்புக் கொண்ட கால எல்லைக்குள் முடிப்பதில் புளூ ஓஷன் என்றுமே தவறியதில்லை என துமிலன் கூறும் போது, அது ஆயிரக் கணக்கான வாடிக்கையாளர்கள் அவரது நிறுவனத்தின்மீது வைத்திருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையின் பிரதிபலிப்பாகத் தெரிகிறது - என்றார்.

புளூ ஓஷன் குழுமம் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டங்கள் மவுண்ட் லெவினியா சமுத்ரா மாவத்தை, டெம்ளர்ஸ் வீதி, கொலேஜ் எவ்னியூ ஆகியன நிறைவேறிக் கொண்டிருக்கும் திட்டங்களாகும்.

மவுண்ட் லெவினியா சிரிபால வீதி, பம்பலப்பிட்டி காலி வீதி, கொள்ளுப்பிட்டி காலிவீதி, வெள்ளவத்தை மூர் வீதி, வெள்ளவத்தை பொஸ்வல் பிளேஸ் நிறைவேறவுள்ள திட்டங்கள் கொள்ளுப்பிட்டி அல்பிரட் ஹவுஸ் கார்டன் நுகெகொடை டிரயில்வெ எவ்னியூ என்பனவும் குறிப்பிடத்தக்கவையாகும்.

புளூ ஓஷன் குழுமம் தற்சமயம் 18 மாடிகளை கொண்ட பாரிய அதி சொகுசு அடுக்கு மாடிக் குடியிருப்பொன்றை (King Alfred Palace) இலக்கம் 45. அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், கொள்ளுப்பிட்டி என்ற முகவரியில் நிர்மாணித்து வருகின்றது.

விஸ்தாரமானதும் பாதுகாப்பானதுமான ஆறு வாகனத் தரிப்பிடங்களுடன், சாரதிகளும் பணிப்பெண்களும் தங்குவதற்கான பிரத்தியேக அறைகளையும் கொண்ட இந்தக் கட்டடம் கொள்ளுப்பிட்டி பிரிட்டிஷ் கவுன்சிலுக்கு அண்மையில் அமைந்துள் ளது. பிர பல வர்த்தக நிலையங்கள், வங்கிகள், உணவகங்கள், ஹோட்டல்கள் படமாளிகைகள், பாடசாலைகள் நிர்வாகக் காரியாலயங்கள், அரச, தனியார் நிறுவனங்கள், புகையிரத நிலையம் போன்றவற்றுக்கு சமீபமாக அமைந் துள்ள இந்தக் குடியிருப்பு அமைதியா கவும் சுகாதாரமாகவும் வாழ அருமை யான இடமாகும்.

இதயத்தைக் கொள்ளை கொள்ளும் அழகு, இணை யற்ற எழில்மிகு சுற்றுப் புறங்கள் ஆகிய அனைத்து வசதிகளும் ஒருங்கே அமைந்துள்ள கிங் அல்பிறட் பலஸ் உங்கள் கனவு இல்லத்துக்கு ஒரு படி மேலே உங்களை அழைத்துச் செல்லும் என்பது நிச்சயம்.

**புளூ ஓஷன் குழுமத்துடன் லிங் என்சினியரிங் நிறுவனத்தில் ஒன்றிணைவு**

ஏற்கனவே கட்டட நிர்மாணத் துறையில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வெற்றிகரமாகக் காலடி பதித்துள்ள புளூ ஓஷன் குழுமம் அதே துறையில் மற்றொரு ஜாம்பவானாகத் திகழும் லிங் என்சினியரிங் நிறு வனத்தை தனது குழுமத்துடன் ஒன்றி ணைத்து தனது அத்திவாரத்தை மேலும் பலப்படுத்திக்கொண்டுள்ளது.

இலங்கையின் கட்டட நிர்மாணத் துறையில் ஏற்கனவே பல சாதனைகளைப் படைத்துள்ள புளூ ஓஷன் நிறுவனம் லிங் என்சினியரிங் நிறுவனத்தின் சங்கமத்தின் பின் மெலும் சிறப்பான செவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கான ஆற்றலைப் பெற்றுள்ளது. துரித கதியில் முன்னேறிவரும் இலங்கையின் கட்டட நிர்மாணத்துறையில் இவ்விரு ஜாம்ப வான்களும் ஒன்றிணைந்துமென் மேலும் பல சாதனைகளைப் புரிவார் கள் என்பதில் ஐயமில்லை.

வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக வேறெந்த கட்டட நிர்மாண நிறுவனங்களிலும் இல்லாத 24 மணித்தியால வாடிக்கையாளர் சேவை எம்மிடம் நடைமுறை யில் உள்ளது.




யாழ்ப்பாணம் ஈ சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா யாழ். ரில்கோ விருந்தினர் விடுதியில் அண்மையில் நடைபெற்றது.

விழாவுக்கு தலைமை வகித்து ஈசிற்றி ஆங்கிலக் கல்லூரி அதிபர் லயன் ஜெ.றஜீவன் உரையாற்றுவதையும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பேராசிரியர் இரா.சிவசந்திரன் மாணவரொருவருக்குப் பட்டமளித்து சான்றிதழ் வழங்குவதையும் காணலாம்.

(த)




சிங்கர் நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு குளிர்சாதனப் பெட்டி ஒன்று வழங்கப்பட்டது. நிறுவன விற்பனைப் பிரிவு பணிப்பாளர் குமார் சமரசிங்க மருத்துவமனை மருத்துவ நிபுணர் ரி.சிறிகரனிடம் கையளித்தார். (த-9)

# டிரையம்ப் இன்டர் நஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனத்துக்கு நான்கு விருதுகள்

கடந்த ஜூலை மாதம் 25 ஆம் திகதி வோட்டர்ஸ் ஏட்ஜ் ஹோட்டலில் இடம்பெற்ற விருது வழங்கும் நிகழ்வில் டிரை யம்ப் இன்டர் நஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனத் துக்கு இந்த விருது கிடைத்துள்ளது.

கொழும்பு,ஒக.26

டிரையம்ப் இன்டர் நஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனம், அண்மையில் இடம்பெற்ற நஸ்கோ (Nasco) 2014 விருதுகள் வழங்கும் நிகழ் வில் விற்பனை செயற்றிறனுக் கான விருதுகளை வென்றெடுத்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 25 ஆம் திகதி வோட்டர்ஸ் ஏட்ஜ் ஹோட்டலில் இடம்பெற்ற விருது வழங்கும் நிகழ்வில் டிரையம்ப் இன்டர் நஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனத் துக்கு இந்த விருது கிடைத்துள்ளது.


தொடர்ந்து 5 ஆவது ஆண்டாக டிரையம்ப் விருதுகளை வென்றுள்ளன. வர்த்தகம் மற்றும் விற்பனை என அனைத்திலும் செயற் திறனை உறுதி செய்யும் முன்னணியாகவும் பெண்களுக்கான உள்ளாடைகளுக்கு வர்த்தகத்தில் பெயர் பெற்றதாகவும் டிரை யம்ப் நிறுவனம் விளங்குகிறது.




இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் பேஷன் சில்லறைப் பிரிவு, போட்டித்தன்மையை பரிசீலித்து குறிப்பிடத்தக்க சாதனை மற்றும் பன்முக தொழிற்றுறைகளிலிருந்து போட்டியாளர்களின் தெரிவு ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் நான்கு விருதுகளை டிரை யம்ப் வென்றெடுத்தது.

பிரதேச முகாமையாளர் பிரிவில் தங்க விருதை அசங்க உபேந்திரா வென்றார்.

மேலும் நிர்வாகப் பிரிவில் வெண் கல விருதை லக்மால் பிரதீப் குமார்வும், ப்ரோண்ட் லைன் பிரிவில் வெள்ளி விருதை நிலங்க தில்ஷானும், வெண்கல விரு தை சலிந்த பிரபாத் ராஜபக்ஷவும் வென்றெடுத்தனர். (14)



இலங்கை வங்கியின் 75ஆவது ஆண்டு நிறைவு விழா இலங்கை வங்கி காரைநகர் கிளையில் கிளை முகாமையாளர் வி.விஜயகுமார் தலைமையில் இடம்பெற்ற போது சிறுவர் சேமிப்பு கணக்கு பேணும் வெற்றியாளருக்கான பிறந்த நாள் பரிசைப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கி வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் என்.மாணிக்கசிங்கி வழங்குகிறார். (த-250)

# கன மழையை அடுத்து வன்னியில் காலபோக செய்கைக்கு ஆயத்தம்

## வயல்களைப் பண்படுத்தும் விவசாயிகள்

மல்லாவி, ஓக.26
வன்னியில் அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்து காலபோக நெற் செய்கைக்காக வயல்களை உழுது பண்படுத்தல் வேலைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.



வன்னியில் நீண்ட கால வறட்சிக்குப் பின்னர் அண்மையில் கன மழை பெய்துள்ளது.

மழையைத் தொடர்ந்து விவசாயிகள் தமது வயலை உழுது பண்படுத்தும் செயற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் பல மாதங்களாக மழை பெய்யாததால் குளங்களில் நீர் வற்றி அவை வறண்டு காணப்பட்டன.

> “ வறட்சியை தொடர்ந்து கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் தற்போது கனமழை பெய்துள்ளது. இதனை அடுத்து காலபோக நெற் செய்கை இடம் பெற்று வருகின்றன.

இதனால் குளத்து நீரை நம்பி மேற்கொள்ளப்படும் சிறுபோக நெற்செய்கையும் பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில் வறட்சியைத் தொடர்ந்து கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் தற்போது கன மழை பெய்துள்ளது. இதனை அடுத்து காலபோக நெற்செய்கைக்கான ஆரம்ப கட்ட வேலைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.. (த-426)

## வீதிகள் சீரின்மையால் அசௌகரியம்

துணுக்காய் ஓக.26
துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோட்டை கட்டியகுளம் அம்பலப் பெருமாள் குளம் தொடக்கம் அக்கராயன் குளம் வரை வீதிகள் சீரின்மையால் துணுக்காய் பிரதேச சபையின் மக்களுக்கான நீர் விநியோக சேவை தொடக்கம் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதுள்ளன என பிரதேச சபைத் தவிசாளர் வீரகத்தி இராசரெத்தினம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-
தற்போது பருவப் பெயர்ச்சி மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. கடந்த வறட்சியின் போது எமது சபையின் ஏற்பாட்டில் சீரான முறையில் நீர் விநியோகத்தை ம்க்களுக்கு மன நிறைவாக ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

சுமார் 13 கிலோ மீற்றர் தூரம் கொண்ட தென்னியங்குளம் தொடக்கம் அம்பலப்பெருமாள் அக்கராயன் குளம் வரையான வீதி மோசமான நிலையில் உள்ளது. போக்குவரத்து வசதிகள் இன்மையால் எமது மக்கள் சைக்கிள்களிலும் மாட்டு வண்டிகளிலும் பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றார். (த-415)



பயிரிடப்பட்டுள்ள கற்றாளை

# முத்துஐயன்கட்டு இடது கரையில் கிராமிய மருத்துவமனை வேண்டும்

## மீளக்குடியமர்ந்த மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு,ஓக.26
முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு இடதுகரையில் கிராமிய மருத்துவ மனை ஒன்றை உருவாக்கித் தருமாறு மீளக்குடியமர்ந்துள்ள ம்க்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

220 வரையிலான குடும்பங்கள் இங்கு மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் தமது மருத்துவ தேவைகளுக்காக 8 கிலோமீற் றர் தூரமுள்ள ஒட்டுசுட்டான் மருத்துவமனைக்கும் 15 கிலோமீற்றர் தூரமுள்ள புதுக்குடியிருப்பு மருத்துவ மனைக்கும், 25 கிலோமீற்றர் தூரமுள்ள முல்லைத்தீவு பொது மருத்துவமனைக்கும், செல்ல வேண்டிய நிலை உள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

இந்தநிலையில் தமது கிராமத்தில் மருத்துவமனையொன்றை அமைத்துத் தருமாறு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் இறுதியாக நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதேவேளை-இடதுகரையிலிருந்து ஒட்டுசுட்டான் மற்றும் புதுக்குடியிருப்பு பகுதி களுக்கு செல்லவேண்டிய இந்தக் கிராமத்தின் முதன்மை வீதியை புனரமைத்துத் தருமாறும் அவர்கள் கோரியுள்ளனர். (த-18)

## பிரதேச சபை செயலாளர்கள் இடமாற்றம்

மல்லாவி, ஓக.26
துணுக்காய் பிரதேச சபை, மாந்தை கிழக்கு பிரதேச சபை ஆகியவற்றின் செயலாளர்கள் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

துணுக்காய் பிரதேச சபைக்கான புதிய செயலாளராக வவுனியாவைச் சேர்ந்த கந்தசாமி சத்தியநாதன் கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் தனது கடமையைப் பொறுப்பேற்றார்.

துணுக்காய் பிரதேச சபையின் முன்னாள் செயலாளர் முருகேசு கிருஸ்ண நவரத்தினராசா மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் பிரதேச சபைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதுபோன்று மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் பிரதேச சபையின் செயலாளராகக் கடமையாற்றிய திருமதி குணவதி சண்முகலிங்கம் யாழ். பண்ணை சுகாதார திணைக்களத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (த-415)

# கற்றாளைச் செய்கை முருங்கனில் வெற்றி

மன்னார், ஓக.26
குறைந்தளவு தண்ணீரைப் பயன்படுத்தி அதிக வருமானம் ஈட்டத்தக்க வகையில் மன்னாரில் விவசாயிகள் மத்தியில் கற்றாளைச் செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

மன்னார், முருங்கனில் உள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதம வதிவிடப் பொறியியலாளர் காரியாலயத்தில் பரீட்சார்த்தமாக இந்தக் கற்றாளைச் செய்கை சுமார் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒரு வருட காலத்தில் கற்றாளைப் பழம் அறுவடை செய்யக் கூடியதாக இருக்கும் என்பதுடன், சுமார் 25 வருடங்கள் வரை அதன் பயனைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இங்கு அறுவடை செய்யப்படும் கற்றாளைப்பழம் ஒரு கிலோ 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

குறிப்பாக முருங்கன் நீர்ப்பாசனத் திணைக்களத்திலிருந்து கார்கில்ஸ் நிறுவனத்தின் அநுராதபுரக் கிளைக்கு கற்றாளைப் பழம் ஏற்றுமதி செய்யப்பட்டுவருகிறது.

அத்துடன் கற்றாளைச் செய்கையை விவசாயிகளி டையே ஊக்குவிக்கும் பொருட்டு கற்றாளைப் பயிர்த் துண்டம் ஒன்று 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதேவேளை இங்கு திராட்சைப்பழம், அன்பரலங்காய், மாதுளை போன்ற பழ வகைகளும் செய்கை பண்ணப் பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (த)



பிக்கப் வாகனம் ஒன்றில் களவாக முதிரை மரக் குற்றிகளை ஏற்றி வந்தவர்களை அக்கராயன் பொலிஸார் கைதுசெய்தனர். மரக்குற்றிகளும் கைப்பற்றப்பட்டன. (த-18)

# வன்னிக்கு இரு அமைச்சர்கள் இருந்தும் உதவிகள் இல்லை

## இளைஞர் கழகத் தலைவர் தெரிவிப்பு

வவுனியா, ஓக.26
வன்னி மாவட்டத்துக்கென இரண்டு அமைச்சர்கள் இருந்தும் அவர்களால் எமக்கு எந்த உதவியும் கிடைப்பதில்லை. மாறாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இளைஞர் சேவைகள் மன்றத்துக்கு ஏதாவது உதவி செய்தால் எம்மை அரசு சந்தேகக் கண்ணோடு பார்க்கின்றது என்று வவுனியா மாவட்ட இளைஞர் சம்மேளனத் தலைவர் ரி.அமுதராஜ் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்;
இளைஞர் சேவைகள் மன்ற வவுனியா மாவட்டக் காரியாலயத்தில் பணியாற்றும் ஊழியர்களில் தமிழ் லிகிதர் எவரும் இல்லை. எத்தனையோ தடவைகள் அரசிடம் தமிழ் லிகிதர் ஒருவரை நியமிக்குமாறு கோரிக்கை விடுத்த போதும் இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை.

வடக்கு மாகாணத்தில் ஐந்து மாவட்டங்கள் உள்ளன.


அதனை இரண்டாக்கி அரசு கையாள்கிறது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகியவற்றை வடமாகாண தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் என்றும் வவுனியா, மன்னார் மாவட்டத்தை வன்னி மாகாண தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் என்றும் பிரித்துக் கையாள்கின்றனர்

இவ்வாறு ஏன் எம்மைப் பிரிக்கிறார்கள்? அண்மையில் கிரிக்கெட் விளையாட்டு போட்டி கம்பஹா மாவட்டத்தில் நடைபெற்றபோது தமிழ் இளைஞர்கள் தாக்கப்பட்டார்கள். தமிழ் இளைஞர்களுக்குப் பாதுகாப்பு இல்லை.

நாங்கள் வவுனியாவில் நகர சபை மைதானத்தைப் பயன்படுத்த நகர சபை கட்டணம் செலுத்து மாறு கேட்கிறார்கள். ஆனால் இராணுவத்தினர் தாராளமாகக் கொடிகட்டி விளையாட்டு நிகழ்வு, தேர்தல் பரப்புரை களியாட்ட நிகழ்வுகளை நடத்துகிறார்கள். இதற்குத் தடையும் இல்லை. கட்டணமும் இல்லை. எம்மை அரசு இவ்வாறு பாரபட்சமாக நடத்துவது ஏன்? கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமது விளையாட்டு வீரர்களுக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கினால் சந்தேகக் கண்ணோட்டத்தில் நாம் உற்று நோக்கப்படுகிறோம்.

2014 ஆம் ஆண்டு இளைஞர் கழகத்தால் பல்வேறு வேலைத்திட்டங்களைச் சுதந்திரமாக நடத்த முடியவில்லை. போதிய நிதி உதவியும் கிடைப்பதில்லை. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் எமக்கு உதவியளிப்ப தில்லை- என்றார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் வவுனியா மாவட்ட இளைஞர்கள் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் சிசிர செனவிரட்ண, வவுனியா மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரி ஜ.சுகாணி, இளை ஞர் சேவைகள் மன்ற நிஸ்கோ முகாமையாளர் ஜி.அஜித்சந் திரசேகர, இளைஞர் சேவைகள் மன்ற நெடுங்கேணி அதிகாரி எஸ்.சதீஸ்குமார், செட்டிக்குளம் இளைஞர் சேவை அதிகாரி இ.சசிகரன், வவுனியா தெற்கு இளைஞர்சேவை அதிகாரிஎஸ்.திலினலக்மால் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-402)



கடந்த இரு தசாப்தங்களுக்கு முன்னர் வருடா வருடம் நல்லூர்க் கந்தனின் உற்சவ காலத்தில் அடியார்களுக்குத் தாக சாந்தி வழங்கிய யாழ். தட்டாதெரு கலாஜோதி நிலையம் மீண்டும் இவ்வருடம் தனது சமூகப் பணியை ஆரம்பித்துள்ளது. கலாஜோதி நிலையத்தின் தண்ணீர்ப் பந்தலில் அடியார்கள் தாக சாந்தி பெறுவதைக் காணலாம். (ஒ-20)

## யாழ். தட்டாதெரு கலாஜோதியின் பூங்காவனத் திருநாள் நிகழ்வுகள்

### இன்று மாலை ஒன்றியக் கலை அரங்கில்

யாழ்ப்பாணம், ஓக.26

யாழ்.தட்டாதெரு கலாஜோதி இளைஞர் ஒன்றியத்தினர் நல்லைக் கந்தனின் பூங்காவனத் திருநாளையொட்டி சிறப்பு நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளனர்.

கலாஜோதி நிலையத்தின் நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை கலாஜோதி ஒன்றிய கலை அரங்கில் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகின்றன.

கலாஜோதி நிலைய கரப்பந்தாட்ட மைதான திறப்பு நிகழ்வு விளையாட்டுப் பகுதித் தலைவர் ப.சக்திவேலின் வரவேற்புடன் ஆரம்பமாகும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மின் அத்தியட்சகர் அம்பலவாணர் அருள் நாதன் கலந்து கொள்வார். திறப்பு விழாவை அடுத்து அங்கு கரப்பந்தாட்டப் போட்டியும் நடைபெறும்.

தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் ஒன்றியத்தின் தலைவர் இரத்தினசிங்கம் இராகுலன் தலைமையில் இடம்பெறும்.

ஒன்றியத்தின் போஷகர்களான சி.கோணேஸ்வரன், உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் ஆகியோரின் விசேட உரைகளை அடுத்து பிரதம விருந்தினர் உரையாற்றுவார்.

பிரபல பாடகர் கதிர் சுந்தரலிங்கம் நிகழ்வில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார்.

இறுதியில் பக்தி இசை கானம் யாழ்.ரமணனின் பின்னணி இசையுடன் நடைபெறும்.

அனைத்து நிகழ்வுகளுக்கும் கலாஜோதி இளைஞர் ஒன்றிய உறுப்பினர்களான மருத்துவர் இரத்தின சிங்கம் மோகன், வைத்தியலிங்கம் வசந்தன், ஜெயசிங்கம் உதயகுமார் ஆகியோர் அனுசரணை வழங்கியுள் ளனர். (ஓ)

## இழைய முறை நாற்று உற்பத்தி திருநெல்வேலியில் விரைவில்

யாழ்ப்பாணம், ஓக.26

யாழ்ப்பாணம் திருநெல் வேலியில் நீண்ட காலமாகச் செயற்படாமல் இருந்து வந்த இழைய முறை நாற்று உற்பத்தி வளர்ப்பு நிலையம் மீண்டும் செயற்படவுள்ளது.

மத்திய விவசாய அமைச்சின் கீழ் உள்ள குறிப்பிட்ட நிலையத்தைச் செயற்பட வைப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வருட இறுதியில் அல்லது அடுத்த வருடத் தொடக்கத்தில் இருந்து இந்த நிலையம் செயற்பட உள்ளது.

திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்துக்கு எதிர்ப்பக்கமாக பலாலி வீதியில் இழைய முறை நாற்று உற்பத்தி வளர்ப்பு நிலையம் பல மில்லியன் ரூபா செலவில் திறந்து வைக்கப்பட்டது. கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் இது ஆரம்பிக்கப்பட்ட போதிலும் உரிய முறையில் செயற்படாமல் மூடப்பட்ட நிலையில் இருந்தது.

இழைய நாற்று உற்பத்தி வளர்ப்புநிலையத்தைச் செயற்பட வைப்பதன் மூலம் வட பகுதி விவசாயிகள் பல அனுகூலங்களைப் பெற முடியும்.

நிலையத்தைச் செயற்பட வைக்க வேண்டுமென விவசாய அமைப்புகளால் வலியுறுத்தப்பட்டபோதும் அது கருத்தில் கொள்ளப்படாமல் இருந்து வந்தது. நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் நிலையத்தைச் செயற்பட வைப்பதற்கு வசதியாக இரண்டு தொழில்நுட்பவியலாளர்கள் நியமிக்கப்பட்டு பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாமல் இருந்தமையால் இரசாயனக் கலவைகளின் பாவனைக்காலம் முடிந்து போயுள்ளதுடன், இலத்திரனியல் கருவிகளும் மீள் பாவனைக்கு ஏற்புடையனவா என்பது குறித்து ஆராயப்பட்டு பொருத்தமில்லாதவை நீக்கப்பட்டுப் புதியவை சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன.

இந்த வருடத்தின் இறுதியில் அல்லது அடுத்த வருட ஆரம்பத்தில் இழைய முறை நாற்று உற்பத்தி நிலையம் செயற்பட ஆரம்பிக்கும் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-11)

## பாலியல் வன்முறைகளை தடுப்பதற்கு வலைப்பின்னல்

### வேலணையில் விரைவில்

யாழ்ப்பாணம், ஓக.26

கிராமிய மட்டத்திலான வளங்களைப் பயன்படுத்துவதற்கும், பாலியல் வன்முறைச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்குமான வலைப் பின்னல்களைத் தெரிவு செய்வதற்கானநடவடிக்கைகள்வேலணை பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பான அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்று திங்கட்கிழமை வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீசன் தலைமையில் நடைபெற்றது.

திவிநெகுமதிட்டத்தின் கீழ் இடம் பெறவுள்ள இந்தத் தெரிவு பற்றிய கூட்டத்தில் மாவட்ட செயலக பொருளாதார அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி ந.உதயனி மற்றும் ஐ.நா. அபிவிருத்தித் திட்டப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (த-7)

## போதைக்கு அடிமையானோரை இனங்காண்பதற்காக ஆய்வு

போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்களை இனங்கண்டு அவர்களை அதற்குரிய மருத்துவ நிலையங்களுக்கு அனுப்புதல் மற்றும் போதைப் பொருள் பாவனை பற்றிய ஆய்வுகள் வேலணை பிரதேச செயலர்பிரிவில் இடம்பெறவுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள அபாயகரமான மருந்து மற்றும் போதைப் பொருள் பாவனைத் தடுப்புப் பிரிவினர் போதைப் பொருள் பாவனை தொடர்பில் வேலணை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 30 கிராம அலுவலர் பிரிவுகளிலும் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இதற்கான வினாக் கொத்துக்கள் அடங்கிய படிவங்கள் பிரதேச செயலகத்துக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. இதன் மூலம் கிராம அலுவலர்கள் தத்தமது பகுதியில் தேவையான விவரங்களைத் திரட்டுவார்கள்.

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் பாவனை குறித்து சரியான தகவல்கள் இல்லை எனவும், கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய விவரங்கள் மட்டுமே உள்ளதாகவும் கூறப்படுகின்றது. (த-7)

## அச்சுவேலி கைத்தொழில் பேட்டை செயற்பாடுகள் நாளை ஆரம்பம்

அச்சுவேலி, ஓக.26

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை தொழிற்சாலைகளின் செயற்பாடுகள் நாளை புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுகின்றன.

ஆரம்ப விழாவில் இலங்கைக்கான இந்திய தூதுவர் வை.கே.சின்ஹ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதி அமைச்சர் வீரகுமார திஸநாயக்கா ஆகியோர் கலந்து கொண்டு தொழிற்சாலைகளின் செயற்பாடுகளை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

போர் நடவடிக்கைகளினால் முற்றாகச் சேதமடைந்த அச்சுவேலி கைத்தொழில் பேட்டை இந்திய அரசின் நிதீ உதவியுடன் மீள்கட்டுமானம் செய்யப்பட்டு தொழில் அதிபர்களுக்கு நிலம் வழங்கப்பட்டதை அடுத்து நிறுவப்பட்ட தொழிற்சாலைகள் நாளை முதல் செயற்படவுள்ளன.

இந்த வகையில் 30 வருடங்களின் பின்னர் கைத்தொழிற் பேட்டையின் செயற்பாடுகள் மீண் டும் ஆரம்பமாகின்றன. (த-11-9)

## வயல் நிலங்களுக்கான ஏக்கர் வரி செலுத்துக

நெல்லியடி, ஓக.26

நெல் உற்பத்திக்கான வயல் நிலங்களுக்கான ஏக்கர் வரி செலுத்தாதவர்கள் உடனடியாக ஏக்கர் வரியை செலுத்துமாறு கரவெட்டி கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

தற்போது கரவெட்டி கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட பிரிவிலுள்ள நெல் உற்பத்தியாளர்களுக்கு கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு ஒவ்வொரு கிராமங்களுக்குமான நிர்வாகத் தெரிவுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது காலபோக நெல் உற்பத்திக்கான கூட்டங்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் அத்துடன் பிஜி 406 ரக விதை நெல் கரவெட்டி கமநலசேவை நிலையத்தில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது எனவும், தேவைப்படுவோர் பெற்றுக் கொள்ளுமாறும் பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (த-422)

## வீடு மாறிச் சென்றது பொலிஸ் அதிர்ச்சியுற்ற அந்தணர் குடும்பம்

சைக்கிள் திருட்டுச் சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு மோட்டார் சைக்கிள்களில் வீடு மாறிச் சென்ற பொலிஸாரால் அதிர்ச்சிக்குள்ளான தாயொருவரும் அவரது மகளும் மறுநாள் உண்மை நிலையை அறிந்து நிம்மதியடைந்தனர்.

சுதுமலையிலுள்ள அந்தணர் ஒருவர் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரு மோட்டார் சைக்கிள்களில் சென்ற நான்கு பொலிஸார் அங்கிருந்த தாயொருவரையும் அவரது மகளையும் பார்த்து திருடப்பட்ட சைக்கிள்கள் எங்கே என்று அதிகாரத்துடன் கேட்டனர். அவர்களின் கேள்வியால் அதிர்ச்சிக்குள்ளான தாயும் மகளும் அது பற்றித் தங்களுக்கு எதுவும் தெரியாது என்று கூறியதும் பொலிஸார் அங்கிருந்து சென்று விட்டனர்.

இந்த நிலையில் வீட்டுக்கு வந்த மகனிடம் பதற்றத்துடன் இருந்த தாயார் சம்பவம் பற்றித் தெரிவித்தபோது குழப்பம் அடைந்த மகன் தொலைபேசி மூலம் மானிப்பாய் பொலிஸாருடன் தொடர்பு கொண்டு விசாரித்தபொழுது அங்கிருந்து பொலிஸார் எவரும் குறிப்பிட்ட வீட்டுக்கு அனுப்பப்படவில்லை என்று பதிலளிக்கப்பட்டது.

இது பற்றி மறுநாள் மீண்டும் அந்தணர் குடும்பம் பொலிஸாருடன் தொடர்பு கொண்டு வினவியபோது பொலிஸார் வீடு மாறிச் சென்றமை தெரிய வந்தது.

இதையடுத்து அந்த ணர் குடும்பம் நிம்மதியடைந்தது. (த-115)

## கூரிய வாளுடன் நடமாடியவர் கைது

யாழ்ப்பாணம், ஓக.26

அல்வாய் மகாத்மா வீதியில் நேற்று முன்தினம் பகல் கூரிய வாளொன்றுடன் நடமாடிய ஒருவரைப் பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அல்வாய் மகாத்மா வீதியில் வாளொன்றுடன் ஒருவர் நடமாடுவதாகப் பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பருத்தித்துறை குற்றப் புலனாய்வுப் பொலிஸார் குறிப்பிட்ட நபரைக் கைது செய்தனர். அவரிடம் தொடர்ந்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகப் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாகத் தெரிய வருவதாவது:-

அல்வாய் மகாத்மா வீதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் ஒருவர் கூரிய வாளொன்றுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுவதாகப் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்கு தகவல் ஒன்று கிடைத்துள்ளது. உடனடியாகச் சம்பவ இடத்துக்கு பொலிஸார் விரைந்த போது குறிப்பிட்ட சந்தேக நபர் பொலிஸாரைக் கண்டு ஓடத் தொடங்கினார். எனினும் துரத்திச் சென்ற பொலிஸார் அவரை அல்வாய் மகாத்மா வீதியில் வைத்து மடக்கிப் பிடித்தனர்.

அவர் கைவசம் வைத்திருந்ததாகக் கூறப்படும் வாள் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சந்தேக நபர் மீது ஏற்கனவே வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பந்தமான முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவரைத் தொடர்ந்து விசாரணைக்கு [illegible]படுத்தி வருவதாகவும் தெரிவித்தனர். (த-109)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஒருதலைப்பட்சமாக ஒப்பந்தத்தை அரசு மீறுவது சரியா?

அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் ஐக்கிய தேசியக் கட்சி, அமரர் ஜே.ஆர்.ஜயவர்த்தன தலைமையில் ஆட்சி நடத்திய காலத்தில், அப்போதைய இந்தியப் பிரதமர் அமரர் ராஜீவ்காந்தியுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின்படி உருவாக்கப்பட்டு சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒன்று.

இந்தத் திருத்தத்தின்படி சிலபல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்குப் பின்னர் பதவிக்கு வந்த அதிபர் பிரேமதாஸ அதனை முழுமையாகச் செயற்படுத்த விரும்பாத போதிலும், அதனை முழுமையாகப் புறக்கணித்துத் தமிழ் தரப்பினர் போராட்டத்தில் இறங்கியதால் அது அப்படியே முடங்கிப் போயிருந்தது.

பிரேமதாஸவுக்குப் பின்னர் பதவியில் அமர்ந்த சந்திரிகா பண்டாரநாயக்காவின் காலத்திலும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென சிலபல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதைவிட அம்மையார் தமது தரப்பில் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க முனைவதாகவும் செய்திகள் வெளிவந்தன. ரணில் விக்கிரமசிங்க பிரதமராகியதையடுத்து நோர்வே அனுசரணையில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் உடன்பாடு ஏற்பட்டு பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதெல்லாம் பழைய கதைகள்.

சந்திரிகா அம்மையாருக்குப் பின்னர் அதிபர் பதவியில் அமர்ந்த மஹிந்த ராஜபக்ஷ காலத்திலேயே மீண்டும் இலங்கை- இந்திய ஒப்பந்தம் பற்றியும், அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் பற்றியும் அதிகம் பேசப்படலாயிற்று. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடத்திய போரில் இந்தியாவின் ஆதரவைப் பெரிய அளவில் பெற்றுக்கொண்ட இலங்கைத் தலைவர், போர் நடந்து கொண்டிருந்தபோதும், போர் முடிவுற்ற காலகட்டத்திலும் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தத்துக்கு மேலாகவும் சென்று தீர்வு வழங்கப்படும் என்று இந்தியாவுக்கு மட்டுமல்ல ஐ.நாவுக்கும் தெரிவித்து வந்தார். ஆனால் காலப்போக்கில் 13ஆவது திருத்தத்தில் மாற்றம் செய்யவும் துணிந்ததுடன் அதிலுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண அரசுகளுக்குத் தரப் போவதில்லை என்ற நிலைப்பாட்டுக்கு வந்து விட்டார்.

இப்பொழுது இந்தியாவில் காங்கிரஸ் அரசு மாறி, அதற்கு முற்றிலும் மாறான கொள்கையுடைய பாரதீய ஜனதாக் கட்சி பதவிக்கு வந்துள்ளது. ராஜீவ் காந்திக்குப் பிறகு பதவியிலிருந்த காங்கிரஸ் கட்சி அரசுகள் மட்டுமன்றி, எதிர்க்கட்சிகளும்கூட இலங்கை தொடர்பான முந்திய கொள்கையை மாற்றிக் கொள்ளவில்லை. இப்பொழுது பதவிக்கு வந்துள்ள பாரதீய ஜனதாக் கட்சியும் அதே கொள்கையை மாற்றமில்லாமல் பின்பற்றவிருப்பதாக தெரிய வந்துள்ளது. தற்பொழுது இந்தியாவுக்குச் சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளிடம் இதையே இந்தியத் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.


ஒப்பந்தங்கள் செய்வதும் அவைகளை மறுதலிப்பதும் இலங்கைத் தலைவர்களுக்கு கைவந்த கலை. வாக்குறுதிகளும் அவ்வாறே மீறப்படுகின்றன. ஆனால் இந்தியாவில் பதவிக்கு வரும் அரசுகளும் தலைவர்களும் தங்களுக்கு முன் பதவியிலிருந்த அரசுகள் வெளிநாடுகளுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களை மாற்ற முனைவதில்லை. அவ்வாறு முனைவதானாலும் சம்பந்தப்பட்ட நாட்டுடன் தொடர்பு கொள்ளப்படுகிறது.

இந்தியாவுடனானாலென்ன, வேறு சீனா, ஜப்பான் போன்ற எந்த நாட்டுடனானாலும் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தம் நாட்டு நலனுக்கு உகந்ததாக இல்லை என்று கருதப்படுமானால், குறித்த நாட்டுடன் முறையாகத் தொடர்பு கொண்டே இருதரப்பு கலந்துரையாடலின் பின்னரே அது முடிவு செய்யப்பட வேண்டும். இலங்கையில் போன்று தேர்தலுக்காகவும் தேர்தல் பரப்புரைகளுக்காகவும் ஒப்பந்தங்களை மீறுவதும், அறிவிப்புக்களை விடுவதும் நாட்டுக்கு நல்லதல்ல. பிற நாடுகள் மத்தியில் நாட்டின் மதிப்பை உயர்த்துவதற்கு பதில் குறைப்பதாகவே அது அமையும். சர்வதேசம் நம்மை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருப்பதை உதாசீனம் செய்துவிட முடியாது.

# எத்தனை ஆயிரம் கொலைகளையும் பௌத்தத்துக்காகச் செய்யலாம்

## புத்த பகவானின் வழி வந்தவர்களின் தத்துவம்

கனல்



கடந்தவாரம் ராவய சிங்கள இதழில் திசரணி குணசேகர என்ற பத்தியாளர் பௌத்தம் தொடர்பிலான ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். அதில் சிங்கள பௌத்தத்தின் உளவியலையும் அதன் உருவாக்கத்தையும் உள்நுழைந்து உடைத்து விமர்சித்திருந்தார். அந்தக் கட்டுரையின் தொடக்கத்தின் சிறுபகுதி இவ்வாறுதான் அமைந்திருந்தது.

துட்டகைமுனு மன்னன் தனது முதலாவது போராட்டத்தை அவனது குடும்பத்தினுள்ளேயே மேற்கொண்டதாக மகாவம்சம் குறிப்பிடும். அந்தத் தகவலின்படி துட்டகைமுனு தன் இளைய சகோதரரான திஸ்ஸவுக்கு எதிராகவே முதலில் போராடினான். அதன்பின் தன் அரச கிரீடத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக குறுநில மன்னர்களுக்கு எதிராகவும் இறுதியாக எல்லாள மன்னனுக்கு எதிராகவும்போர் செய்தான்.

மகாவம்சம் தரும் ஆதாரங்களின்படி இந்த உள்நாட்டுப் போரின்போது ஆயிரக்கணக்கான அப்பாவி உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு போரில் இறந்துபோனவர்கள். கொடூரமான முறையில் கொல்லப்பட்டவர்கள் தொடர்பாக எந்தக் குறிப்பையும் மகாவம்சம் தரவில்லை. தமிழ் மன்னன் எல்லாளனுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போரின் போது இடம்பெற்ற படுகொலைகளினால் துட்டகைமுனுவின் மனம் அதிர்ச்சிக்குள் ளாகியிருந்ததென மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்காக மன்னன் மனவேதனை கொள்ளவோ அல்லது அச்சமடையவோ தேவையில்லையென தேரர்கள் அவனைத் தேற்றியுள்ளனர். இந்தச் செயற்பாட்டினால் மன்னன் சுவர்க்கலோகம் செல் லும் பயணத்துக்கு எந்தத் தடையும் வரப்போவதில்லை எனவும் கூறப்பட்டது.

உங்களால் கொல்லப்பட்டிருப்பது மனிதர்கள் மாத்திரமே. ஒருவர் மும்மணிகளின் ஆசீர்வாதம் பெற்றுச் சென்றவர். மற்றையவர் பஞ்சசீலம் மாத்திரம் மேற்கொண்டவர். ஏனையவர்கள் பௌத்தத்தைத் தழுவாத மூட நம்பிக்கை கொண்டவர்கள். அத்துடன் இந்தத் தரப்பினர் மிருக இனத்தைச் சேர்ந்தவர்கள். இப்படியாக நாட்டின் மன்னன் செய்த கொடுஞ்செயலை ஆசிர்வதிக்கிறது மகாவம்சம்.

இவ்வாறு சிங்கள ஊடகங்களில் இயங்கும் முக்கிய பத்தியாளரின் கருத்து வெளியாகியிருக்கிறது. இதிலிருந்து நாமும் இலங்கை வரலாற்றில், கொலைகள், படுகொலைகள், நியாயப்படுத்தப்படும் உளநிலையைச் சில விமர்சனத்தோடு முன்வைக்கலாம்.

மகாவம்சத்தில் போரொன்றின்போது இடம்பெற்ற மனிதக் கொலைகள் பாவத்தை தரும் செயலல்ல. அது சொர்க்கம் செல்வதற்கான வழி என்ற புதிய மாயை கட்டியெழுப்பப்படுகின்றது. இந்த மனோபாவம் மொத்த சிங்கள மக்களின் உளவியலையும் பழி, பாவங்களுக்கு அஞ்சாத மனநிலை நோக்கி வழிப்படுத்துகின்றது. சமூகப் பண்பாட்டு உருவாக்கத்தில் ஐதீகங்களுக்கு முக்கிய பங்கிருப்பதால், சிங்கள சமூகப் பண்பாட்டு உருவாக்கத்தை சிருஷ்டிப்பு செய்ததில் மகாவம்சம் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டதை மறுக்கவியலாது.

எதன்பொருட்டும் உயிரொன்றைக் கொல்லுதல் மிக உச்சமான பாவச் செயல் என்ற எண்ணம் கருத்திலெடுக்கப்படாமைக்கு இதுவும் ஒரு காரணம்.

உலகளவில் மிக உன்னதமான நம்பிக்கைகளையும், ஐதீகங்களையும், வாழ்க்கை நெறிகளையும் போதிக்கின்ற தத்துவம் பௌத்தம். இது இலங்கை மற்றும் மியன்மாரில் மதமாகிப் போனமை கீழைத்தேய தத்துவங்களில் நடந்த கொடுமைகளுள் ஒன்று. உயிர்க் கொல்லாமை, புலால் உண்ணாமை உள்ளிட்ட முக்கிய மனிதப் பண்புகளைப் போதிக்கும் பௌத்தம் இலங்கையில் பரவத் தொடங்கிய காலத்திலேயே, மாபாவங்களாகப் பௌத்தம் குறிப்பிடும் குற்றங்களை மகாவம்சம் நியாயப்படுத்தியே வந்திருக்கின்றது. பௌத்தத் துவமாகிய மதத்தையும், அரச இறையாண்மையாகிய கிரீடத்தையும் பாதுக் காப்பதற்காக உயிர்களைக் கொல்வதொன்றும் தவறானது அல்ல எனவும், அவ்வாறான கொலைகளே சொர்க்கத்துக்கான வழியைத் தரும் எனவும் இலங்கையின் வரலாற்றையும், பௌத்தத்தின் வரலாற்றையும் தரும் மகாவம்சம் நியாயப்படுத்துகின்றது.

இந்த வரலாற்றுப் போதனையை நிகழ்த்தியவர் யாரென்று பார்த்தால் அவரும் ஒரு பௌத்தத் துறவி என்பது தான் வியப்பான விடயம். புத்த பகவான் போதித்த அதே தத்துவ முகாமுக்குள் இருந்து வந்த மகாஞான துறவியானவர் இலங்கையில் எழுதிய வரலாற்றின் படியே, சிங்கள சமூகத்தின் பண்பாட்டு கருத்துருவாக்கம் நிகழ்ந்துள்ளது. அதன்படி பௌத்த மதத்துக்காகவும், அரச கிரீடத்துக்காகவும் எந்தக் கொலையையும், எத்தனை ஆயிரம் கொலையையும் செய்யலாம். பௌத்தரல்லாதவர்கள் அல்லது பௌத்தத்தை ஏற்காதவர்கள் மிருகத்திலும் கீழானவர்களாக மதிக்கப்படவேண்டியவர்கள் என்கிற பொதுப் புத்தியை ஒவ்வொரு சிங்களவர் மனதிலும் ஆழமாகப் படியவைத்ததில், பௌத்த சமய, வரலாற்று இலக்கியமான மகாவம்சத்திற்கு முக்கிய பங்கிருக்கின்றது.

அதன் வழியில் நின்றே இலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மை இனத்தவர்கள் காலம் காலமாக பெரும்பான்மை இனத்தவர்களால் படுகொலைக்குள்ளாக்கப்படுகின்றனர். அடித்துத் துவம்சம் செய்யப்படுகின்றனர். அதற்கு மகாவம்சம் தரும் கொலைகளுக்கான விளக்கம் பொருத்தமானதாக சிங்களவர்களால் பார்க்கப்படுகின்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு, இற்றை வரைக்கும் நீடிக்கும் சிறுபான்மை இனங்கள் மீதான அனைத்து ஒடுக்குமுறைகளின் போதும், இந்த மகாவம்சக் கற்பிதம் பெரும் செல்வாக்கு செலுத்தியுள்ளதை நினைவுபடுத்திப் பார்க்கலாம். 1977 ஆம் ஆண்டுக் கலவரம், 1983 ஆம் ஆண்டுக் கலவரம், 2009இன் கோரமான படுகொலை முடிவு வரைக்கும் இந்தப் பொதுப் புத்தி பெரும்பான்மையினத்த வர் மனங்களில் பிரயோகமாகியிருப்பதை கூர்ந்து அவதானிக்க முடியும். அவர்கள் 2009 ஆம் ஆண்டில் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்திய வன்முறைகள் உலகமே பதைபதைக்கும் கொலைகளுக்கும், உயிர் கொலை முறைகளுக்கும் தனியொரு விம்பத்தை வழங்கியுள்ளது. அதன் பின்னரான குற்றச்சாட்டுக்களின் காலத்தில், அந்தக் கோரக் கொலைகளுக்காக சிறிதளவேனும் மனவருத்தமோ, உளப்பாதிப்போ அடையாமல் தொடர்ந்தும் ஒடுக்குவதற்கு துணிந்து நிற்கும் மனநிலையையும் இந்த மகாவம்ச ஐதீகம் தான் வழி சமைத்திருக்கின்றது. ஆயினும் பெரும்பான்மையினத்தவரின் இந்த உளப் போக்கு, ஒடுக்குமுறைக்கு உள்ளாகின்றவர்கள் மீதான சர்வதேச அனுதாபத்தையே தொடர்ந்தும் ஏற்படுத்துகின்றது. மதம், அரசு சார்பாக நிகழ்த்தப்படும் வக்கிரங்கள் இன்று உலகம் முழுதும் பரந்துபட்ட பொதுப் பிரச்சினையாகவே பார்க்கப்படுகின்றது. அதில் இஸ்லாமியப் பயங்கரத்துக்கு அடுத்த நிலையில் பௌத்தம் முன்மொழியப்படுகின்றது. இலங்கையைவிட பௌத்தர்கள் அதிகம் வாழும், மியன்மாரில், சிறுபான்மை முஸ்லிம்கள் மீது பெரும்பான்மை பௌத்த துறவிகள் மேற்கொள்ளும் வன்முறைகள் மிலேச்சத்தனமானவை. உலகின் முன் இஸ்லாமியக் கொடூரம் முன்னிற்பதால், அவ்வப்போது வரும் செய்திகளோடு பௌத்தத் துறவிகளின் வன்முறைகள் அடங்கிப் போகின்றன.

ஆயினும் உலகத்தவரின் நேரடியான பார்வையின் கீழேயே இந்த வன்முறைகள் நிகழ்கின்றன என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். உலகத்தவர்களின் இந்த அவதானிப்புகள் என்றோ ஒரு நாள் ஒடுக்குமுறைக்குள்ளாகும் இனங்களுக்கு சுபீட்சத்தை ஏற்படுத்தித் தரும் என்ற நம்பிக்கையை மட்டும் தளரவிடக்கூடாது.

■ ம.பகீரதன்

# வறட்சியை எதிர்கொள்வோம்


இந்த ஆண்டு என்றுமில்லாதவாறு வடக்கு வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளது. சில பிரதேசங்களில் மக்கள் நீண்ட தூரம் சென்று நீரைப் பெற்றுக்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. மக்கள் திணைக்களங்களால் விநியோகிக்கப்படும் நீரைப் பெற்றுக்கொள்ள நீண்ட நேரம் காத்து நின்று முண்டியடிப்பதைக் காண முடிகின்றது. கால்நடைகள் நீருக்காக அங்குமிங்கும் அலைந்து திரிகின்றன. பருகுவதற்கு நீரின்றி பல கால்நடைகள் இறக்கின்றன. சில பிரதேசங்களில் குளங்களில் எஞ்சியுள்ள சேற்று நீரை தாக மிகுதியால் பருகும் கால்நடைகள் நோய் வாய்ப்பட்டு பரிதாபமாக இறக் கின்றன மற்றும் விவசாயம் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது இங்கே ஓரளவு மழை பெய்துள்ள போதிலும் இன்னும் இரண்டு மாதங்கள் (ஒக்ரோபர் மாதம் இறுதி வரை) வடக்கில் தொடர்ந்தும் வறட்சியே நிலவும் என வானிலை அவதான நிலையம் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது. இப்போதே இவ்வளவு வறட்சி என்றால் இன்னும் இரண்டு மாதங்களுக்கு வறட்சியினால் ஏற்படப் போகும் தாக்கத்தை சொல்லிப் புரிய வேண்டியதில்லை. இந்த நிலை நீடித்தால் நீராடுதல், உடைகள், பாத்திரங்கள் சுத்தம் செய்தல், வீடுகளைச் சுத்தம் செய்தல் போன்ற அன்றாட தேவைகளுக்கு நீரைப் பெற்றுக் கொள்வதே மிகப்பெரும் போராட்டமாக இருக்கப் போகின்றது.

வறட்சிக் காலத்தில் வறட்சி, வறட்சி என்று சொல்லிக் கொண்டிருப்பதால் எந்தப் பயனும் ஆகப் போவதில்லை. முன்கூட்டியே நாங்கள் மேற்கொள்ளும் சில நடவடிக்கைகளால் எதிர்காலத்தில் ஏற்படும் வறட்சியைத் தவிர்க்கலாம் அல்லது குறைக்கலாம்.

மழை காலங்களில் கட்டாயம் ஒவ்வொருவரும் தங்கள் வீட்டில் அல்லது காணிகளில் மழை நீர் தேங்கி நிற்பதற்கு ஆவன செய்ய வேண்டும். நாங்கள் எல்லோரும் எங்கள் வீட்டு முற்றத்தில் சிறிதளவு மழை நீர் தேங்கி நின்றாலே அதனை வாய்க்கால் வெட்டி வீதிக்கு அனுப்பி விடுவோம் அல்லது வெள்ளம் தேங்கும் பள்ள இடங்களை மண் கொண்டு மூடி மேடாக ஆக்கி விடுவோம்.

வீடுகளில் சேரும் மழை வெள்ளம் மழை நின்று இரண்டு அல்லது மூன்று நாள்களில் முற்றாக வற்றி விடும். இவ்வாறு வெள்ளம் தேங்கி நிற்பதால் சில வேளைகளில் எங்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தலாம். ஆனால் நாங்கள் வறட்சிக் காலத்தில் நீருக்காக அடையும் அசௌகரியங்களுடன் ஒப்பிடும் போது இது ஒரு பொருட்டே அல்ல. இவ்வாறு நீர் தேங்கி நிற்கும் அந்த இரண்டு அல்லது மூன்று நாள்களில் நுளம்புப் பெருக்கமும் ஏற்படப் போவதில்லை. இவ்வாறு நீர் தேங்கி நிற்பதனால் நிலத்தடி நீர் சேமிக்கப்படுகின்றது. இதனால் எமது வீட்டுக் கிணறுகளில் கோடை காலத்திலும் நீரைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.



மற்றும் இப்போது வீடுகளின் முன்னுள்ள முற்றங்களுக்கு கல் பதிக்கும் அல்லது சிமெந்தினால் நிலம் இடும் வழக்கம் அதிகரித்துள்ளது. இதனால் எங்கள் வீடுகளிலுள்ள முற்றங்களின் அளவு குறைந்து போவதனால் மழை காலங்களில் நிலத்தினால் உறிஞ்சப்படும் நீரின் அளவு குறைந்து மழை நீர் வீணாக வீதிக்குச் சென்றுவிடுகின்றது. எனவே இந்தச் செயற்பாடுகளை தவிர்ப்பதனால் நிலத்தடி நீர் சேமிக்கப்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

மற்றும் நாங்கள் வீடுகளில் பூமரங்களை வைத்து எவ்வளவோ நீரை இறைத்து வளர்க்கின்றோம். இந்த பூமரங்களுடன் ஒவ்வொருவரும் குறைந்தது ஒரு வேப்பமரம் அல்லது தேக்கு அல்லது மலைவேம்பு போன்ற பெரிதாக வளர்ந்து சூழலுக்கு மிகப் பெரிய நன்மையை எதிர்காலத்தில் வழங்கும் மரக்கன்றுகளை வளர்த்தல் வேண்டும். இந்தக் கன்று களை வீடுகளில் அல்லது வெற்றுக் காணிகளில் நாட்டி குறைந்தது கிழமைக்கு ஒரு நாள் வீதம் நீர் பாய்ச்சி ஒரு வருடம் வளர்த்து விட்டோம் என்றால் அதன் பின் இந்த வகை மரங்கள் தானாகவே வளர்ந்து விடும். இவ்வாறு செய்வதனால் மரங்கள் நிறைந்து இயற்கைச் சமநிலை பேணப்படும் ஒரு பிரதேசமாக எங்கள் யாழ்ப்பாணத்தை மாற்றி எமது அடுத்த சந்ததியினரிடம் கையளிக்க முடியும்.

இவ்வாறு மரங்கள் வளர்க்கப்படுவதால் இயற்கைச் சமநிலை பேணப்பட்டு மழை வீழ்ச்சியும் அதிகரிக்கும்.

அத்துடன் இப்போது இருக்கும் மரங்களையும் நாம் மிகவும் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். மிக மிக தவிர்க்க முடியாத அல்லது அத்தியாவசியமெனில் மட்டுமே மரத்தைத் தறிக்க வேண்டும். அவ்வாறு ஒரு மரத்தைத் தறிக்கின்றோம் எனின் அதற்குப் பதிலாக குறைந்தது இரண்டு மரங்களையாவது புதிதாக நட வேண்டும்.

**இனி அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக நோக்கலாம்**

வல்லை வெளியில் மழை காலங்களில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் போன்ற பிரதேசங்களிலிருந்து வெள்ள நீர் ஓடி வந்து இங்கு தேங்கி நிற்பது வழமையாகும். வெள்ளம் அதிகரிக்கும்போது தொண்டமானாற்றிலுள்ள வான் கதவு மூலம் மிகை வெள்ளம் கடலுக்குள் திறந்து விடப்படும். இந்த வல்லைவெளியின் ஆழமானது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. எனவே வல்லை வெளியை கனரக வாகனங்களின் துணையுடன் ஆழப்படுத்துவதன் மூலம் அதில் சேமிக்கப்படும் வெள்ளநீரின் அளவை பெருமளவு அதிகரிக்கலாம். இதனால் மேலதிக நீர் கடலுக்குள் வீணாகத் திறந்து விடப்படுவதைத் தவிர்க்கலாம். அத்துடன் வடமராட்சி வடக்கு போன்ற இடங்களில் கடலுடன் வீணாகக் கலக்கும் மழை நீரையும் பெரிய கால்வாய்கள் மூலம் திசை திருப்பி இதில் சேமிப்போமாயின் எமக்கு என்றுமே வறட்சி இருக்காது. இதனால் வருடம் முழுவதும் இதில் நீர் வற்றாது காணப்படும். இவ்வாறு நாம் ஒரு நீர்த் தேக்கத்தை உருவாக்குவோமாயின் இதனைச் சுற்றியுள்ள வயல் வெளிகளில் சிறு போக நெற்செய்கையும் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். மற்றும் இந்த நீர்த் தேக்கத்தை அண்டிய பிரதேசங்களில் நிலத்தடி நீர் பெருமளவு உயர்வதுடன் கோடை காலங்களிலும் கிணறுகள் வற்றாது காணப்படும்.

அத்துடன் ஏனைய பிரதேசங்களில் காணப்படும் குளங்களை இப்போதே ஆழப் படுத்துவதன் மூலம் மழை காலங்களில் கூடிய மழை நீரைச் சேமிக்கக் கூடியதாக இருக்கும். இதனால் இந்தக் குளங்களை அண்டிய கிணறுகளில் கோடை காலங்களிலும் நீரைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதுடன் இந்தக் குளங்களிலிருந்து கால்நடைகளும் நீரைப் பருகக் கூடியதாக இருக்கும்.

மேலும் மழை காலங்களில் வீட்டுக் கூரைகளிலிருந்து விழும் நீரைச் சேமித்து வைப்பதற்கு பெரிய நீர்த் தாங்கிகளை ஒவ்வொரு வீட்டுக்கும் வழங்குவதன் மூலம் அவர்கள் மழை காலங்களில் நீரைச் சேமித்து வைத்து கோடை காலங்களில் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.

மழை காலங்களில் இயற்கை அன்னை எமக்கு அளிக்கும் மழை நீரில் ஒரு துளி நீரையேனும் நாம் வீணாகக் கடலுக்குச் செல்லவிடாது சேமிப்போமாயின் எமக்கு என்றும் வசந்த காலமே!





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: எந்தவொரு வேலையையும் ஒருமுறைக்கு பலமுறை சிந்தித்துச் செய்து வெற்றி பெறலாம். மனதில் தெம்பு உண்டாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சிகள் சாதகமான பலன் தரும். பணவரத்து அதிகரிக்கும்.



**இடபம்**: தொழில் வியாபாரத்தில் வங்கி தொடர்பான காரியங்களைச் செய்வது நல்ல பலன் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பண வரத்து திருப்தி தரும். ஆனால் எதிர்பார்த்த அளவு இருப்பது கடினம். புத்தி சாதுரியத்தால் எல்லாவற்றையும் சமாளித்து வெற்றி காண்பீர்கள்.



**மிதுனம்**: வாழ்க்கை துணையுடன் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. வழக்குகளில் சாதகமான நிலை காணப்படும். முயற்சிகள் சாதகமான பலன்தரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வீண் பிரச்சினைகளில் ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது.



**கடகம்**: உங்களது கருத்துக்கு மற்றவர்களிடம் வரவேற்பு இருக்கும். பணவரத்து இருக்கும். தடைப்பட்ட காரியங்களை மீண்டும் செய்து முடிக்க தேவையான முயற்சிகளை மேற்கொள்வீர்கள். மனதில் புதிய உற்சாகமும், தைரியமும் உண்டாகும்.



**சிங்கம்**: தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலை செய்யும் இடத்தில் இருந்த பிரச்சினைகள் குறையும். அலுவலகம் தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கலாம்.



**கன்னி**: குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் குறையும். குழந்தைகள் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். புதிய நண்பர்களின் சேர்க்கை தடைப்பட்ட சுபகாரியங்களைச் செய்து முடிக்க மீண்டும் முயற்சிகள் மேற்கொள்வீர்கள்.



**துலாம்**: கொடுத்த வாக்கைக் காப்பாற்றி அதன் மூலம் மதிப்பும், மரியாதையும் கிடைக்கப் பெறுவீர்கள். சிக்கலான சில விடயங்களை சாதுரியமாக பேசி முடித்து விடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் முன்பு இருந்ததை விட முன்னேற்றம் காண்பீர்கள்.



**விருச்சிகம்**: உத்தியோகத்தர்கள் தங்களது சாமர்த்தியமான பேச்சால் எல்லாவற்றையும் திறம்படச் செய்து முடித்து பாராட்டு கிடைக்கப் பெறுவார்கள். தேவையற்ற வீண் பேச்சுக்களைக் குறைப்பதன் மூலம் குடும்பத்தில் அமைதி ஏற்படும்.



**தனுசு**: சாதுரியமான பேச்சின் மூலம் சிக்கலான பிரச்சினைகளையும் தீர்த்து விடுவீர்கள். எல்லா வகையிலும் நல்ல பலன் உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் அதிகரிக்கும். எதிலும் சற்று கூடுதல் கவனமாக இருப்பது நல்லது.



**மகரம்**: தொழில் வியாபாரம் தொடர்பான மனக்கவலை தோன்றி மறையும். அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிலும் நிதானமாகச் செயற்படுவதும் மற்றவர்களை அனுசரித்துப் போவதும் நல்லது.



**கும்பம்**: குடும்பத்தில் இருந்து பிரிந்து சென்ற நபர் மீண்டும் வந்து போவார்கள். அதனால் மகிழ்ச்சி உண்டாகும். கோபத்தைக் குறைத்து இனிமையாகப் பேசுவதன் மூலம் குடும்பத்தில் அனுமதி உண்டாகும். வெளியூர் பயணம் செல்ல வேண்டி இருக்கலாம்.



**மீனம்**: எந்தக் காரியத்தையும் கூடுதல் கவனத்துடன் செய்வது நல்லது. அடுத்தவர்களுக்கு உதவி செய்யும்போது கவனம் தேவை. அடுத்தவர்களிடம் பழகும்போது கவனம் தேவை. நல்லது எது கெட்டது எது என்று பிரித்துப் பார்த்துச் செயற்படுவீர்கள்.

## நாளை

**ஆவணி-11 புதன்கிழமை | 27.08.2014**

திதி: துதியை மு.இ.11.40 வரை
நட்சத்திரம்: பூரம் மு.ப.09.32 வரை
சுபநேரம்: 04.35-06.05 வரை
இராகுகாலம்: 12.05-01.35 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## இறைவனுக்காகவே உறுதியாக நில்

ஒரு சிலர் முன்வந்து கடவுளுக்காக மட்டும் வாழ்ந்து உலகுக்காக சமயத்தைக் காப்பாற்றட்டும். மோகங்களைப் பிறப்பிப்பவர்களாக (ஜனகராக) இருக்கும் நீங்கள், பரமஞானியாக ஜனகரைப் போல் பாவனை செய்து கொள்ளாதீர்கள் (ஜனகர் என்றால் உண்டாக்குபவர் என்பது பொருள். அது ஓர் அரசனின் பெயர், மனத்தால் அனைத்தையும் துறந்துவிட்ட அவர், மக்களின் நலனுக்காக நாட்டைப் பரிபாலித்தார்) நேர்மையாக இரு. 'லட்சியம் எனக்குத் தெரிகிறது. ஆனால் அதை நெருங்க என்னால் முடியவில்லை' என்று கூறு. துறந்து விட்டது உண்மையானால் அதில் உறுதியாக நில். போரில் நூறு பேர் வீழ்ந்துவிட்டாலும் கொடியைக் கையில் பிடித்துக் கொண்டு, உறுதியாக முன்னேறிச் செல். யார் வீழ்ந்தாலும் சரி, இறைவன் இருப்பது உண்மையே, வீழ்ச்சியுற்றவன் தான் வைத்திருக்கும் கொடியைப் பிறரிடம் கொடுத்து விடட்டும். அப்படிச் செய்தால் ஒரு போதும் வீழ்ச்சி நேராது.

நான் நீராடித் தூய்மையாக இருக்கும் போது அழுக்கை எதற்காகப் பூசிக் கொள்ள வேண்டும்? முதலில் விண்ணக உலகை நாடு; பிற அனைத்தையும் விட்டு விடு. உன்னோடு சேர்க்கப்படுவதற்காக எதனையும் வேண்டாதே. அதனை விட்டுவிட்டதற்காக மகிழ்ச்சி அடை. விட்டுவிடு, அதனால் ஏற்படும் வெற்றியை உன்னால் காண முடியாவிட்டாலும் அது தொடர்ந்து வரும் என்பதை அறி. இயேசு பன்னிரு மீனவர்களையே விட்டுச் சென்றார், அவர்கள் ரோமானியப் பேரரசையே உலுக்கி விட்டனர்.

உலகில் மிகச் சிறந்த, மிகத் தூய ஒன்றையே இறைவனின் பீடத்தில் பலி கொடு. முயற்சியே செய்யாதவனைவிட முயற்சியில் ஈடுபட்டு, சிரமப்படுபவன் சிறந்தவன். துறவி ஒருவனைக் காண்பதுகூட இதயத்தைத் தூய்மையாக்குகிறது. இறைவனுக்காகவே உறுதியாக நில். உலகை விட்டுவிடு, கொள்கையை விட்டு விடாதே. உலகத்தைத் துறந்துவிடு, அப்போதுதான் உடல் பிணிப்பு நெகிழ்ச்சி அடையும். அது இறக்கும்போது உனக்கு முக்தி கிட்டும்.

# பிரபஞ்சத்தின் ஆரம்ப காலங்களில் இராட்சத தன்மையுடைய நட்சத்திரங்கள் ஜப்பானிய விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு



பிரபஞ்சத்தின் ஆரம்ப காலங்களில் சூரியனைவிடவும் 100 மடங்கு பெரிய நட்சத்திரங்கள் பல இராட்சதத் தன்மையுடன் இருந்ததாக ஜப்பானிய விஞ்ஞான ஆய்வு மையம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. இந்த இராட்சத நட்சத்திரங்கள்தான் ஆதியில் ஹைட்ரஜனையும், ஹீலியத்தையும் கொண்டு கடினமான இரசாயனக் கூறுகளை உருவாக்கக் காரணமாக இருந்ததாகவும் இந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இராட்சத நட்சத்திரங்கள் இந்த அண்டத்தில் வாழ்ந்தும் மறைந்தும் இருக்கலாம் என்று ஜப்பான் தேசிய வானவியல் ஆய்வு மையத்தின் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்த இராட்சத நட்சத்திரங்கள் வெடித்துச் சிதறி முதல் மூலக்கூறுகளை உருவாக்கி, பின்னர் இது பால் வெளி மண்டலம் மற்றும் பிற்கால நட்சத்திரங்களாக பரிணாமம் அடைந்திருக்க வாய்ப்பு உள்ளதாக கோட்பாட்டையும் முன்வைத்துள்ளனர்.

'ஸ்டெல்லார் ஆர்க்கியா லொஜி' என்ற உத்தியைக் கொண்டு இத்தகைய இராட்சத நட்சத்திரத்தின் இருப்பை இந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். 'Q'' 100180939 என்ற இராட்சத நட்சத்திரம், இதற்கு முன்பாக இருந்த இராட்சத நட்சத்திரம் வெடித்துச் சிதறிய பல மூலக்கூறுகளின் ஒரு பகுதியே, இரசாயன மூலக் கூறுகளுடன் உருவாகி வாயு மேகத்தின் மூலமாக தோன்றியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். இந்த ஆய்வுகள் பிரபஞ்சம் தோன்றிய விதங்கள் பற்றிய புதிய கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுக்கும் என்றும் அவர்களது ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 3 | 4 | 8 | |
| | 3 | | | 8 | | 1 | 6 | 7 |
| | 8 | | | | | 5 | | |
| | 4 | 6 | | | 8 | | 5 | |
| 7 | 9 | | 3 | | 2 | | 4 | 8 |
| | 1 | | 5 | | | 7 | 3 | |
| | | 9 | | | | | 2 | |
| 4 | 7 | 3 | | 6 | | | 1 | |
| | 2 | 8 | 4 | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 4 | 2 | 5 | 3 | 8 | 6 | 9 |
| 2 | 5 | 6 | 9 | 4 | 8 | 1 | 7 | 3 |
| 9 | 3 | 8 | 7 | 1 | 6 | 2 | 4 | 5 |
| 5 | 4 | 2 | 1 | 3 | 9 | 7 | 8 | 6 |
| 1 | 8 | 9 | 6 | 7 | 5 | 3 | 2 | 4 |
| 6 | 7 | 3 | 8 | 2 | 4 | 5 | 9 | 1 |
| 3 | 6 | 1 | 4 | 8 | 2 | 9 | 5 | 7 |
| 8 | 9 | 5 | 3 | 6 | 7 | 4 | 1 | 2 |
| 4 | 2 | 7 | 5 | 9 | 1 | 6 | 3 | 8 |

# உதைபந்தாட்டப் போட்டி மைதானங்களில் குழப்பங்கள் தம்பாட்டி காந்திஜீ சம்பியன், அராலி தொடர் ஒத்திவைப்பு

வலி. வடக்கு, ஓக. 26
போட்டிகள் நடைபெற்றபோது மைதானத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக ஒரு போட்டியில் அணி ஒன்றுக்கு வெற்றி வழங்கப்பட்டதுடன், இன்னொரு தொடரின் போட்டிகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

தீவக உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஊர்காவற்துறை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறைப் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை இருதயராஜ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தம்பாட்டி காந்திஜீ விளையாட்டுக் கழகம் மோதியது.

ஆட்டம் நடந்து கொண்டிருந்த போது இடைவேளைக்கு ஒரு நிமிடம் எஞ்சியிருந்த நிலையில் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை இருதயராஜ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வீரர் ஒருவரின் தலையுடன் எதிரணி வீரரின் தலை தவறுதலாக மோதுண்டது. இதில் காயமடைந்த வீரர் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நடக்கும் போது இரு அணிகளும் கோல் எதனையும் பெற்றிருக்காத போதிலும் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை இருதயராஜ் விளையாட்டுக் கழகம் நியாயமான காரணம் எதுவும் இன்றி போட்டியில் தொடர்ந்து விளையாடாது பகிஸ்கரித்த நிலையில் ஏற்பாட்டாளர்கள் வெற்றியை எதிரணியான தம்பாட்டி காந்திஜீ விளையாட் டுக் கழகத்துக்கு வழங்கினர். இதன் மூலம் இத்தொடரின் இறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற தம்பாட்டி காந்திஜீ விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

அதேவேளை அராலி பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியில் கழகம் ஒன்று மத்தியஸ்தரையும் போட்டி ஏற்பாட்டாளர்களையும் தாக்கியமையால் நான்கு பேர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள். காயமடைந்தவர்கள் தனியார் வைத்திசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுள்ளார்கள். இந்தக் குழப்பம் காரணமாகப் போட்டிகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை மாலை பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் அராலி துணைவி சென் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 1:3 என்ற ரீதியில் தோல்வி அடைந்த நிலையில் போட்டி மத்தியஸ்தரை தாக்கியதுடன் ஏற்பாட்டாளர்களையும் தாக்கியுள்ளனர்.

உடனடியாக மைதானத்துக்கு விரைந்த வட்டுக்கோட்டைப் பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வலிகாமம் உதை பந்தாட்ட லீக்குக்கும் போட்டி ஏற்பாட்டாளர்களால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ரி-86)

## இன்றைய ஆட்டங்கள்

இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்தினால் 18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கு நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று காலை 9.30 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறும் அரையிறுதியாட்டத்தில் இமையாணன் எஸ். ஏ. அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை கருணாகரன் அணி மோதவுள்ளது. (ரி-422)

* * *

யாழ். தட்டாதெரு கலாஜோதி நிலைய மைதான திறப்பு விழாவை அடுத்து அங்கு இன்று மாலை கரப்பந்தாட்டப் போட்டி நடைபெறும். வண்ணார் பண்ணை வள்ளுவர் கழகமும் நாவாந்துறை புனித நீக்கலஸ் கழகமும் மோதுகின்றன. (ஓ)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 26
வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வதிரி பொம்மஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி-23)

## அடுத்த சுற்றுக்கு முன்னேறிய மானிப்பாய் ஏஞ்சல் அணி

யாழ்ப்பாணம், ஓக. 26
கொழும்பு மகாநாம கல்லூரி 'பி' அணியை வெற்றி கொண்டதன் மூலம் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி காலிறுதிக்கு முன்னைய ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

கல்ரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கல்ரன் கூடைப் பந்தாட்ட திடலில் நடைபெற்று வருகின்றன.

இதில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற 14 வயதுப்பிரிவு ஆண்களுக் கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து கொழும்பு மகாநாம கல்லூரி 'பி' அணி மோதிக் கொண்டது.

இதில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 65:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னைய ஆட்டத் துக்குத் தகுதி பெற்றுள்ளது.

(ரி-23)

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 26
கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத் தினால் வருடாந்தம் நடத்தப் படும் 30 பந்துப் பரிமாற்றங் களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர் வரும் 30 ஆம் திகதி சனிக் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்கு பெற விரும்பும் அணிகள் அதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி நாளை அல்லது நாளைய தினத்துக்கு முன்னதாக அணி வீரர்களின் விவரங்களையும் இணைத்து அனுப்புமாறு வேண்டப்பட்டுள்ளது.

அதேவேளை நாளை புதன் கிழமை நடைபெறவுள்ள அணி ஒழுங்கு தெரிவில் பங்கு பெறும் அணிசார்பாக முக்கிய பதவி வகிக்கும் அங்கத்தவர் ஒருவர் சமுகமளிக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (ரி)

# இறுதியாட்டத்துக்கு முன்னேறியது அண்ணா சிலையடி 'ஏ' அணி

கரவெட்டி, ஓக. 26
இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்தினால் 18 வயது பிரிவின் கீழ் ஆண்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் அண்ணா சிலையடி 'ஏ' அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

தொடரின் அரை இறுதியாட்டம் நேற்று முன்தினம் இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் இமையாணன் இளைஞர் 'ஏ' அணியை எதிர்த்து அண்ணா சிலையடி 'ஏ' அணியினர் மோதினர். ஆட்டம் தொடங்கியதிலிருந்து அண்ணா சிலையடி'ஏ' அணியினரின் ஆட்டம் ஓங்கியிருந்தது. இதனால் இவர்களின் ஆட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் இமையாணன் 'ஏ' அணியினர் திணறினர்.

ஆட்டம் தொடங்கி 3ஆவது, 7 ஆவதுநிமிடங்களில்அண்ணா சிலையடி 'ஏ' அணி வீரர்களான சிந்துஜன், மாதுளன் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு இமையாணன் இளைஞர் அணிக்கு அதிர்ச்சி கொடுத்தனர். இதனால் இடைவேளையின் போது 2:0 என்ற கோல் கணக்கில் அண்ணா சிலையடி 'ஏ' அணியினர் முன்னிலை வகித்தனர்.

இடைவேளையின் பின்னர் ஆட்டம்தொடங்கியபோதுதமது ஆட்ட வியூகங்களை மாற்றி களம் இறங்கிய இமையாணன் இளைஞர் 'ஏ' அணிக்கு ஏமாற்றமே கிடைத்தது.

அண்ணா சிலையடி 'ஏ' அணியின் பந்துப் பரிமாற்றங்கள் சிறப்பாக அமைய இடைவேளையின் பின்னரும் ஆட்டம் அவர்கள் பக்கமே ஓங்கியிருந்தது. இடைவேளையின் பின்னர் 5ஆவது நிமிடத்திலும், 9ஆவது நிமிடத்திலும் கவிதரன் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட இமையாணன் இளைஞர் அணி நிலைகுலைந்தது. அதன் பின்னரும் அண்ணா சிலையடி 'ஏ' அணி வீரர் சிந்துஜன் 13ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோலைப் போட இறுதியில் 5:0 என்ற கோல் கணக்கில் அண்ணா சிலையடி 'ஏ' அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ரி-422)

# சென்.ஜோசப்பை வீழ்த்தியது சென்.லூட்சிய வி.க. அணி

யாழ்ப்பாணம், ஓக. 26
மன்னார் பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பள்ளிமுனை சென்.லூட்சிய விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட் டத்தில் பனங்கட்டிக்கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பள்ளிமுனை சென்.லூட்சிய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதற்பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும் தமது அணிக்கான கோலினை பெறவேண்டி எதிர் அணியினரின் கோல் பரப்பினை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர்.

இதன் போது பள்ளிமுனை சென்.லூட்சிய விளையாட்டுக்கழக அணி வீரன் யுலி தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கோலைப் போட்டார்.

இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

பனங்கட்டிக்கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணியினர் தமது அணிக்கான கோலைப் பெறக் கடுமையாக போராடினர்.

ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது பள்ளிமுனை சென்.லூட்சிய விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானதும் இரண்டு அணியினரும் தமது அணிக்கான கோலைப் பெற முயற்சி செய்தனர்.

இரண்டு அணியின் பின்கள வீரர்களின் தடுப்பாட்டத்தால் இரண்டு அணியினரும் கோல் பெறும் சந்தாப்பங்களைத் தவறவிட்டனர். இரண்டாம் பாதி ஆட்டம் முடிவதற்கு 10 நிமிடங்கள் இருந்தபோது பனங்கட்டுக் கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணிக்கு ஓர் மேலதிக உதை கிடைத்தது. அதனை அந்த அணி வீரன் சிந்துஜன் கோலாக மாற்றினார்.

இதனால் போட்டி பரபரப்பான கட்டத்தை அடைந்தது. இரண்டு அணியினரும் தமது அணிக்கான கோலைப் பெற கடைசி நிமிடம் வரை போராடினர். ஆனால் அவர்களால் தமது அணிக்காக மேலதிகமாகக் கோல் எதனையும் பெறமுடியவில்லை.

இதனால் ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா ஓர் கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டத்தின் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டது.

இதில் பள்ளிமுனை சென். லூட்சிய விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன்ஆனது.

(ரி-23)

# கேகாலை மாஸ்டா தடகளப் போட்டியில் பதக்கங்களைக் குவித்த யாழ் வீரர்கள்



*பதக்கங்களை வென்ற றஞ்சித்குமார், திருமாறன், மகிதரன்*

யாழ்ப்பாணம், ஓக. 26
கேகாலை மாவட்ட மெய்வன்மை சங்கம் நடத்திய 2014ஆம் ஆண்டுக்கான மாஸ்டா தடகளப் போட்டி கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கேகாலை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் யாழ் மாவட்டத்தைச் சேரந்த மூன்று வீரர்கள் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

35 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான போட்டிகளில் றஞ்சித் குமார் [illegible] தங்கப்பதக்கங்களையும், ஒரு வெள்ளிப்பதக்கத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவர் உயரம் பாய்தல், நீளம் பாய்தல், 110 மீற்றர் தடைதாண்டல் போட்டிகளில் முதலிடங்களைப் பெற்று தங்கப் பதக்கங்களையும், 100மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டார்.

அத்துடன் இ[illegible] சிறந்த த[illegible]ம் தெரிவா[illegible]

இதேவேளை 40 வயதி[illegible] மேற்பட்டவர்களுக்கான உ[illegible]ரம் பாய்தல் போட்டியில் ம[illegible]தரன் இரண்டாம் இடத்[illegible] பெற்று வெள்ளிப்பதக்கத்[illegible]யும்.

நீளம்பாய்தல், முப்பாய்ச்சல் போட்டிகளில் மூன்றாம் இடங்களைப் பெற்று வெண்கலப் பதக்கங்களையும், திருமாறன் 110 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் இரண்[illegible] பெற்று [illegible]தையும்

(ரி-23)

# மழையால் கைவிடப்பட்டது முதலாவது ஒருநாள் ஆட்டம்



இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற விருந்த முதலாவது சர்வதேச ஒருநாள் ஆட்டம் மழை காரணமாக ஒரு பந்து கூட வீசப்படாத நிலையில் கைவிடப்பட்டுள்ளது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, டெஸ்ட் தொடரை இழந்துள்ள நிலையில் 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நேற்று பிரிஸ்டல் மைதானத்தில் ஆரம்பமாகவிருந்தது. ஆனால் முதல் நாள் இரவு தொடக்கமே கனமழை பெய்ததால் நேற்று ஆட்டம் நடை பெறுவது சந்தேகமாகவே இருந்தது. இந்த நிலையில் நேற்றைய தினமும் காலை முதல் மழை பெய்தவண்ணமே இருந்தது. இங்கிலாந்து நேரப்படி மதியம் 1.30 மணி வரை மழை தொடர்ந்து பெய்ததால் போட்டியை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டது. இதனையடுத்து நாணயச் சுழற்சி கூட மேற்கொள்ளப் பட்டிராத நிலையில் ஒரு பந்து கூட வீசப்படாமல் ஆட்டம் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இவ்விரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி கார்டிப்பில் நடக்கவிருக்கிறது. (ரி)




## மது அருந்தாத மகனுக்கு மதுப் போத்தல் பரிசா? கோபப்பட்ட புவனேஸ்வர் குமாரின் தந்தை

மது அருந்தாத தன் மகனுக்கு சாம்பெய்ன் எனப்படும் மதுப் போத்தலை பரிசாக்க கொடுத்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார் இந்திய வேகப்பந்து வீச்சாளரான புவனேஸ்வர் குமாரின் தந்தை.

இங்கிலாந்துக்கு சென்ற இந்திய டெஸ்ட் அணியில் வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார் முதன் முறையாக இடம் பெற்றிருந்தார். இத் தொடரில் இந்திய பந்து வீச்சாளர்களில் அதிக இலக்குகளை வீழ்த்தியவர் இவர் தான். துடுப்பாட்டத்தில் கோஹ்லி, கம்பிர், புஜாரா, தவான் போன்ற முன்னணி வீரர்கள் சொதப்பிய நிலையில், புவனேஸ்வர்குமார் 247 ஓட்டங்களைக் குவித்தார்.

இந்திய அணியில் இத் தொடரில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர்களில் முரளி விஜய் (402), தோனி (349), ரகானேவுக்கு (299) அடுத்ததாக நான்காவது இடம் இவருக்குத் தான். இதனால் தொடர் நாயகன் விருது புவனேஸ்வர்குமாருக்கு வழங்கப்பட்டது. இதற்காக பரிசுத் தொகையுடன், வழக்கமாக இங்கிலாந்து மண்ணில் பரிசளிக்கப்படும் சாம்பெய்ன் என்ற உயர்ரக மதுப்போத்தலும் வழங்கப்பட்டது.

இவ்வாறு தனது மகனுக்கு மதுப்போத்தல் பரிசளிக்கப்பட்டமை தொடர்பாக புவனேஸ்வரின் தந்தையான கிரண் பால்சிங் கூறுகையில்:

கடைசி டெஸ்ட் முடிந்தவுடன் பரிசளிப்புநிகழ்ச்சியைத் தொலைக்காட்சியில் பார்த்தேன். இந்திய அணி மிகப்பெரிய வித்தியாசத்தில் தோற்றமை முக்கிய சோகமாக இருந்தது. அடுத்து புவனேஸ்வருக்கு வழங்கிய பரிசு, அதைவிட என்னை அதிகமாகக் காயப்படுத்தியது. ஏனெனில் எனது மகன் சிகரெட் கூட பிடித்தது கிடையாது. மதுவகைகளை அருந்தாதவன். மது அருந்தும் கோப்பையைக் கூட தொட்டுப் பார்த்திராதவன். அவனுக்கு சாம்பெய்ன் மதுப்போத்தலைக் கொடுத்துள்ளனர். இதை வைத்து புவனேஸ்வர் என்ன செய்யப் போகிறான் என்று தெரியவில்லை. பரிசாக இப்படி மதுப்போத்தல்களைக் கொடுக்கும் கலாசாரம், வேறு எந்த நாட்டிலும் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. இதுபோன்ற செயல்களை நிறுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

புவனேஸ்வர்குமாரின் சகோதரி ரேகா கூறுகையில், எனது சகோதரன் பக்குவம் நிறைந்தவன். சாம்பெய்ன் போத்தலை என்ன செய்ய வேண்டும் என நன்றாகத் தெரியும். இதுகுறித்து புவனேஸ்வரே முடிவெடுப்பார். ஒருவேளை சக அணியினருக்கு கொடுத்திருக்கலாம் என்றார்.

இதுகுறித்து இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் ஊடக இயக்குனர் காலின் கிப்சன் கூறுகையில், எங்கள் அனுசரணையாளர்கள் தான் மதுப்போத்தல்களைத் தருகின்றனர். பரிசாக இவ்வகை மதுப்போத்தல்கள் கொடுப்பது இங்கிலாந்தில் மட்டுமல்ல, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியதீவுகள் மற்றும் நியூசிலாந்திலும் உள்ளது. இந்தியாவில் சில நேரங்களில் மோட்டார்சைக்கிள்கள் வழங்கப்படும். அந்த வழக்கம் இங்கிலாந்தில் இல்லை என்றார். (ரி)

## உசைன் போல்ட் சாதனை




போலந்து நாட்டில் நடைபெற்றுவரும் தடகளப் போட்டித்தொடரில் உலகின் வேகமான மனிதனான உசைன் போல்ட் 100 மீற்றர் தூரத்தை 10 வினாடிகளுக்குள் கடந்து முதலிடம் பிடித்தார். இவர் இந்த சீசனில் 100மீற்றர் தூரத்தை 10 வினாடிகளுக்குள் கடப்பது இதுவே முதல் முறையாகும்.

போலந்தின் வார்சா நகரில் நடைபெற்றுவரும் காமிலா ஸ்கோலிமாவ்ஸ்கா நினைவுத் தடகளப்போட்டிகளில் நேற்று நடந்த 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் ஜமைக்காவின் உசைன் போல்ட், 10 விநாடிக்குள் பந்தய தூரத்தைக் கடந்து முதலிடம் பிடித்தார். மூடப்பட்ட அரங்கில் நடந்த போட்டியில் அவர் அதிவேகமாக ஓடி 9.98 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து சாதனை படைத்தார். இதற்கு முன்னர் 1996ஆம் ஆண்டு நமீபிய வீரர் பிராங்கே பிரெடரிக்ஸ் அதிகாரபூர்வமற்ற உள்ளரங்குப் போட்டியில் 10.05 விநாடிகளில் 100 மீற்றர் தூரத்தைக் கடந்திருந்தமையே சாதனையாக இருந்து வந்தது. தற்போது அந்தச் சாதனையை வார்சாவில் நடந்த போட்டியில் உசைன் போல்ட் முறி யடித்துள்ளார். இந்தப் போட்டியில் அவரது சக நாட்டவரான ஷெல்டன் மிட்சேல் 10.33 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து இரண்டாம் இடத்தைப் பெற் றுக்கொண்டார். போலந்து நாட்டில் நடைபெற்ற பந்தயத்தில் முதன்முறை யாகப் பங்கேற்ற போல்ட் வரும் வியாழக்கிழமை ஜூரிச்சில் தொடங்கும் டயமண்ட் லீக் போட்டிக்கு தயாராகும் விதத்தில் இந்தப் போட்டியில் பங்கேற் றார். உசைன் போல்ட் ஒலிம்பிக் பதக்கத்தை 6 முறை வென்றுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ரி)

## ரென்னிஸ் தொடரிலிருந்து விலகும் நடப்புச் சம்பியன்

அமெரிக்க ஓபன் ரென்னிஸ் தொடரில் இருந்து நடப்பு சம்பியனான ரபெல் நடால் காயம் காரணமாக விலகினார்.

27 வயதாகும் ஸ்பெயினின் ரபெல் நடால் அமெரிக்க ஓபன் ரென்னிஸ் தொடரில் 2010, 2011, 2013 ஆண்டுகளில் பங்கேற்று குறித்த மூன்று ஆண்டுகளிலும் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இதில் 2010 மற்றும் 2013 ஆண்டுகளில் சம்பியன் பட்டத்தை வென்றார்.

2012இல் முழங்காலில் ஏற்பட்ட காயத்தால் தொடரில் இருந்து விலகிய இவர், இந்த ஆண்டு தொடரில் பங்கேற்க இருந்தார். ஆனால், கடந்த ஜூலை 29 இல் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது இவரது வலது மணிக்கட்டில் காயம் ஏற்பட்டது. இது குணமடைவதற்கு 2 அல்லது 3 வாரம் தேவை என்ற நிலையில் சமீபத்திய சின்சினாட்டி, டொரண்டோ தொடர்களில் பங்கேற்றிருக்கவில்லை. இந்தநிலையில் காயம் முழுமையாகக் குணமடையாத காரணத்தால் அமெரிக்க ஓபன் ரென்னிஸ் தொடரில் இருந்தும் விலகியுள்ளார்.

இதுகுறித்து நடால் தனது முகப் புத்தக பக்கத்தில் வெளியிட்ட செய்தியில், விலகல் செய்தியை அறிவிப்பதற்காக வருத்தப்படுகிறேன். இத் தொடரில் சிறப்பாக செயல்படும் எனக்கும், இது கடினமான நேரம் தான். இதைச் செய்வதை தவிர எனக்கு வேறுவழியில்லை. கடினமான பயிற்சியின் உதவியால் மீண்டு வருவேன், எனத் தெரிவித்துள்ளார்.

1968ஆம் ஆண்டு ஆரம்பமான அமெரிக்க ஓபன் ரென்னிஸ் தொடரில், நடப்புச் சம்பியன் ஒருவர் அடுத்த தொடரில் பங்கேற்க முடியாமல் போவது இது நான்காவது தடவையாகும். (ரி)

## உதைபந்தாட்டத்தை வளர்க்க விரும்பும் சச்சின் டெண்டுல்கர்

கிரிக்கெட்டில் சாதித்த இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் இந்திய உதைபந்தாட்ட அணியின் வளர்ச்சிக்காக உதவ உள்ளார். கிரிக்கெட் வரலாற்றில் எண்ணற்ற சாதனைகளைப் படைத்த சச்சின் டெண்டுல்கர் தற்போது உதைபந்தின் வளர்ச்சியிலும் ஆர்வம் காட்ட ஆரம்பித்துள்ளார்.

ஐ.பி.எல்.கிரிக்கெட் தொடரைப் போல, உதை பந்தில் இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) தொடர் ஆரம் பிக்கப்படவுள்ளதுடன் எதிர்வரும் ஒக்டோபர் 12 முதல் டிசம்பர் 20 வரை இத்தொடர் நடக்கவுள்ளது. இதில் சச்சினின் கேரளா பிளாஸ்டர்ஸ் அணியும் களமிறங்குகிறது. அந்த அணிக்காக இங்கிலாந்து அணி வீரர் டேவிட் ஜேம்ஸ் பங்கேற்கவுள்ளார்.

இந்த தொடர் குறித்து ஜேம்ஸ் தெரிவிக்கையில், ஆறு வாரங்களுக்கு முன்னதாக சச்சினுடன் பேசினேன். ஐ.எஸ்.எல். பற்றிய கனவுகள் மற்றும் திட்டங்கள் குறித்து அவர் என்னிடம் கூறினார். இந்தியாவில் உதை பந்தாட்டத்தை இன்னும் பிரபலமாக்கும் எண்ணத்தில் உள்ளார். என்னால் நான் விளையாடும் அணிக்கு சிறப்பான அடித்தளம் அமைக்க முடியும். ஆதனால் ஐ.எஸ்.எல். போட்டியில் சச்சினுடன் இணைந்து பணிபுரிந்து இந்தியாவில் உதைபந்து வளர்ச்சிக்கு உதவுவேன் என்று கூறியுள்ளார். (ரி)

# சம்பியனானது பிரண்ட்ஸ் விளையாட்டுக்கழகம்

யாழ்ப்பாணம், ஒக.26
வவுனியா மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்திய பிரிவு 3இற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பிரண்ட்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியனானது.

வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வடதாரகை விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய பிரண்ட்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் 44.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்த 225 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக சஞ்ஜீவகுமார் 51 ஓட்டங்களையும், டினேஸ்27 ஓட்டங்களையும், ஹெட்டியாரச்சி 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் வடதாரகை விளையாட்டுக்கழக அணி சார்பில் விஜயறூபன் 9 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 33 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், இளம்குமாரன் 9 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 38 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், விதுஷன் 9 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் சுகந்தன் 9 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 44 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், யசிவன் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 39 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

226 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வடதாரகை விளையாட்டுக்கழக அணியினர் 32.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 168 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. இதில் இளம்குமாரன் 20 ஓட்டங்களையும், யசோதரன் 19 ஓட்டங்களையும், விதுஷன் 21 ஓட்டங்களையும், பிரகாஸ் 22 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் பிரண்ட்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் சஞ்ஜவகுமார 7.5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 55 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், ஹெட்டியாராச்சி 7 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், லிங்கேஸ்வரன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 36 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக பிரண்ட்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் சஞ்ஜவகுமாரவும், தொடர் நாயகனாக வடதாரகை விளையாட்டுக்கழக அணி வீரன் சுகந்தனும் தெரிவானார்கள்

(ரி-23)


## மரண அறிவித்தல்



### திருமதி சரஸ்வதி சிவலிங்கம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சிவலிங்கம் நேற்று (25.08.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சிவலிங்கம் அவர்களின் அன்புத் துணைவியும், சிவனேஸ்வரி (இந்தியா), சிவநேசன், சிவமோகன் ஆகியோரின் பாசமிகு அன்னையும், கணேஷ், தமிழினி, குமாரி ஆகியோரின் மாமியாரும், சௌந்தரநாயகியின் அன்புச் சகோதரியும், பாலசுப்பிரமணியம் அவர்களின் மைத்துனியும், சியானந்தன் (இந்தியா), சிவசீலன் (லண்டன்), சிவதர்மினி, சிவதருன், சிவதனுசியா, அஸ்வினி ஆகியோரின் பேர்த்தியும் சாரோனின் பூட்டியும், பவளகேசரி (சித்தப்பா), சுகுமாரி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2014) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாசிவன் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
தகவல்: மக்கள், மருமக்கள்.
077 497 2760
(51242)(6.4)



## மரண அறிவித்தல்

### ஜெயசீலன் அன்னப்பா (மானிப்பாய்)



(முன்னாள் கிளை முகாமையாளர்- மானிப்பாய் பரிஷ் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கம், திட்ட இணைப்பாளர்-Y.M.C.A மானிப் பாய், தென்னிந்திய திருச்சபையின் கொழும்பு திருச்சபையின் நிர்வாக உறுப்பினரும்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கொழும்பு சொய்சாபுர தொடர்மாடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயசீலன் அன்னப்பா நேற்று (25.08.2014) திங்கட்கிழமை கொழும்பில் அகால மரணடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானசிகாமணி அன்னப்பா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற திருமதி தேவஜெயந்தியின் அன்புக் கணவரும், அடம் டிறோஷன் (Edisalt ஸ்தாபனம், கொழும்பு), செல்வி பிறின்சி டிலீஷா ஜெயசீலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி ஜெயந்தி றெனோல்ட் (கனடா), அருட்திரு அன்னப்பா ஜெயக்குமாரன் (மானிப்பாய்), அன்னப்பா ஜெயராஜன் (யாழ்ப்பாணக் கல்லூரி-வட்டுக்கோட்டை), ஜெயரூபன் அன்னப்பா (லண்டன்), ஜெயச் சந்திரன் அன்னப்பா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், றெனோல்ட் ஜெயசீலன் (கனடா), திருமதி இந்திராணி ஜெயகுமாரன் (மானிப்பாய்), திருமதி இவான் ஜலின் ஜெயராஜன் (யாழ்ப்பாண கல்லூரி, வட்டுக்கோட்டை), திருமதி கரல் ஜெயரூபன் (லண்டன்), திருமதி ஜோய் சிவானந்தி ஜெயசந்திரன் (கனடா), விக்டர் தம்பையா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், திருமதி மனோன் மணி மகேந்திரநாதன் மானிப்பாய், காலஞ்சென்ற திருமதி இரட்ணமலர் இரா ஜேந்திரம் ஆகியோரின் பெறாமகனும், முருகையா கனகரட்ணம் (லண்டன்), காலஞ்சென்ற கனகரட்ணம் நாகராசா, காலஞ்சென்ற திரு.திருமதி தம்பையா (புதுறோட் காரை நகர்) ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற ரமேஷ் இராஜேந்திரம் (லண்டன்), செல்வி ரஜினி இராஜேந்திரம் (லண்டன்), சுரேஸ் இரா ஜேந்திரம் (லண்டன்), திருமதி கரல் துளசி இராமலிங்கம் (மாலதி-மலேஷியா), திருமதி கிருஷாந்தி (ஆஸ்திரேலியா), குமார் குட்டித் தம்பி, ரவிச்சோ குட்டித் தம்பி, டிலிப் குட்டித் தம்பி, ஷாமி குட்டித் தம்பி, சயறீன் குட்டித் தம்பி (ஆஸ்தி ரேலியா), திருமதி துஷ்யந்தி கௌரி விசுவநாதன் (மலேஷியா) திருமதி டெலனி பத்மநாதன் (லண்டன்) ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும், வைத்திய கலாநிதி டிலினி சண்முகலிங்கம் (லண்டன்), ரவிராஜன் சண்முகலிங்கம் (பொறியியலாளர்-லண்டன்), திருமதி வைதேகி டினேஷ் ஜெயக்குமாரன் (கொழும்பு), திருமதி பிரியந்தி மதுமிதா டிலக்ஷன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், வைத்திய கலாநிதி லூக் (கனடா), வைத்திய கலாநிதி டினேஷ் ஜெயக்குமாரன் (கொழும்பு), டிலக்ஷன் ஜெயக்குமாரன் (லண்டன்) ஆகியோரின் சிறிய தந்தையும், செல்வி டாலிங்ரன் தபீத்தா ஜெயராஜன் (யாழ்ப்பாண கல்லூரி, வட்டுக்கோட்டை), டிலாந்தி ஜெயச்சந்திரன் (கனடா), விஜித்தா இராமலிங்கம், சங்கீதா இராமலிங்கம், கிருஷிதா இராமலிங்கம் ஆகியோரின் சிறிய தந்தை யும், செல்வி கேஷியா, டினேஷ், ஐசாக் நிதன், டிலக்ஷன் (லண்டன்), செல்வி கிறேஷியா, டினேஷ், செல்வி நித்திலா சண்முகலிங்கம் (லண்டன்), செல்வி நிலானி டிலக்ஷன் (லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (27.08.2014) புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, கல்கிசை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.
T.P: 0777 629 173,
077 650 0007, 077 801 0244.

தகவல்:
அருட்திரு அன்னப்பா ஜெயக்குமாரன்
(சகோதரன்)
(50991) (10.6)


# டோனியைச் சாடும் சப்பல்



இங்கிலாந்து அணியுடனான ஒருநாள் தொடர் கூட ஆரம்பமாகிவிட்ட போதிலும், டெஸ்ட் தொடரில் பெற்ற தோல்விகளுக்கு இன்னமும் விமர்சனங்கள் வந்த வண்ணமே உள்ளன. இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி இழந்தமைக்கு இந்திய அணியின் அணித் தலைவர் டோனியை ஆஸ்திரேலிய முன்னாள் அணித் தலைவரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான இயன் சப்பல் கடுமையாகச் சாடியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது :-

வெளிநாட்டில் இந்திய அணியின் மோசமான செயல்பாடு தொடர்கிறது. இதற்கு டோனி தான் பொறுப்பு. அவர் தொடர் குற்றவாளி ஆவார். இந்திய அணியின் துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பு தொடர்ந்து மோசமாக இருந்து வருகிறது. டோனியின் அணித்தலைமை மிகவும் மந்தமாக இருக்கிறது. ஆஸ்திரேலிய சுற்றுப் பயணத்திலும் இந்திய அணியின் மோசமான நிலை தொடரும். டோனியின் அணித் தலைமை தான் மோசமாக இருக்கிறது என்று பார்த்தால் அவரது இலக்குக் காக்கும் முறை அதை விட மோசமாக உள்ளது. பிடியெடுப்புகளை மேற்கொள்வதில் அவர் அதிக ஆர்வம் காட்டவில்லை. மேலும் அவருக்கும், முதல் சிலிப் களத் தடுப்பாளருக்கும் இடையே யார் பிடியெடுப்பை மேற்கொள்வது என்பதில் குழப்பம் காணப்படுகிறது. மேலும் டெஸ்ட் வீரர்களை தேர்வு செய்வதில் டோனி மிகப்பெரிய தவறு செய்துவிட்டார். ஜடேஜாவை அணியின் முன்னணி சுழற்பந்து வீரராக தேர்வு செய்ததை ஏற்றுக்கொள்ள முடியாது. ஸ்டூவர்ட் பின்னி விஷயத்திலும் அவர் சரியான நடவடிக்கை மேற் கொள்ளவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

அந்நிய மண்ணில் இந்திய அணி டெஸ்டில் தற்போது இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 13 என்ற கணக்கில் இழந்தது. ஏற்கனவே 2011ம் ஆண்டு இங்கிலாந்து மண்ணிலும், அதை தொடர்ந்து ஆஸ்திரேலியாவிலும் இட்யிட் வாஷ் ஆகி இருந்தது. டோனி தலைமையிலான இந்திய அணி வெளிநாடுகளில் 14 டெஸ்டில் தோற்றிருக்கிறது. இங்கிலாந்து மண்ணில் 7 டெஸ்டிலும், ஆஸ்திரேலியாவிடம் 3 டெஸ்டிலும், தென் ஆபிரிக்காவிடம் 2 டெஸ்டிலும், இலங்கை, நியூசிலாந்திடம் தலா ஒரு டெஸ்டிலும் அந்நாட்டு மண்ணில் தோற்று இருந்தது. (ரி)


## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



### முருகேசு பாலசிங்கம்

தோற்றம் 28.05.1938
மறைவு 06.09.2013

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்

என்றும் உங்கள் நினைவுடன்

மாரியம்மன் கோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
குடும்பத்தினர்.
(51196)(10.6)



## தவறவிடப்பட்டுள்ளது

அ.நிரோஜன் (923560378V) என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரமும், வாகன அனுமதிப் பத்திரமும், காப்புறுதி என்பன தவறவிடப்பட்டுள்ளது.

தொடர்பு: 077 538 4992 (51189)(5.6)

## காணி விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் வீதி, தாவடியில் 1 ½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை

தொடர்பு: 077 255 0807 (51194)(10.6)

## விற்பனைக்கு/வாடகைக்கு

LG xxxx ISUIS (Cooler Model) வாகனம் வாடகைக்கு/விற்பனைக்கு உண்டு. (51199)(10.6)

தொடர்பு: 077 844 8630/077670 6797

## ஆசிரியர் தேவை

தரம் 2,3,4,5 மாணவர்களுக்கு கற்பிக்க கூடியவர் தேவை.
* பாடசாலையில் கற்பிப்பவர்கள் விரும்பத்தக்கது.
* இடம் : யாழ். நகர் பகுதி.

075 204 5004 (51200)(10.6)



## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் விஜயராஜன்



சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் விஜயராஜன் 24.08.2014 ஞாயிற்றுக் கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் ரஞ்சினியின் அன்புக் கணவரும், பொன்னம்பலம்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், சிவபாக்கியம், பரமேஸ்வரி இரத்தினபூபதி ஆகியோரின் மருமகனும், நடராசா, தெய்வானைப்பிள்ளை சிவபாக்கியம் ஆகியோரின் பெறாமகனும், சணன், சாரா, நிரோன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

தகவல்:
இரத்தினபூபதி சற்குணநாதன்
(C/16178)(10.6)

# வடக்கு மாகாண சபையின் அமர்வில் முட்டிமோதிக் கொண்ட ஆளும் கட்சி

வடக்கு மாகாணசபையின் அமர்வு கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்றது. இதன் போது வடக்கை கடுமையாக வாட்டி வதைக்கும் வறட்சி தொடர்பிலும், ஐ.நா. விசாரணை தொடர்பிலும் கடுமையான விவாதங்கள் இடம்பெற்றிருந்தன.

சபை அமர்வின் விவாதங்களை உள்ளடக்கிய முதலாவது பகுதி கடந்த 22 ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்தது. அதன் தொடர்ச்சி இன்று வெளியாகின்றது.

வறட்சி தொடர்பான பிரச்சினை சுன்னாகம் கழிவு ஒயிலை நோக்கித் திரும்பியது. எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, சுன்னாகம் பகுதியிலுள்ள கிணறுகளில் கழிவு ஒயில் கலந்துள்ளதாகவும், அதனால் அந்தப் பகுதி பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகவும் குறிப்பிட்டார். இதனை நேரில் சென்று பார்வையிட்டதாகவும், இந்தப் பிரச்சினையை கையாள்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குழு அமைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன் போது அவைத் தலைவர், இவ்வளவு வேலையும் எங்களை விட்டுட்டு நடக்குது என்று தெரிவித்துவிட்டு, மாவட்டச் செயலகத்தில் நடந்த கூட்டத்துக்கு நீங்களும் போனீங்களோ என்று கேட்க அதற்கு தவராசா இல்லை என்று பதிலளிக்க, அப்ப உங்களையும் விட்டுட்டு தான் எல்லாம் நடக்குது என்று அவைத் தலைவர் தெரிவித்தார். தவராசா சிரித்துக் கொண்டே பேசாமலிருந்தார்.

மாகாணசபைக்குச் சமாந்தரமான நிர்வாகம் நடத்துவது சரியா என்ற உரிமைப் பிரச்சினையை அவைத் தலைவர் கிளப்பி விட்டார். இதன் போது எழுந்த முதலமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாத்திரமே இணைத் தலைமை அழைக்கப்படுகின்றது. பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இணைத் தலைமை அழைக்கப்படுவதில்லை என்று கடிந்து கொண்டதுடன், பிரதேச செயலகங்களினால் தமக்கு எந்தத் தகவல்களும் வழங்கப்படுவதில்லை என்று குறைப்பட்டுக் கொண்டார்.

இதன்போது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கேள்வி கேட்க எழும்ப, அவைத் தலைவர் எல்லா உறுப்பினரும் கேட்ட பின்னர் எதிர்கட்சித் தலைவர் பதிலளிக்கட்டும் என்று தெரிவித்தார்.

வறட்சி தொடர்பான விவாதத்தில், விளையாட்டுத்திடல் பிரச்சினையைக் கொண்டு வந்து புகுத்தி விட்டார் ஆளுங்கட்சி உறுப்பினர் ஆனோல்ட். வடக்கு மாகாணத்துக்கு என்று தனியான விளையாட்டு அமைச்சர் இருக்கையில் அவருக்குத் தெரியாமல், ஏதோ சிறு கைத்தொழில் அமைச்சரும், வடக்கு ஆளுநரும், யாழ்மாவட்ட அரச அதிபரும் இணைந்து பழைய பூங்காவில் விளையாட்டுத் திடல் அமைக்கப் போகின்றனராம்.

பத்திரிகைகளில் செய்தி வந்துதான் அமைச்சருக்கே தெரியும். இது வெட்ககேடான செயல் என்று ஆனல்ட் கடிந்து கொண்டார். அத்துடன் முதலமைச்சர், மாகாணசபையின் அதிகார வரம்பு என்ன என்பதை அரச அதிகாரிகளுக்கு படிப்பிக்க வேண்டும் என்றும் சொல்லிக் கொண்டார்.

இதன் பின்னர் மற்றொரு ஆளுங்கட்சி உறுப்பினரான கஜதீபன் உரையாற்றினார். சுன்னாகத்துக் கிணறுகளிலும் ஒயில் வருகின்றது. அந்த ஒயில் பாவிக்கக் கூடியதாக இருந்தால் நாங்களும் அதை விற்று, முஸ்லிம் நாடுகள் போல் பணக்கார நாடாகியிருப்போம் என்று கிண்டல் பீடிகையுடன் தனது பேச்சை தொடங்கினார். தென்னிலங்கையில் ஏற்பட்ட இதே பிரச்சினையை மின்சக்தி அமைச்சரும், இடர் முகாமைத்துவ அமைச்சரும் உடனடியாகத் தீர்த்து வைத்தனர்.

ஆனால் இங்கு அந்தப் பிரச்சினையில் மத்திய அரசு மெத்தனமாகச் செயற்படுகின்றது. மத்திய அரசில் அங்கம் வகிக்கிறம் என்று சொல்லி இங்க இருக்கிறவையும், மத்திய அரசின் மெத்தனதுக்குப் பொறுப்பு என்று எதிர்க்கட்சித் தலைவர் தவராசாவைப் பார்த்து கஜதீபன் சொன்னார்.

அதுக்கு தவராசா பதிலுக்கு ஏதோ முணுமுணுத்தார். தொடர்ந்து கஜதீபன், சுன்னாகத்தில் மின்பிறப் பாக்கி நிலையம், முன்னர் இருந்த கழிவு ஒயில் தொட்டியின் மேல் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு யார் அனுமதி கொடுத்தது என்று கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கும் போதே, எதிர்க்கட்சித் தலைவர் தவராசா தலையை ஆட்டிக் கொண்டிருந்தார். உடனே கஜதீபன், நீங்கள் தலையை ஆட்டி ஆமோதித்தால் மாத்திரம் போதாது என்று அதற்கும் ஒரு கடி வைத்தார்.

அமைச்சர் ஐங்கரநேசன், உள்ளூராட்சி மன்றங்களில் வீட்டில் மலசல கூடம் அமைப்பதற்கு அனுமதி எடுக்கின்றனர். அப்போது மலசலகூட குழி முழுவதும் உள்ளே சிமெந்து பூசப்பட்டிருக்க வேண்டும் என்று சொல்லி அனுமதி வழங்கப்படுகின்றது. ஆனால் பலர் அந்த அனுமதியைப் பெற்றுவிட்டு குழியினுள்ளே சிமெந்தில் ஒரு துவாரத்தைப் போட்டு விடுவார்கள். இதேபோன்று மின்சார சபையினரும் செய்திருக்க வேண்டும். அதன் காரணமாகவே கழிவு ஒயில் மண்ணுடன் கலந்து இன்று நீரில் ஊறியுள்ளது.

இதனைச் சோதனையிட வேண்டும். இந்தப் பிரச்சினையை மின்சார சபை தீர்த்து வைக்காவிட்டால் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று எச்சரித்தார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமித் தாக்கத்தினால், இலங்கை உள்ளிட்ட நாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. ஆனால் ஆபிரிக்க நாடான சோமாலியா சிறிய பாதிப்பையே எதிர்கொண்டது. ஆனாலும் அந்தப் பாதிப்புக் காரணமாக அந்த நாட்டில் பலர் தோல் சம்பந்தமான நோயினால் பாதிக்கப்பட்டனர். அதற்குக் காரணம், சோமாலியாவை அண்டிய கடற்பரப்பில் வல்லரசு நாடொன்று தனது அணுக்கழிவுகளை கொட்டியிருந்தது. சுனாமியின் போது அள்ளி வீசப்பட்டமையினாலேயே தோல் பாதிப்பு ஏற்பட்டது என்று பெரும் குண்டைத் தூக்கிப் போட்ட விவசாய அமைச்சர், மத்திய அரசும் எமது சூழல் அழிவது குறித்து அக்கறையற்றுக் காணப்படுகின்றது என்று சாடினார்.

யாழ். குடாநாட்டின் மூன்று நீரேரிகளில், தொண்டமானாறு நீரேரி தடுப்பணை பெயரளவுக்கு மட்டுமே செய்யப்பட்டுள்ளது என்று உண்மையை போட்டுடைத்த அமைச்சர், அதிலுள்ள சிறு தவறைத் திருத்துவதற்கு தற்போது 100 மில்லியன் தேவை எனவும் இதனை இப்படியே விட்டால் அடுத்த ஆண்டு திருத்தம் செய்ய 500 மில்லியன் தேவை எனவும் தெரிவித்தார்.

மேலும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எனது அமைச்சு அதிகாரிகளிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டு கோவைகளைக் கொண்டு வரும்படி பணிக்க முடியாது என்று காட்டமாகக் கூறிய விவசாய அமைச்சர் இதற்கு அவர் நிர்வாகரீதியில் விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும் எனவும் எச்சரித்தார்.

இதன் பின்னர் ஆளுங்கட்சியின் மற்றொரு உறுப்பினரான அஷ்மின், வடக்கு மாகாண ஆளுநர் இராணுவ ரீதியில் ஒஸ்மானியாக் கல்லூரியில் செயற்பட்டமையை சுட்டிக்காட்டினார். தேசியப் பாடசாலை அல்லாத அந்தப் பாடசாலை குறித்து ஆளுநர் எப்படி தனது கட்டுப்பாட்டினுள் மாகாண கல்வி அமைச்சருக்கு தெரியாமல் நடவடிக்கை எடுத்தார் என்று காட்டமாகக் கேள்வியெழுப்பினார்.

நீண்ட நேரமாகப் பேசுவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார் ஆளுங்கட்சி உறுப்பினர் சித்தார்த்தன். அவைத் தலைவர் அவரைக் காணவில்லை. அதனால் சித்தார்த்தன் பேசுவதற்கு கைஎழுப்பியதை அவர் கண்டுகொள்ளவில்லை. இறுதியில் சித்தார்த்தன் எழுந்து பேசத் தொடங்கியதும், அவைத் தலைவர் அவரை பேசுவதற்கு அனுமதித்தார். சுன்னாகம் கிணற்று நீரில் கழிவு ஒயில் கலப்பு பற்றியே அவரும் குறிப்பிட்டார். இதன் காரணமாக காங்கேசன்துறை வரையிலான நிலத்தடி நீரில் பாதிப்பு ஏற்படக் கூடிய அபாயம் இருப்பதாக தனக்கு ஒரு நிபுணர் தெரிவித்தாக சபையில் குறிப்பிட்டார் அவர். அதனைப் பற்றிய அதிர்ச்சியான விடயங்களையும் அவர் அடுக்கடுக்காக முன்வைத்தார்.

எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றி ஆளுங்கட்சியினர் குற்றச்சாட்டுகளை அடுக்கியிருந்தனர். அதில் கடந்த முறை இடம்பெற்ற நியதிச் சட்ட விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் நீண்ட நேரம் எடுத்தமை தொடர்பிலும் குற்றஞ்சுமத்தியிருந்தனர். இதற்கு அமைச்சர் டெனீஸ்வரன், அவர் (எதிர்க்கட்சித் தலைவர்) வயது போன நேரத்திலும் 6 மணி நேரம் நியதிச்சட்டம் தொடர்பில் எமக்குப் பலவற்றைச் சொல்லியுள்ளார். இதனால் எதிர்கட்சித் தலைவரைப் பற்றி எங்களது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசியதற்கு மன்னிப்புக் கேட்பதாகத் தெரிவிக்க, ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் டெனீஸ்வரனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். தவறுதலாக சேம்சைட் கோல் அடித்து விட்டார் என்றே முணுமுணுத்தனர்.

இதன் பின்னர் பதிலளிக்க எதிர்க்கட்சித் தலைவர் எழும்பினார். எழும்பிய வேகத்தில் அவைத் தலைவர், உங்களுக்கு மூன்று நிமிடம் மட்டும் தான் என்று தெரிவித்தார். அமைச்சர் டெனீஸ்வரனுக்கு நன்றி சொல்லிக் கொண்டு தனது விளக்கத்தை அவர் தொடர்ந்தார். உங்களிடம் இணைந்து போற தன்மை இருந்திருந்தால் உங்களையும் அமைச்சர் கூட்டத்தில் இணைத்திருப்பார் என்று அமைச்சர் டக்ளஸின் செயற்பாட்டை நியாயப்படுத்தினார். அத்துடன் நீங்கள் இப்போது தான் வறட்சி தொடர்பில் தீர்மானம் கொண்டு வந்திருக்கின்றீர்கள். இதற்கு முன்னரே அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை எடுத்து விட்டார் என்று தெரிவிக்க, முதலமைச்சர், நாங்கள் இரண்டு மாதத்துக்கு முன்னரே குடிதண்ணீர் விநியோக நடவடிக்கையை ஆரம்பித்து விட்டோம் என்று தெரிவித்ததுடன், செயலை முன்னரே தொடங்கி விட்டோம். இப்போது பேசுகின்றோம் என்று எதிர்க்கட்சித் தலைவருக்கு பதிலடி கொடுத்தார்.

தேநீர் இடைவேளையுடன் வறட்சி தொடர்பான வாதங்கள் முடிவுக்கு வந்தன. தேநீர் இடைவேளையின் பின்னர் அமர்வு கொஞ்சம் சூடு பிடித்தது. ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சமர்ப்பித்த பிரேரணைகளாலேயே, உள்கட்சி மோதல்களும் தொடங்கின. இனப்படுகொலை தொடர்பிலான பிரேரணையை சிவாஜிலிங்கம் முன்மொழிந்ததுமே, முந்திக் கொண்டு மூக்கை நுழைத்தார் சயந்தன். நாங்கள் இப்போது மூன்றாம் கட்ட போராட்டத்தில் இருக்கின்றோம் என்று சொல்ல முற்படும் போதே, சீறிய சிவாஜிலிங்கம், நான் இப்போது பிரேரணையை முன்மொழிந்திருக்கின்றேன்.

இதனை வழிமொழிந்த பின்னர் தான் இதைப்பற்றி விவாதம் நடத்தலாம் என்று குறிப்பிட்டார். ஆளுங்கட்சி உறுப்பினர் விந்தன் உடனடியாக பிரேரணையை வழிமொழிந்தார். அத்துடன் சிவாஜிலிங்கத்தின் ஏனைய பிரேரணைகளும் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே விவாதம் தொடங்கியது. இதன் போது விவாதத்தை எதிர்க்கட்சியினரே தொடக்கினர். பிரேரணை தொடர்பில் எதிர்க்கட்சியினர் சில குறிப்புச் சொல்ல வேண்டியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் தவராசா தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பெரும்பான்மை உறுப்பினர் ஜெயதிலக உரைநிகழ்த்தினார். துரையப்பா, அமிர்தலிங்கம், லஷ்மன் கதிர்காமர் ஆகியோர் கொல்லப்பட்டமை தொடர்பிலும் விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். இதன் பின்னர் எதிர்க்கட்சி உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், நீங்கள் தமிழ் மக்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளீர்களா அல்லது தமிழ் பேசும் மக்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளீர்களா என்று கேள்வியைத் தொடுத்தார். அத்துடன் ஜனாதிபதி இதுவரையில் எவ்வளவு சேவைகளைச் செய்துள்ளார். ஆனால் நாங்கள் செய்த சேவைகள் என்ன ? மக்களிடமிருந்து பிச்சை எடுத்துவிட்டு மக்களுக்கு என்ன செய்தீர்கள் என்று சூடாக உரையாற்றும் போது, குறுக்கிட்டார் சிவாஜிலிங்கம்.

உங்களுடைய சமூகத்தை கொல்ல கொல்ல நீங்கள் அரசின் காலை நக்கிக் கொண்டிருக்கிறாக்கள்தானே என்று கடுமையாக ரிப்கானைச் சாடி கேள்வியெழுப்பினார். இதன் போது ரிப்கான் இந்தியா உங்களை நல்லா ஏமாற்றுகிறது என்று தெரிவித்ததுடன், இரண்டு சிறுபான்மை சமூகமும் ஒன்று சேர்ந்தாலும், ஜனாதிபதியை ஒன்றும் செய்ய முடியாது என்று தனது அரச விசுவாசத்தை வெளிப்படுத்தினார்.

இதன் பின்னர் எதிர்கட்சித் தலைவர் தவராசா உரையாற்றுகையில்; நாங்கள் எல்லோரும் சத்தியப் பிரமாணம் செய்தே இந்தப் பதவியை ஏற்றுள்ளோம். அதில் இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசுக்கு விசுவாசமாக இருப்பேன் என்றும், அரசியலமைப்பைக் கட்டிக் காப்பேன் என்றும் சத்தியப்பிரமாணம் செய்துள்ளீர்கள். அதற்கு மாறாக பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கும்போது, குறுக்கிட்ட சர்வேஸ்வரன், ஜனாதிபதியும் இந்தச் சத்தியப்பிரமாணத்தை எடுத்துப் போட்டுத்தான் பதவிக்கு வந்தவர். அவர் மாத்திரம் அரசியலமைப்புக்கு அமையவோ செயற்படுகின்றார். இந்த வியாக்கியானத்தை முதலில் போய் அவருக்குச் சொல்லுங்கள் என்று கடிந்து கொண்டார்.

இதன் பின்னர் தவராசா, அரசியலமைப்புக்கு முரணாக இருப்பதால் இந்த விவாதத்திலிருந்து எதிர்க்கட்சியினர் வெளிநடப்புச் செய்கின்றனர் என்று சொல்லி விட்டு எழுந்து சென்றார். ஆனாலும் ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ரயீஸ் மாத்திரம் தொடர்ந்தும் அமர்வில் பங்கெடுத்தார்.

எதிர்க்கட்சியினர் வெளியேறிய பின்னரே ஆளுங்கட்சியினரின் பிடுங்குப்பாடு தொடங்கியது. அஷ்மின், 1974 ஆம் ஆண்டிலிருந்து விசாரிக்க வேண்டும் என்று சொல்கின்றீர்கள். அதன் பின்னர்தான் இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தது. அதனையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி பிரேரணையின் போக்கையே திசைதிருப்பி விட்டார்.

இதன் பின்னர் உரையாற்றிய ஆளுங்கட்சி உறுப்பினர் சிவமோகனும், ஆண்டை நீக்க வேண்டும் என்று சொன்னார். சர்வேஸ்வரன், இந்தப் பிரேரணை தற்போது தேவைதானா என்பதைச் சிந்திக்க வேண்டும். பிரேரணையில் சொல்லப்பட்ட விடயங்களுடன் எல்லோருக்கும் உடன்பாடுதான். ஆனால் அது இப்போது தேவைதானா என்பதைச் சிந்திக்க வேண்டும். இது தொடர்பில் கட்சிக்குள்ளே நிறைய விடயங்கள் பேசப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இதன்பின்னர் உரையாற்றிய விந்தன், இந்தத் தீர்மானம் நான்கு மாதத்துக்கு முன்னரே கொண்டு வரப்பட்டது. இதைப்பற்றி கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் எல்லோருக்கும் அனுப்பப்பட்டது. இதன் போது கட்சித் தலைவர்களிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. இந்த நிலையில் தற்போது இதனை தடுக்கும் வகையில் செயற்படுவது தவறு. தீர்மானம் சரியானது என்று தெரிவித்தார். இதன் பின்னர் ரவிகரன் உரையாற்றுகையில்; முல்லைத்தீவில் போருக்கு முன்னர் இருந்த சனத்தொகைக்கும், தற்போதுள்ள சனத்தொகைக்கும் இடையில் 52 ஆயிரம் பேர் இல்லை என்று புள்ளி விவரங்கள் சொல்கின்றது.

வலிபட்டவனுக்குத்தான் அதனைப் பற்றி தெரியும். நாங்கள் இறுதிக் கட்டப் போரில் துன்பப்பட்டவர்கள். எங்கள் மக்கள் தாங்கள் பட்ட வேதனைக்குத் தீர்வு வேண்டுமென்றே எங்களைத் தேர்வு செய்தவர்கள் என்பதையும் குறிப்பிட்டார். இதன் பின்னர் ஆளுங்கட்சி உறுப்பினர் சயந்தன், நாங்கள் செய்ய வேண்டியது, ஞாலம் கருதிலும் கைகூடும் இடமறிந்து காலத்தால் செய்யின், இது நாங்கள் செய்ய வேண்டியது. ஆனால் நாங்கள் இப்போது செய்தது, நந்தவனத்திலோர் ஆண்டி நாலாறு மாதமாய் குயவனை வேண்டி, கொண்டு வந்தான் ஒரு தோண்டி அதை கூத்தாடி கூத்தாடி போட்டுடைத்தான் என்று மாத்திரம் சொல்லி விட்டு அமர்ந்தார்.

இந்திய இராணுவம் இங்கிருந்த போது, அவர்களுடன் சேர்ந்து இயங்கியது எமது ஆயுதக் குழுவே. எனவே அதனால் பிரச்சினை வரும் என்றால் அதிகம் பாதிப்படைவது நான்தான். இருப்பினும் ஆண்டை நீக்குகின்றேன். அத்துடன் எனது இரண்டு பிரேரணைகளை கைவிடுகின்றேன் என்று குறிப்பிட்டார்.

இதன் போது மீண்டும் எழுந்தார் சயந்தன். இப்போது இவ்வளவு விட்டுக் கொடுப்புக்கு வந்த நாங்கள் எஞ்சிய பிரேரணையையும் ஏன் கட்சித் தலைமையுடன் கலந்தாலோசித்து முடிவு எடுக்கக் கூடாது. நாம் தற்போது இராஜதந்திர ரீதியிலான நகர்வுகளை முன்னெடுக்கும் காலகட்டத்தில் உள்ளோம். பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் போது அதில் கலந்துரையாடப்படும் சகல விடயங்களும் பகிரங்கப்படுத்தப்படுவதில்லை. அதே போன்றுதான், இராஜதந்திர நகர்வில் சகல விடயங்களையும் பகிரங்கப்படுத்த முடியாது. பிரேரணையை இன்றைய தினம் பிற்போட்டு கட்சித் தலைமையுடன் ஆலோசித்து அதனை மீளவும் செயற்படுத்துவோம் என்று தெரிவித்தார். இதன் பின்னர் எழுந்த முதலமைச்சர், சயந்தன் குறிப்பிட்ட விடயத்தை ஆமோதித்தார். உணர்ச்சி பூர்வமாகச் சிந்திக்காமல் அறிவுபூர்வமாகச் சிந்திக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். அத்துடன் பிரேரணையை விசேட அமர்வில் எடுத்துக் கொள்வோம் என்று தெரிவிக்க அது சபையின் ஏகமனதாக முடிவாகியது.

தி. அமுதன்

## மரண அறிவித்தல்

### திருமதி மனோன்மணி பொன்னையா



(ஆங்கில ஆசிரியர், இளைப்பாறிய அதிபர்)

சங்கானை மேற்கு வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், தனிநாயகம் வீதி, கூமாங்குளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட மனோன்மணி பொன்னையா (இளைப்பாறிய அதிபர்) 24.08.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.08.2014 வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கூமாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.03, தனிநாயகம் வீதி,
கூமாங்குளம், வவுனியா.

தகவல்: பிள்ளைகள்.
T.P: 077 348 6458, 077 616 5078,
077 915 2264, 0014163057789

(48978)(10.6)

---

## 45ஆம் நாள் நினைவில்

திருமதி
றெஜீனா கனகம்மா பரம்சோதி



மண்ணில் 31.05.1933

விண்ணில் 13.07.2014

திதி: அபரபட்ச பிரதமை

[illegible]

பேரப்பிள்ளைகள்
மனோகரதாஸ் தர்மதா,
மனோகரதாஸ் மிதுன்பரிசித்,
மனோகரதாஸ் நர்மதா,
மனோகரதாஸ்மேருஜன்பரதன்.

"Paregin Design Group"
100, Amman Road,
Thirunelvely West, Jaffna.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
ராக்கம்மா வெள்ளைச்சாமி

தோற்றம் 08 * 12 * 1940

மறைவு 27 * 07 * 2014

எங்கள் குடும்பத்தின் தெய்வமாய் எம்முடன் ஒருவராய் வாழ்ந்து
சேவையில் சிகரமாய் அன்புவழி காட்டி அறிவு ஊட்டி
எம்மை ஆளாக்கி இன்பமுடன் வாழவைத்து
எம்மைவிட்டுப் பிரிந்து சென்ற உத்தமியே உங்களுக்கு நாம் எழுதும்
இந்த நினைவேடு காலமெல்லாம் நிலைத்திருக்கும்
எங்கள் கண்ணீர் மலர்களுடன் இந்த நினைவஞ்சலியை
உங்கள் பாதக்கமலங்களில் சமர்ப்பித்து வணங்குகின்றோம் அம்மா.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (26.08.2014) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

14/1, துரைராஜா வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(51236) (4.3.6)

---

## வேலையாட்கள் தேவை

கச்சாய் வீதி, சாவகச்சேரியில்
கோழிப்பண்ணை, வீட்டுத்தோட்டம்
பராமரிப்பதற்கு
வேலையாள்கள் தேவை.
தங்குமிடம், சாப்பாடு இலவசம்
30-50 வயதுக்குட்பட்டவர்கள்
விரும்பத்தக்கது.

(47268) (8.4)

தொடர்பு: 076 639 7664, 077 465 0244

---

## வீடு பராமரிப்பாளர் ஒருவர் தேவை (ஆண்)

சிங்கள, ஆங்கில மொழி
தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
தங்குமிட வசதிகள் உண்டு.

தொடர்பு: 021 224 2136

(51241) (3.6.4)

---

## கடை வாடகைக்கு

இலக்கம் 40 (8B) ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம் எனும் முகவரியில்
உள்ள கடை வாடகைக்குண்டு.

(51235) (12.3.6)

தொடர்பு: 077 076 1177

---

## புலமைச்சுடரால் நடாத்தப்பட்ட புலமைப்பரிசில் போட்டி முடிவுகள்

இவ்வருடம் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்காக புலமைச்சுடரால் நடத்தப்பட்ட புலமைப்பரிசில் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர், விவரங்கள் நாளை சுடர் ஒளி, உதயன் பத்திரிகைகளில் வெளியாகின்றன என்பதை புலமைச் சுடர் ஆசிரியர்பீடம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறது.

---

## மரண அறிவித்தல்



கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்
(வெளி-14:13)

### மார்க்கண்டு நாகம்மா (ஆபிரகாம் பெனிக்கியாள்)

வட்டுத்தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு நாகம்மா நேற்று (25.08.2014) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

இவரது இறுதி அடக்க ஆராதனை இன்று (26.08.2014) செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(51198)(10.6)

தகவல்: குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

### கந்தர் கணபதிப்பிள்ளை (ஐயாத்துரை)



மீசாலை வடக்கு, இராமாவில் மத்தி, கொடிகாமத்தைச் சேர்ந்த கந்தர் கணபதிப்பிள்ளை நேற்று (25.08.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் முத்துவின் அன்புக் கணவரும், அமிர்தலிங்கம், யோகலிங்கம், கமலாதேவி, மோகலிங்கம் (பிரதி விவசாய திணைக்களம், திருநெல்வேலி), நிர்மலாதேவி, ஈஸ்வரலிங்கம், பஞ்சலிங்கம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஞ்சமோகன், விஜயபாரதி, ராஜமோகன், புஸ்பரஞ்சி, கலைமகள் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சரண்ஜா, தர்மிஹா, விதுர்ஷா, மாதுரி, மயூரி, அபிசயன், அபித்தியா, அபிராம், சஜங்கன், ஆதித்தன், பிரசாந், டர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிகாமம் கட்டைப் பறிச்சான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(51197)(10.6)

தகவல்:
க. மோகலிங்கம்

---

## மரண அறிவித்தல்

### மதியாபரணம் உத்தமிப்பிள்ளை



ஊர்காவற்றுறை தம்பாட்டியைப் பிறப்பிடமாகவும் பெரிய தம்பிரான் வீதி, வண்ணார்பண்ணை வடமேற்கு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மதியாபரணம் உத்தமிப்பிள்ளை நேற்று (25.08.2014) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் முருகுப்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் புதல்வியும், சுந்தரம்-சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற மதியாபரணத்தின் அன்பு மனைவியும், மல்லிகாதேவி, செல்வரெட்ணம், காலஞ்சென்ற உருத்திராதேவி, இராசரெத்தினம், சண்முகராசா, ஜெயரெட்ணம், கமலாதேவி, சந்திராதேவி, ஜீவரெத்தினம், தருமராசா ஆகியோரின் அன்புத் தாயும், கனகசபாலிங்கம், மங்கையர்க்கரசி, ஜொசினா, கலைமதி, பஞ்சவர்ணம், தவராசா, ஜீவாராஜா, வக்சலாதேவி, தர்சினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2014) செவ்வாய்க்கிழமை நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

23, பெரியதம்பிரான் வீதி,
வண்-வடமேற்கு, யாழ்ப்பாணம். (51191) (10.6)

தகவல்: குடும்பத்தினர்.
077 406 6063

---

## மரண அறிவித்தல்

### புண்ணியமூர்த்தி காசிப்பிள்ளை (பத்தர்)



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வேலணை புளியங்கூடலில் வசித்தவரும் வாலையம்மன் கோயிலடி கல்வியன்காட்டை தற்காலிக முகவரியாகவும் கொண்டவருமான புண்ணியமூர்த்தி காசிப்பிள்ளை நேற்று (25.08.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான புண்ணியமூர்த்தி-சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம்- சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், நளாயினி (ஜேர்மனி), தயாநிதி, காலஞ்சென்ற கேதாரநாதன், கலாநிதி, கலைச்செல்வி (பவா) பாலினி (ஜீவா), சுகிலநாதன், சுபாசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஷ்யந்தி, சசிக்குமார், தமயந்தி ஆகியோரின் வளர்ப்புத் தந்தையும், வள்ளியம்மை, பூரணம், காலஞ்சென்றவர்களான கந்தசாமி,முருகையா, லட்சுமிப்பிள்ளை மற்றும் சண்முகராஜா, பாலசிங்கம், நாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகபூசணி, அரியேந்திரம், சின்னமணி, இராசரத்தினம், பேரின்பநாயகி, சிவராசா, ரமணி, பாலகெங்காதரன், காலஞ்சென்ற பிரபாகரன், கருணாகரன் (க்ந்தசாமி), சிவபாலன், காலஞ்சென்ற விசுவமூர்த்தி, பேரானந்தம் ஆகியோரின் மைத்துனரும், பால சுப்பிரமணியம் (ஜேர்மனி), தவராஜா, வின்சன்,விஜயன், குகாகரன், சுகந்தி, செல்வி, ரதீஸ் வரன், சங்கீதா, நாகேந்திரராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், கபூரன்(ஜேர்மனி), நிமேஸ், ருஷாணி, சாருகேசன், பிரதிஸ், வின்ஜக்சன், சாரதாயினி, காலஞ்சென்ற தாட்சாயினி, ஜெனிபா, ஜோகதீசன், சியாம், காலஞ்சென்ற குஜிநந், சயானா, காலஞ்சென்ற பந்துசன்,கர்ஷனா, சாம்பவி, ஜஸ்மினி, றொபின்சா, யானு, யதேஸ், ஜினோஸ், பிரவின், மது, சுலக்ஷன், கஜானா பவிஸ் ஆகியோரின் பேரனும், அக்ஷா அவர்களின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

வாலையம்மன் கோயிலடி,
கல்வியங்காடு.

(51240) (5.6)

தகவல்: குடும்பத்தினர்.

# முற்கூட்டியே ஜனாதிபத் தேர்தலை நடத்தினால் வழக்கு தொடரப்படும்

## தேர்தல் ஆணையாளரை எச்சரிக்கின்றார் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா

ஜனாதிபதி தேர்தல் முன்கூட்டி நடத்தப்பட்டால் தேர்தல் ஆணையாளருக்கு எதிராக வழக்குத் தொடர முடியும் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா.

2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதி தேர்தலை நடத்த, தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நடவடிக்கை எடுத்தால், அதற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய சட்டத்தில் இடமுண்டு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உரிய காலத்துக்கு முன்னதாக தேர்தல் நடத்தப்பட்டால் நான் உச்ச நீதிமன்றில் தேர்தல் ஆணையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளேன். நாட்டின் அரசியல் சாசனத்தின் 31.2 சரத்திற்கு அமைய இரண்டு தடவைகள் பதவி வகித்த ஜனாதிபதி ஒருவர் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில்



போட்டியிட தகுதியற்றவராகின்றார் என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட 18ஆம் திருத்தச் சட்டத்துக்கு அமைய 31.2 சரத்து ரத்து செய்யப்பட்டது. எனினும், இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதி பதவியை வகிக்க ஜனாதிபதிக்கு தகுதியுண்டு என்ற சரத்தை 18ஆம் திருத்தச் சட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளடக்கத் தவறிவிட்டார்.

எனவே, 2016ஆம் ஆண்டில் ஜனாதிபதியின் பதவிக் காலம் பூர்த்தியாகும் வரையில் மூன்றாம் தடவையாக ஜனாதிபதி மஹிந்தவால் தேர்தலில் போட்டியிட முடியாது. எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளருக்கு இந்த பிரச்சினை ஏற்படாது. பெரும்பாலும் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பொதுத் தேர்தல் நடத்தப்படக் கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன.

இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதி பதவியை வகிக்க 18ஆம் திருத்தச் சட்டம் அனுமதிக்கவில்லை. அதனால் 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் மூன்றாம் தவணைக்காக போட்டியிடக் கூடிய சாத்தியங்கள் கிடையாது"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## தொடர்ச்சிகள்

### வடமராட்சி

தித்துறை வீதி வழியாக கோஷங்களை எழுப்பியவாறு சுலோக அட்டைகளுடன் பருத்தித்துறை பிரதேச சபை அலுவலகத்துக்குள் நுழைந்து அங்கும் கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தனர். சில நிமிடங்களில் கடமையில் நின்ற பொலிஸார் 7 பேரைத் தவிர ஏனையோரை வெளியேறுமாறு பணித்தனர். பணிப்புரைக்கமைய ஆர்ப்பாட்டக்காரர்கள் நுழைவாயிலில் நிற்க அவர்களின் பிரதிநிதிகள் சிலர் நடந்து கொண்டிருந்த பிரதேச சபை சபா மண்டபத்துக்கு அழைக்கப்பட்டனர்.

அங்கு சபைத் தலைவரிடமும், ஏனைய உறுப்பினர்களிடமும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சார்பில் மருத்துவர் அழகராசா வீதியின் நிலையை விளக்கினார்.

இதற்குப் பதிலளித்த சபைத் தலைவர் பூ.சஞ்ஜீவன், பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குள் 40 கிராமங்கள் 850 வீதிகள் உண்டு. முன்னுரிமை அடிப்படையில் எந்தெந்த வீதிகளைத் திருத்தி அமைக்க வேண்டும் என நாம் திட்டமிட்டுள்ளோம். அந்தத் திட்டத்தில் குடத்தனை - பொற்பதி வீதியே முதலாவதாக இடம்பெற்றுள்ளது. சுமார் 2 கிலோ மீற்றர் தூரமான இவ் வீதியைத் திருத்தியமைக்க 240 இலட்சம் ரூபா தேவைப்படுகின்றது. ஆனால் சபைக்கு போதிய வருமானம் இன்மையால் அவற்றை நிறைவேற்ற முடியவில்லை. இருப்பினும் வேறு வழிகளில் சபைக்கு நிதி கிடைக்கும் பட்சத்தில் இவ் வீதியைத் தான் முதலில் புனரமைப்போம் என உறுதியளித்தார்.

உறுதிமொழியை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏற்றுக்கொண்டு திருப்பிச் சென்றனர்.

குடத்தனை வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும், பொற்பதி கிராம மக்களும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். (த-173)

### புலம்பெயர்

வரப்பட்ட பின்னர் பெருமளவு வெளிநாட்டு மூலதனம் இலங்கைக்குள் வந்துள்ளது. எனினும் புலம்பெயர்ந்த தமிழர்களும் ஊடகங்களும் இதனை பாதிக்கும் விதத்தில் செயற்படுகின்றன.

2009 மே மாதத்திற்கு பின்னர் புலம்பெயர் தமிழர்களின் ஒரு பகுதியினரும், உள்ளூர் - வெளிநாட்டு ஊடகங்களும், இலங்கையின் நலன்களுக்கு ஊறுவிளைவிக்கக்கூடிய பிழையான தகவல்களைப் பரப்பி வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்தாவிட்டால் நாட்டின் கௌரவத்திற்கும், பொருளாதாரத்திற்கும் பாதிப்பு ஏற்படக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பொலிஸ்

இந்தியப் பிரிவினைவாதிகளுடன் இலங்கை பேச்சு நடத்தினால் இந்தியாவின் உணர்வுகள் எவ்வாறிருக்கும்? இந்தியா எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றக்கூடாது. அதாவது பெரியண்ணண் மாதிரிச் செயற்பட்டு அழுத்தங்களைக் கொடுக்கக்கூடாது. எமது நிலைப்பாட்டையே வலியுறுத்த வேண்டும்.

இலங்கையில் 13 ஆவது திருத்தத்தின் கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் பாராட்ட வேண்டும். தமிழர்கள் தாங்கள் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்பதை மறந்து, தம்மை இலங்கையர்களாகக் கருதி இலங்கையின் அரசமைப்பு, சட்டங்களுக்குக் கட்டுப்படவேண்டும். மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரத்தைத் தமிழர்கள் கோரக்கூடாது என்றும் அவ்டாஸ் கௌஷல் தெரிவித்துள்ளார். (த-5)

### முல்லைத்தீவில்

ரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோதும், இவ்வாறு ஒரு போராட்டம் முன்னெடுக்கப் பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் வழக்கு மீளவும் எடுக்கப் பட இருந்தது. இருப்பினும் வழக்கின் முறைப்பாட்டாளர்களான வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் உள்ளிட்ட 12 பேரும் நேற்று நீதிமன்றுக்கு சமுகமளிக்கவில்லை.

ஆனால் இதனை அறியாத போராட்டக்காரர்கள், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலிருந்து நீதிமன்றை நோக்கிப் பேரணியாகச் சென்றனர். புலனாய்வாளர்கள் மற்றும் நெடுங்கேணியிலிருந்து ஏமாற்றி அழைத்துவரப்பட்ட மக்கள் உள்பட அரசுக்குச் சார்பானவர்களைக் கொண்டு நேற்று இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகவும் கோஷம் எழுப்பினர். பேரணியாகச் சென்றவர்களை, நீதிமன்றத்துக்கு 100 மீற்றர் தொலைவிலேயே பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர். அத்துடன் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும் நேரத்திலேயே பேரணியும் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### அவசரமாக

கூட்டத்தில் அமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவினர் சென்னைக்குத் திடீர் பயணம் மேற்கொண்ட நிலையில் இந்த டெசோ அமைப்பின் அவசரக் கூட்டம் நடைபெறுகின்றமை அனைவரினதும் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

### கிளிநொச்சி

அமையும் என்பதால் சர்வதேச குழுவினர் அங்கு செல்கின்றனர் என ஆணைக்குழு வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. எனினும், இதுபற்றி இன்னும் இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை எனவும் அவ் வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

காணாமல் போனோர் குறித்து விசாரணை நடத்தும் ஆணைக் குழுவின் கிளிநொச்சி அமர்வின்போது மனித உரிமை மீறல் சம்பந்தமாகவும் மக்கள் முறைப்பாடுகளை முன்வைக்கலாம். அதற்கேற்ற வகையில் குறித்த ஆணைக்குழுவின் விடயப்பரப்பு ஜனாதிபதியால் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

### போத்தலில்

பொறுப்பதிகாரி லெப்டினன்ட் சந்தண தெரிவித்தார். (த-32)

### வடக்குக்கு

ளாவிய ரீதியில் 2 ஆயிரம் பஸ்கள் பகிர்ந்து வழங்கப்படவுள்ளன. அவற்றில் 70 பஸ்கள் வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை 122 பஸ்கள் ஒவ்வொரு மாகாணத்துக்கும் பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளன.

தற்போது கிடைக்கப்பெற்ற 7 பஸ்களும் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் சாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. குறித்த 7 சாலைகளுக்கும் மேலும் தலா 10 பஸ்கள் வழங்கப்படவுள்ளன என்றும், அவை இந்த ஆண்டு இறுதிக்குள் வழங்கப்படும் என்றும் வடபிராந்திய முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

2 ஆயிரம் பஸ்களும் கடன் அடிப்படையில் இந்திய நிறுவனம் ஒன்றிடம் இருந்து கொள்வனவு செய்யப்படவுள்ளன. அதற்காக 100 கோடி ரூபா நிதி கொழும்பு அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-14)

### நிதி அமைச்சின்

ருக்கு இடையிலான கலந்துரையாடல் அடுத்த மாதம் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு கொழும்பு அரசால் வழங்கப்படும் நிதி ஒதுக்கீடு போதாது என்று வடக்கு மாகாணசபையினால் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அரசால், வடக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்ட நிதி முழுமையாகப் பயன்படுத்தவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் அடுத்த ஆண்டுக்குரிய வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அதற்கு முன்னதாக வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள், பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களுடனான கலந்துரையாடலை நிதியமைச்சின் செயலாளர் டி.பி.ஜயசுந்தர மேற்கொள்ளவுள்ளார்.

அடுத்த மாதம் 5 ஆம் திகதி யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### அடைக்கலநாத

காரணமாகத் தான் இலங்கை வந்து மீண்டும் தமிழகம் செல்கிறார் என்றும், இலங்கைத் தமிழரசுக்கட்சி மாநாடு நெருங்கும் காரணத்தால் மாவை சேனாதிராசா, பொன். செல்வராஜா ஆகியோர் தமிழகம் செல்லாமல் புதுடில்லியிலிருந்து இலங்கை திரும்பினர் - என்று தெரிவித்தார். (ற-சி)

### திறக்கப்பட்டது

அமைந்துள்ள பகுதியில் உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில் இம் மிதக்கும் சந்தை அமைக்கப்பட்டுள்ளது. இராணுவம் மற்றும் கடற்படையினரின் ஒத்துழைப்புடன் இந்த மிதக்கும் சந்தையில் 92 விற்பனைக் கூடங்களுடன் பூங்கா, பொழுதுபோக்கு இடம் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை திறக்கப்படவிருந்த இந்த மிதக்கும் சந்தைக் கட்டடம் சீரற்ற காலநிலை காரணமாக இரண்டு தினங்களுக்கு பிற்போடப்பட்டப் பட்டிருந்தது. (ற)

### தமிழ்

இராஜதந்திர வெற்றியாகவும் அமைந் துள்ளது. எனினும், இதனால் கூட்டமைப்பு திருப்தியடைந்துவிட முடியாது- என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

'13இற்கு அப்பால்' என்ற பதத்தினூடாக மோடி அரசு எதை எதிர்பார்க்கின்றது? 13ஐ அடிப்படையாகக்கொண்டு தீர்வை மேலும் பலப்படுத்த வேண்டுமா அல்லது 13ஐ அடிப்படையாகக்கொண்டு மாற்றுத் தீர்வுப் பொறிமுறை வகுக்கப்பட வேண்டுமா? இதில் மோடி அரசின் எதிர்பார்ப்பு எது என்ற வினாவுக்கு தெளிவான பதில் இல்லை. ஆகவே, கூட்டமைப்புக்கும் இது 'ஐஸ்வாளி' சவாலாகும்.

அதேவேளை, இத்தகைய அழுத்தங்களிலிருந்து விடுபட வேண்டுமானால், இலங்கை அரசு பொலிஸ் அதிகாரத்தை விடுத்தாவது 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு முன்வரவேண்டும். இது தொடர்பில் கூட்டமைப்புடன் பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-சி)

### 'புறநெகும'

உள்ளூராட்சி மன்றங்களுக்கு 151 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை பிரதேச சபைக்கு 10 மில்லியன் ரூபாவும், சரவகச்சேரி பிரதேச சபைக்கு 11 மில்லியன் ரூபாவும், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்கு 10 மில்லியன் ரூபாவும், வலி.வடக்கு பிரதேச சபை, நல்லூர் பிரதேச சபை, ஊர்காவற்றுறை பிரதேச சபை, சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை நகர சபை, காரைநகர் பிரதேச சபை என்பவற்றுக்கு தலா 8 மில்லியன் ரூபாவும், வலி.தெற்கு, மேற்குப் பிரதேச சபை, வேலணை பிரதேச சபை, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, வலி.தெற்கு பிரதேச சபை, வலி.மேற்கு பிரதேச சபை, நெடுந்தீவு பிரதேச சபை, வல்வெட்டித்துறை நகரசபை, யாழ். மாநகரசபை என்பவற்றுக் குத் தலா 9 மில்லியன் ரூபா வும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்திலுள்ள 5 பிரதேச சபைகளுக்கு 46 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு 11 மில்லியனும், வவுனியா வடக்கு பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங் கள பிரதேச சபை ஆகியவற் றுக்கு தலா 8 மில்லியன் ரூபாவும், செட்டிகுளம் பிர தேச சபைக்கு 10 மில்லியன் ரூபாவும், வவுனியா நகர சபைக்கு 9 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திலுள்ள 5 பிரதேச சபைகளுக்கு 46 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு 11 மில்லியன் ரூபாவும், மன்னார் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை ஆகியவற்றுக்கு தலா 9 மில்லியன் ரூபாவும், மன்னார் நகர சபைக்கு 8 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 4 பிரதேச சபைகளுக்கு 38 மில்லியன் ரூபா ஒதுக்கப் பட் டுள்ளது. புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு 11 மில்லியன் ரூபாவும், மரைத்தியன் பற்று பிரதேச சபை, மாந்தை கிழக்கு பிரதேச சபை, துணுக்காய் பிரதேச சபை ஆகியவற்றுக்கு தலா 9 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 3 பிரதேச சபைகளுக்கு 29 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கரைச்சி மற்றும் பூநகரி பிரதேச சபைக்கு தலா 10 மில்லியன் ரூபாவும், பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு 9 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (ற-5)

### குழாய்

பொருத்தப்பட்டு அதில் 8 துவாரங்கள் இடப்பட்டு பரந்துபட்டு தண்ணீர் விசிறும் சுழல்கருவிகள் பொருத்தப்பட்டு, பக்தர்கள் நீராடுவதற்குரிய வசதிகள் செய்யப்பட்டன. அதிலிருந்து விசிறப்பட்ட தீர்த்தத்தில் பக்தர்கள் தீர்த்தமாடினர்.

இருந்தபோதும் அந்தத் தண்ணீர் குழாய்களை உடைப்பதற்கு ஒரு குழுவொன்று முயன்றது என்றும், அப்போது அங்கிருந்தவர்கள் அந்தக் குழுவை விரட்டிவிட்டனர் என்றும் கூறப்படுகின்றது.


அதேவேளை, தீர்த்தக்கேணிக்குள் பொலிஸ் சீருடையில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். தீர்த்தக் கேணிக்குள் பொலிஸாரை சீருடையுடன் கடமையில் ஈடுபடுத்தாது, பண்பாட்டு உடையுடன் ஆலயத் தொண்டர்களை நிறுத்தியிருந்தால் சிறப்பாக அமைந்திருக்கும் என்று தீர்த்தத் திருவிழாவில் கலந்து கொண்ட பக்தர்கள் கருத்துத் தெரிவித்தனர். (ற-4)

### யாழ்ப்பாணத்தில்

யடுத்து குறித்த 6 பேரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் நேற்று நீதிமன்றில் முற்படுத் தப்பட்டனர். அதன்போது குறித்த கஞ்சாவை நாம் யாழ்ப்பாணத்தி லேயே வாங்கினோம் என்று அவர்கள் கூறியுள்ளனர். அதனையடுத்தே அது தொடர்பில் உரிய விசாரணை நடத்தி கஞ்சா விற்பனை செய்பவர் களைக் கைது செய்யுமாறு நீதி மன்று பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

அவர்கள் தமத உடைமையில் கஞ்சாவை வைத்திருந்ததனை ஒப்புக்கொண்டதனையடுத்து அவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 60 ஆயி ரம் ரூபா அபராதம் நீதிமன்றால் விதிக்கப்பட்டது. (ற-4)




ஒட்டுசுட்டான் அரை ஏக்கர் வீட்டுத் திட்ட குடியிருப்பில் மழை பெய்தும்கூட தண்ணீர் பற்றாக்குறை நிலவுகிறது. இதனை அடுத்து பவுஸர் மூலம் அங்குள்ள மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. (வ-500)

## நவீன சந்தை விறா. ...தயில் மோ.சைக்கிள் நிறுத்தத் தடை

சாவகச்சேரி நகரசபை நடவடிக்கை

தென்மராட்சி, ஓக.26

சாவகச்சேரி நவீன சந்தையின் விறாந்தையில் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் தரித்து நிறுத்தப்படுவதற்கு நகர சபையினர் தடை விதித்துள்ளனர்.

மழை காலம் ஆரம்பித்துள்ளதால் பொது மக்கள் நவீன சந்தை கட்டட விறாந்தையைப் பயன்படுத்துவதற்கு வசதியாக இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நவீன சந்தையில் உள்ள வர்த்தகர்கள் மற்றும் பணியாளர்களின் நலன் கருதி மரக்கறி விற்பனைப் பிரிவில் இலவச பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் தமது சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை சந்தைக்குள் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நிலையத்தில் தரித்து நிறுத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கம் விறாந்தையில் விடப்படும் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் நகர சபையால் ஏற்றப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## முசலிப் பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம்



மன்னார்,ஓக.26

கடும் வறட்சியின் காரணமாக மன்னார், முசலிப் பிரதேச செயலாளர் பிரிவில் வசிப்போர் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்தநிலையில் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் முகமாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹினைஸ் பாரூக் முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட காயக்குளி, சீனத் நகர் மற்றும் ஹீனைஸ் நகர் ஆகிய கிராமங்களை அண்டிய சுமார் 7 கிராமங்களுக்கு குடிதண்ணீர் விநியோகத்தை ஞாயிற்றுக்கிழமை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இந்த வேலைத்திட்டம் இடர் நிவாரண சேவை அமைச்சின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நிகழ்வில் மன்னார் மாவட்ட இடர் நிவாரண முகாமைத்துவ நிலையத்தின் மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம். றியாஸ் மற்றும் அந்தக் கிராமங்களில் உள்ள கிராமிய அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (வ-56)

# காத்தான்குடியில் திறக்கப்பட்டது ஜாமிஉல் கர்னி ஜும்மா பள்ளி



காத்தான்குடி, ஓக.26

காத்தான்குடி ஜாமிஉல் கர்னி ஜும்மா பள்ளிவாசல் வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையுடன் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா ஹிறா பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் அபிவிருத்திக்கும் மனிதாபிமானத்துக்குமான சர்வதேச அமைப்பின் 12 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்தப் பள்ளிவாசல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வெளியூர்களிலிருந்து வரும் பிரயாணிகளின் நன்மை கருதி மட்டக்களப்பு கல்முனை மஞ்சன்தொடுவாய் பிரதான வீதியில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் பள்ளிவாசல் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின்போது பள்ளிவாசல் நினைவுக் கல்லை சவூதி அரேபிய அல் கஸீம் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அபூ சுலைமான் அப்துல்லாஹ் ஸாலிஹ் அல் ஹத்லூல், சவூதி அரேபிய சமூக நலன் விரும்பியும், நிதா உல் கைர் அமைப்பின் பணிப்பாளருமான அஷ்ஷெய்க் அபூ ஸாலிஹ் ஹாலித் அத்தாவூத் மற்றும் ஸ்ரீலங்கா ஹிறா பவுண்டேசன் நிறுவனத்தின் பணிப்பாளரும், பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் திரை நீக்கம் செய்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு, காத்தான்குடி ஜம்மியதுல் உலமா சபைகளின் தலைவரும், காதி நீதிபதியுமான மௌலவி எஸ்.எம்.எம். அலியார் (பலாஹி), ஸ்ரீலங்கா ஹிறா பவுண்டேஷன் நிறுவனத்தின் செயலாளர் அஷ்ஷெய்க் ஏ.எல் மும்தாஸ் மதனி, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக், காத்தான்குடி நகர சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம்.அஸ்பர், சமூக சேவையாளர் ஹக் ஹாஜியார், காத்தான்குடி நகரசபை உறுப்பினர் அலி சப்ரி, முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பரீட்முன்னாள் காத்தான்குடி நகர சபையின் தவிசாளர் மர்சூக் அஹமட் லெப்பை மற்றும் உலமாக்கள், ஊர் பிரமுகர்கள், முக்கியஸ்தர்கள் உட்பட பெரும் திரளான பொது மக்கள் கலந்துகொண்டனர். (ஓ-10)

# தண்ணீர் பெற வசதியாக கொள்கலன்கள் கையளிப்பு

மட்டக்களப்பு, ஓக.26

மட்டக்களப்பு மாவட்டத்தில் பவுஸர்கள் மூலமாக விநியோகிக்கப்படும் நீரை மக்கள் பெற்றுக் கொள்வதற்கு நீர்சேகரிக்கும் கொள்கலன்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை, கிரான், கோரளைப்பற்று மத்தி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளி லுள்ள புனானை பஞ்ச மகா விகாரை, மயிலந்தன்னை சன சமூக நிலையம், ஜயந்தி யாய பல் தேவைக் கட்டடம், ரிதிதென்ன விவசாய அமைப்புக்களின் காரியாலயம் போன்ற இடங்களில் இடம்பெற்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் இந்தக் கொள் கலன்கள் மட்டக்களப்பில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசங் களில் நீர்த்தாங்கிகளின் ஊடாக விநியோகிக்கப்படும் நீரை மக்கள் சிரமம் இல்லாமல் பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட்டுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 10 ஆயிரம் குடும்பங்களுக்கு நீர் சேகரிக்கும் கொள்கலன்கள் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

மட்டு. மாவட்டத்தில் 2,205 குடும்பங்களுக்கு நீர் சேக ரிக்கும் கொள்கலன் ஒரு குடும்பத்துக்கு இரண்டு வீதம் வழங்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலை வரும், பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சருமான எம்.எல். ஏ.எம்.ஹிஸ் புல்லாஹ் மேற் படி கொள்கலன்களைப் பொது மக்களுக்கு வழங்கினார். (ஓ-10)

விநாயகர் துணை

விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்கலகரமான ஜய வருஷம் ஆவணி மாதம் 11ஆம் நாள் (27.08.2014) புதன்கிழமை முற்பகல் 10.55 மணிமுதல் 11.55 மணிவரையுள்ள மிதுன லக்கினமும், உத்தர நட்சத்திரமும், அமிர்த யோகமும், துதியை திதியும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

மாதகல்
காசிப ஹோத்திரம்
**சிவஸ்ரீ.க.செல்லப்பாக் குருக்கள்**
தம்பதியரின் பௌத்திரியும்
**சிவஸ்ரீ.செ.நகுலேஸ்வரகுருக்கள்**
தம்பதிகளின் ஏக குமாரியுமாகிய
சௌபாக்கியவதி
**கஜேந்தினியை**

மீசாலை
பாரத்வாஜ ஹோத்திரம்
**சிவஸ்ரீ.சி.யோகீஸ்வரக் குருக்கள்**
தம்பதியரின் பௌத்திரனும்
**சிவஸ்ரீ.யோ.திவாகரசர்மா**
தம்பதியரின் ஜேஷ்ட குமாரனுமாகிய
சிரஞ்சீவி
**றஜீப சர்மாவிற்கு**

கன்னிகாதான, மாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்வதற்கு மீசாலை இலுவம் செல்வவிநாயகர் திருவருளும் மாதகல் பாணாகவெட்டி புவனேஸ்வரி அம்மன் திருவருளினாலும் நிகழ்த்துவதற்குப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பாதல் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இடம்: மாதகல் பாணாகவெட்டி புவனேஸ்வரி அம்மன் ஆலய மண்டபம்**

**சமாவர்த்தனம்: ஆவணி 11ஆம் நாள் (27.08.2014) புதன்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.**

**வதூவர கிரஹப் பிரவேசம் : ஆவணி 11ஆம் நாள் (27.08.2014) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.**

**வரவேற்புபசாரம் : ஆவணி 14ஆம் நாள் (30.08.2014) சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு மணமகள் இல்லத்தில் நடைபெறும்.**

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

**சிவஸ்ரீ.செ.நகுலேஸ்வரகுருக்கள்**
**ஸ்ரீமதி யாழரசி தம்பதிகள்**
'முருகனகம்' மாதகல் கிழக்கு,
மாதகல்

**சிவஸ்ரீ.யோ.திவாகரசர்மா**
**ஸ்ரீமதி.ரஞ்சிதா தம்பதிகள்**
'அன்னை இல்லம்' சாவகச்சேரி வடக்கு
மீசாலை.

வரவேற்பாளர்கள்

**ந.கஜநேச குருக்கள் தம்பதிகள்**
**ந.கஜப்பிரிய சர்மா**

(இரு வீட்டார் அழைப்பு)

**தி.பிரணவ சர்மா,**
**தி.துஷ்யந்த சர்மா,**
**தி.கஸ்தூரி**

(51193)(10.6)

# மாகாண சபையில் 20 பேர் மட்டுமே நிதி ஒதுக்கீடுத் திட்டங்கள் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 26
வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் 20 பேர் மாத்திரமே பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீடுத் திட்டங்களைச் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண சபையினால் ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினருக்கும் தலா 4 மில்லியன் ரூபாவும், அமைச்சர்களுக்கு தலா 5 மில்லியனும், முதலமைச்சருக்கு 6 மில்லியன் ரூபாவும் பிரமாண அடிப்படையிலான கொடை ஒதுக்கீடாக வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு ஒவ்வொரு உறுப்பினரும், வேலைத் திட்டங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட பின், சம்பந்தப்பட்ட திணைக்களங்களினூடாக நிதி விடுவிக்கப்படும். இந்த ஆண்டுக்குரிய நிதிகள் யாவும் இந்த ஆண்டே பயன்படுத்தப்படவேண்டும்.

இந்த நிலையில் 38 பேரைக் கொண்ட வடக்கு மாகாண சபையில் 20 பேர் மாத்திரமே சமர்ப்பித்துள்ளனர். எஞ்சிய 18 பேரும் இன்னமும் சமர்ப்பிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆளுங்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களான, முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், கல்வி அமைச்சர் த.குருகுலராசா, சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன், அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், மாகாணசபை உறுப்பினர்களான ம.தியாகராசா, இ.இந்திரராஜா, ப.அரியரத்தினம், த.சித்தார்த்தன், அ.பரஞ்சோதி, அயூப் அஸ்மின், ஜி.ரி.லிங்கநாதன், வே.சிவயோகன், சு.பசுபதிப்பிள்ளை, சி.சிவமோகன் ஆகியோரும், எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில், மாகாணசபை உறுப்பினர்களான சி.தவராசா, ஆராய்ச்சிலகே தொன் தர்மபாலா செனவிரத்ன, அன்னகமகே ஜெயதிலக, ஹபீபு முஹம்மது றயீஸ் ஆகியோரும் திட்டங்களைச் சமர்ப்பித்துள்ளனர். (த-5)



*நல்லூர் கந்தன் ஆலயத் தேர்த் திருவிழாவான நேற்று முன்தினம் யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் அன்னதானம் வழங்கும் நிகழ்வு ஆலயமுன்றலில் இடம்பெற்றது. ஆலயத்தின் நான்கு பிரதான வீதிகளிலும் தானசாலைகள் அமைக்கப்பட்டுப் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. (த-86)*

# புலம்பெயர் தமிழர்களிடம் பணமேதும் பெறவில்லை

*அனாமதேய சுவரொட்டி குறித்து விந்தன் கனகரட்ணம் விளக்கம்*

புலம்பெயர் தமிழர்களிடம் பணம் எதையும் தான் வாங்கவில்லை என்று தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம், வேண்டுமென்று அவதூறு பரப்புவதற்காகவே இனந்தெரியாத சிலர், தான் மோசடி செய்துள்ளதாகத் தெரிவித்து அநாமதேயத் துண்டுப் பிரசுரம் ஒட்டியுள்ளதாகத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம், புலம்பெயர் தமிழர்களிடம், இங்குள்ள வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக 35 லட்சம் ரூபாயை வாங்கிவிட்டு ஏமாற்றியதாகத் தெரிவித்து யாழ்.நகரப் பகுதியிலும், தீவகத்திலும் இனந்தெரியாதோரினால் சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்தன.

வறிய மாணவர்களின் பெற்றோர் எனக் குறிப்பிட்டே இந்தச் சுவரொட்டிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஒட்டப்பட்டிருந்தன.

மேற்படி குற்றச்சாட்டுக்களை வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் மறுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், நான் கடந்த மாதம் புலம்பெயர் தமிழர்கள் வசிக்கும் சுவிஸ், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்றிருந்தேன். இதன்போது அங்குள்ள மாணவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர்களிடம் எமது வடபகுதி மாணவர்களின் வறுமை நிலையை எடுத்துக் கூறியிருந்தேன்.

இதன்போது அவர்கள், வறுமை நிலையிலுள்ள மாணவர்களின் விபரங்களை வழங்கினால், தம்மால் முடிந்த உதவிகளைச் செய்வதாகக் குறிப்பிட்டனர். வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினூடாக குறித்த விபரங்களைப் பெற முடியும் என்றும், அவர்களுடன் இணைந்து இதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவித்திருந்தேன்.

இது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சருக்கும் நான் தெரியப்படுத்தியிருந்தேன். அவரும் இதனை நடைமுறைப்படுத்தலாம் என்றதுடன் இது தொடர்பில் உத்தியோகபூர்வக் கடிதம் ஒன்றைத் தருமாறு கோரியிருந்தார்.

இது மட்டுமல்லாமல் என்னுடைய நண்பன் ஒருவன் மூலம், கிடைத்த நன்கொடையினூடாக தீவகப் பகுதி விளையாட்டுக் கழகங்களுக்கும், சில மருத்துவமனைகளுக்கும் நிதி, பொருள்கள் வழங்கியுள்ளேன்.

இவ்வாறானதொரு நிலையில் கடந்த 23 ஆம் திகதி இரவு இலக்கத் தகடு அற்ற மோட்டார் சைக்கிளில் வந்த கொச்சைத் தமிழ் பேசியவர்களே எனக்கு எதிரான சுவரொட்டிகளை யாழ்.நகரில் ஒட்டியுள்ளனர். வடபகுதியில் கல்வியையும், கலாசாரத்தையும் சீரழித்து விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பியர் ரின் வழங்கி, மாணவர்களுக்கு போதைவஸ்துகளைத் திணித்து சமூகத்தைச் சீரழிக்கும் நயவஞ்சக் கூட்டத்தினரும், அவர்களுடன் கைக்கூலிகளாக இருக்கும் துரோக கூட்டங்களுமே மக்கள் சேவையைப் பொறுக்க முடியாமல் இவ்வாறு அநாமதேய சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் எனது வீடு உடைக்கப்பட்டது. வீட்டின் மீது மது போத்தல்களால் எறிந்து தாக்குதல் நடத்தினர். கழிவு ஒயில் பூசினர். துப்பாக்கியைக் கொண்டு என்னை ஒருமுறை சுட முயன்றனர். மற்றுமொரு முறை துப்பாக்கி முனையில் மிரட்டினர்.

யாழ்.மாநகரசபை உறுப்பினராக நான் இருந்தபோது, மாநகரசபையினுள் துப்பாக்கியுடன் ஆறுபேர் நுழைந்து என்னை மிரட்டினர். மாநகர சபையின் பொலிஸ் பாதுகாப்பையும் மீறி, மாநகரசபையின் மாநாட்டு மண்டபத்தினுள் எனக்கு எதிராக அநாமதேயத் துண்டுப் பிரசுரம் கூட வைத்தனர். இவ்வாறு செய்தவர்களே மீண்டும் உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர் -என்றார். (த-5)



# காவடிகளால் நிறைந்தது நல்லூர்

யாழ்ப்பாணம், ஓக. 26
நல்லூர்க் கந்தன் தீர்த்தத் திருவிழாவான நேற்று நூற்றுக்கும் மேற்பட்ட தூக்குக் காவடிகள் ஆலயத்தை வந்தடைந்தமையால் ஆலயச் சூழல் நேற்றுக் காவடிகளால் நிறைந்தது.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து லட்சக்கணக்கான மக்கள் நேற்றைய தீர்த்த உற்சவத்தில் கலந்து கொண்டனர்.

அதிகாலை முதல் ஆலயத்தில் பக்தர்கள் கூடியமையால் அங்கு பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது. கந்தன் தீர்த்தமாடும் கேணியில் அதிக எண்ணிக்கையான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். அதிக அளவு காவடிகள் பிற்பகல் வரை ஆலயத்தை வந்தடைந்த வண்ணம் இருந்தன. பல பகுதிகளில் இருந்தும் பல்வேறு வகையான தூக்குக் காவடிகள் நேற்றுத் தீர்த்த உற்சவத்தில் பங்கேற்றமையால் ஆலயச் சூழல் முழுவதும் காவடி மயமாகக் காணப்பட்டது.

சுவாமி தீர்த்தமாடிய பின்னர் கேணிக்குள் இறங்குவதற்கு எவரும் அனுமதிக்கப்படவில்லை. (த-17-21)

# முதலமைச்சரின் செயலாளர் பொறுப்பற்று செயற்படுகிறார்

*பிரதம செயலாளர் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், ஓக. 26
முதலமைச்சர் அமைச்சின் செயலாளரின் பொறுப்பற்ற தன்மையே, முதலமைச்சர் அலுவலகப் பாதுகாப்பு, சுத்திகரிப்புச் சேவைகள் நிறுத்தப்பட்டமைக்குக் காரணம் என்று வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர். விஜயலட்சுமி தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சு, அதனூடான திணைக்களங்களுக்கான பாதுகாப்பு, சுத்திகரிப்புச் சேவைகள் கடந்த 16 ஆம் திகதியிலிருந்து நிறுத்தப்பட்டிருந் தன.

இது தொடர்பில் முதலமைச்சர் செயலகத்தினால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில், மேற்படி சேவைகள் நிறுத்தப்பட்டமை பிரதம செயலாளரின் தன்னிச்சையான நடவடிக்கையே காரணம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பதிலளித்துள்ள பிரதம செயலாளர், முதலமைச்சரின் அமைச்சு தமது செயலாளரின் தவறினை மூடி மறைப்பதற்காக வெளியிட்ட செய்திக் குறிப்பில் எந்த உண்மையும் இல்லை. மேலும் அந்த அமைச்சின் செயலாளரின் பொறுப்பற்ற தன்மையே இந்தச் சேவை நிறுத்தப்பட்டதற்குக் காரணம் என்றும் தெரிவித்துள்ளார். (த-5)


# வவுனியாவில் கண்காட்சி

வவுனியா, ஓக 26
வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் கண்காட்சியும் விற்பனையும் இன்று செவ்வாய்க்கிழமை வவுனியா உள்வட்ட வீதியில் அமைந்துள்ள கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் பல நோக்குப் பயிற்சி நிலையத்தில் முற்பகல் 10 மணிக்கு மாவட்ட உத்தியோகத்தர் திருமதி தே.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர பிரதம விருந்தினராகவும், மீன்பிடி .போக்குவரத்து வர்த்தக வாணிப கிராமிய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன், வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் ஜே.ஜே. பெலிசியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் வவுனியா மாவட்ட பிரதேச செயலாளர் கா.உதயராசா, வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் கா.பரந்தாமன், செட்டிகுள பிரதேச செயலாளர் நா.கமலதாசன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-402)

## மரண அறிவித்தல்

### விஜயரட்ணம் சுதாகரன் (சுதா)



சுன்னாகம் ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயரட்ணம் சுதாகரன் (சுதா - யாழ்.மாநகரசபை ஊழியர்) 23.08.2014 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் விஜயரட்ணம் - இராஜேஸ்வரி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், ரவீந்திரன் - கோமதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், சுஜந்தினியின் அன்புக் கணவரும், அபி நயா, சர்மி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்ஜினி (சுவிஸ்), தர்ஜினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயசீலன் (சுவிஸ்), ஜெயந்தன் ஆகியோரின் மைத்துனரும், ஈழவன், ஈழநிலா (சுவிஸ்), ஹரிகரன், ஹர்ணி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.08.2014) செவ்வாய்க்கிழமை சுன்னாகம் ஐயனார் கோயிலடியில் உள்ள அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (27.08.2014) புதன்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரின் வதிவிடமாகிய மானிப்பாய் இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி,
சுன்னாகம்.
(51239)
(12.3.6)

தகவல்:
விஜயரட்ணம் ( தந்தை)

SHAMROCK
ஈச்சமோட்டை
A/L
2015, 2016
★ பொருளியல்
P. பிரதாப் (B.B.A)
★ தமிழ்
S. சிவா (M.A)
(51192)
(10)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.